www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 10 | ஒக்டோபர் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 62

# சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலுக்குள் சமாதான முயற்சி இறுக்கப்படுகிறது

சமாதான முயற்சிகளை' முன்னெடுப்பதாகக் காட்டிக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து இராணுவ உதவிகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்து கொள்ளும் முகமாக சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலில் **(International Safety Network)** இலங்கையை முற்றாக இணைத்துக் கொள்ளும் முயற்சிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ ஈடுபட்டிருப்பதாக அறிய முடிகிறது. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தில் உரையாற்றுவதற்கு அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் பல வெளிநாட்டுத் தலைவர்களுடனும் 'சமாதான முயற்சிகளுக்கு' மத்தியில் இலங்கை அரசின் பாதுகாப்பை பலப்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச அமைதிப்படையினர், என்ற பேரில் ஆயுதமில்லாது, வடக்கு கிழக்கில் தங்கியிருந்து நடமாடுவதற்கும், சமாதான, முயற்சிகளை கண்காணிக்கவும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சில இராணுவ அதிகாரிகள் இங்கு வந்துள்ளனர். இது ஐக்கிய நாடுகள் சமாதானப்படைகளோ, வேறு நாட்டு படைகளோ இங்கு வருவதற்கான ஆரம்பமாக இருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அமெரிக்க, பிரிட்டிஷ், இந்திய இஸ்ரேலிய, பாகிஸ்தானிய இராணுவ முக்கியத்தர்களும், ஆலோசகர்களும் இங்கு வந்து சென்றனர். சில வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களும் பயிற்சி அளிப்போரும் இங்கு நிலைகொண்டுள்ளனர்.

C.I.A, RAW. F.B.I, MOZART ஆகிய உளவு ஸ்தாபனங்களின் உறுப்பினர்கள் கொழும்பில் நிலைகொண்டு சமாதான முயற்சிகள் பற்றியும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நகர்வுகள் பற்றியும் தகவல்கள்களை சேகரித்து அவ்வப்போது அறிக்கைகளை சமர்ப்பித்து விருகின்றனர். சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலில் ஒரு நிகழ்ச்சி நிரலாகவே இது இடம்பெற்றுள்ளதாக தெரிகிறது.

ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பிரதமர் கலந்து கொள்வதுடன் இலங்கையின் சமாதான முயற்சிகளில் பாரிய திருப்பு முனைக்ளுக்கு இடமிருப்பதாக புதிய பூமியில் முன்பு செய்தி வெளியிட்டிருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா பொதுச்சபை கூட்டத்தில் பிரதமர் ரணில் கலந்து கொள்ளுவதற்கும், அப்பயணத்தின் போது பல வெளிநாட்டுத் தலைவர்களை சந்திப்பதற்குமான ஏற்பாடுகளை அமெரிக்க அரசுடன் மிகவும் நெருக்கமாக இருக்கும் அமைச்சர் மிலிந்த மொரகொட மேற்கொண்டிருந்தார் என்பதையும் தெரிவித்திருந்தோம்.

சமாதான முயற்சிகள் முறிவடைந்து மீண்டும் மோதல் தொடங்குமாயின் வெளிநாடுகளின் உதவியுடனும் தலையீட்டுடனும் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுவது தான் சமாதான முயற்சியில் ஏற்படவுள்ள பல திருப்பு முனைகளின் ஆரம்பமாக கொள்ளப் படலாம். அதாவது சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலின் கீழ் இலங்கை அரசாங்கத்தை பாதுகாத்துக் கொள்வதாகும். வெளிநாடுகளின் அழுத்தங்களினால் விடுதலை புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வந்தது மட்டுமின்றி புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை முடக்கு வதும் அவ்வியக்கத்தின் தாக்குதலிருந்து இலங்கை அரசாங் கத்தை பாதுகாத்தல் என்பனவும் சமாதான முயற்சிகளில் உள்ளடங்கியிருக்க வேண்டும் என்பதே பிரதமர் ரணிலின் திட்டமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. அதற்காகவே அவர் வெளிநாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையின் பாதுகாப்பை உறுதி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார் என்றும் கூறப்படுகிது.

பிரதமர் ரணில் நம்பிக்கை வைத்திருக்கும் சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலினால் ஏற்கனவே குறிப்பிட்ட அளவிற்கு புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக முடக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு விவகாரங்களில் நிபுணத்துவமுள்ள ஒருவர் புதிய பூமிக்கு தெரிவித்தார்.

இத்துடன் இலங்கையில் இனவாதிகள் சமாதான முயற்சிகளுக்கு எதிராக முன்னெடுக்கும் பிரசாரங்களை முறியடிக்கக் கூடிய அளவிற்கு அரசாங்கம் பிரசாரங்களை முன்னெடுப் பதில் கவனம் செலுத்தவில்லை.

எனவே ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளின் மறுபக்கம்

தொடர்ச்சி 12ம் பக்கம்..

## புலிகளுக்கு வலை விரிப்பு!

அண்மையில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடு அபிவிருத்தி திட்டம் ஆகிய நான்கு நிறுவனங்களின் பிரதிநிதிகள் புலிகள் இயக்கத்தின் தலைமையைச் சந்தித்துவிரிவான பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளனர். கிளிநொச்சியில் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கெண்டனர். இப்பேச்சுவார்த்தையில் மீளக்குடியமர்வு புனரமைப்பு, புனர்வாழ்வு, மனிதாபிமானத் தேவைகள் மறுசீரமைப்பு, இயல்பு வாழ்க்கை என்பன பற்றி விரிவாகப் பேசப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இந் நிதி நிறுவனங்கள் சாதாரணமானவை அல்ல என்பதை விளங்கிக் கொண்டால் அவற்றின் பயங்கர ஏகாதிபத்தியப் பின்னணியையும் அதன் சமகாலப் போக்கின் ஆபத்தையும் கண்டு கொள்ளலாம். உதவி என்ற பெயரில் உலக நாடுகளில் மேற்படி நிறுவனங்கள் எவ்வாறு அமெரிக்கா தலைமையிலான உலக மயமாதல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. என்பது பகிரங்கமானதாகும் அத்துடன் தேசிய விடுதலை இயக்கங்களை தமது நிதிப் பலத்தால் மழுங்கடித்து அமுக்குவதற்கு மறைமுகமாகச் செயலில் ஈடுபட்டும் வருகின்றன என்பது உலக நாடுகளில் பெற்ற அனுபவமாகவே காணப்படுகின்றது. எனவே இவ் ராட்சத நிதி நிறுவனங்கள் வன்னியில் பேச்சுவாாத்தை நடாத்திருப்பது புலிகளுக்கான ஒரு வலை விரிக்கும் உள் நோக்கம் கொண்டதா என்னும் நியாயமான கேள்வியை எழுப்பியுள்ளது.

# வேலை நிறுத்தப் போராட்டங்கள் தொழிலாளர்களின் அடிப்படை உரிமை

சுதாகார சேவை, ரயில்வே சேவை போன்ற பலதுறை ஊழியர்களும் அவர்களுக்கான சம்பள உயர்வு உட்பட சில வசதிகளை கேட்டு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரு கின்றனர். பொதுத்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போதும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவர் என்பதிலும் வேலை நிறுத்தப் போராட்டங்களின் ஊடாக சிலர் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதிலும் உண்மை இருந்த போதும் தொழிலாளர்களின் கோரிக்கையிலும், போராட்டத்திலும் இருக்கும் நியாயத்தை அரசாங்கம் நிராகரிக்க முடியாது.

ஏனெனில் பொதுத்துறை ஊழியர்களுக்கு மட்டுமன்றி இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் கொடுத்த வாக்குறுதிகளில் மிகவும் அடிப்படையானவற்றைக் கூட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது. அதிகரித்துக் கொண்டு செல்லும் வாழ்க்கைச் செலவிற்கு முகம் கொடுக்கக்கூடிய சம்பள உயர்வு இல்லாவிடின் மக்கள் சீவிப்பது கடினம். சம்பள உயர்வு போன்ற அடிப்படை கோரிக்கைகளையும் வழங்காது காலத்தை கடத்துவதையும் அப்போராட்டங்களை முறியடிப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அக்கோரிக்கைகளை ஏற்று வழங்க முடியாத அரசாங்கம் வேலை நிறுத்தப் போராட்டங்கள் அரசாங்கத்தை ஆட்சி கவிழ்க்கும் நோக்கமுடையன என்றும், சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கமுடையன என்றும் கூறுவதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும். தென்னிலங்கையில் தலைமையகத்தை கொண்டு இயங்கும் இடதுசாரி தொழிற் சங்கங்கள் அனைத்தும் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை வலியுறுத்துகின்றன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்கான போராட்டங்கள் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவை அல்ல என்பதையும் பகிரங்கமாகவே அறிவித்து வருகின்றன. வடக்கு கிழக்கு ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொது ஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. என்பனவும் ஏனைய இனவாத தொழிற் சங்க அமைப்புகளும் சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கத்தை கொண்டிருப்பதால் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் குறிக்கோளுடன் செயற்படலாம்.

அனைத்து தொழிலாளர்களும் சமாதான முயற்சிகளை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கவில்லை. அதனால் அவர்களின் போராட்டம் நியாயமானதாகும். அவர்களின் கோரிக்கைகள் வழங்கப்படவும் வேண்டும்.

இந்நாட்டின் எல்லா அரசாங்கங்களும் வேலை நிறுத்தப் போராட்டங்களை முறியடிக்க அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது வழமை. அத்துடன் வேலை நிறுத்தங்கள் யாவும் அரசியல் நோக்கம் கொண்டவை என பிரகடனப்படுத்துவதும், அரசாங்கத்தை பதவி கவிழ்க்கும் நோக்கம் கொண்டவை எனக் கூறுவதும் வழமையாகும்.

சமாதான முயற்சிகளை குழப்பக்கூடாது என்றும் அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் கூறிக்கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தொழிலாளர்களின் உரிமைகளை மறுப்பதையும், அவர்களின் போராட்டங்களை அடக்குவதையும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதையும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

ஜனநாயக மறுப்பும், தொழிலாளர்கள் உரிமைகள் மறுப்பும் சமாதானத்திற்கான நிபந்தனைகளாக ஏற்றுக் கொள்ள முடியாது. அதே வேளை தொழிலாளர்கள் ஊழியர்களின் சம்பள உயர்வு உட்பட பல உரிமைகளை மறுத்துவரும் அரசாங்கம் பல் தேசியக் கம்பனிகளுக்கும் பெரும் முதலாளிகளுக்கும் வசதி வாய்ப்பு பெற்றவர்களுக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் உதவிகளும் வழங்கி வருகின்றன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒரு தொழிலாளர் விரோத மக்கள் விரோத அரசாங்கம் என்பதை நிரூபித்தே வருகிறது.

# உணவு மோசடியை எதிர்த்து ஸ்ரீ பாத மாணவர்கள் போராட்டம்

தமது உணவுக்கான நிதியில் ஊழலும் மோசடியும் இடம் பெற்றதை எதிர்த்து ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி மாணவர்கள மதியபோசன பகிஷ்கரிப்பை நடாத்தி வருகின்றனர். இவ் ஊழல் பெருச்சாளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முறையான விசாரணைக்கு உட்படுத்தி அவர்களுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பதே ஆசிரிய பயிலுனர்களின் கோரிக்கையாகும். இதனையிட்டு இவர்கள் சகலரினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றனர். தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆனால் மலையகத்தின் தலைவர்கள் எனப்படும் இரண்டு அமைச்சர்கள், பா.உறுப்பினர்கள் எல்லோரும் மௌனம் காத்து வருகின்றானர் அதன் அர்த்தம் வீணான பிரச்சினைகளில் மாட்டிக் கொண்டு தமது பதவிகள் சுகங்களுக்கு விக்கினம் தேடக் கூடாது என்பது தான். ஆனால் தொழிளார்கள் இளைஞர்கள் .யுவதிகள் .சமூக அக்கறையாளர்கள் மாணவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அதனால் போராட்டம் அடுத்த கட்டத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# பேரினவாத பாதயாத்திரை நடாத்தும் ஜே.வி.பி. ஒரு இடதுசாரிக் கட்சி அல்ல!

சமாதான முயற்சிகளை எதிர்த்து ஜே.வி.பி பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கூட்டங்கள் போஸ்டர் இயக்கங்கள் என்று தொடங்கி தற்போது பாதை யாத்திரைகளை நடத்தி வருகிறது. காலியிலிருந்து கொழும்புக்கும், கண்டியிலிருந்து கொழும்பிற்கும் பாதயாத்திரைகளை நடத்தியுள்ளது. அதில் அதிகமாக இளைஞர்களை அணிதிரட்டியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு நிர்வாக எவ்விதமான அதிகாரப்பகிர்வும் வழங்கப்படக் கூடாது, இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தக் கூடாது. நோர்வே தலையிடக் கூடாது போன்ற சுலோகங்களை முன்வைத்து சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்கள மக்களை அணிதிரட்டும் நோக்கில் நாட்டுப் பற்றுடைய தேசபக்த இயக்கம் என்ற பெயரில் போராட்ட இயக்கங்களை ஜே.வி.பி முன்னெடுத்து விடுகிறது.

இது அடிப்படையில் தேசிய இனங்களின் உரிமைகளை மறுக்கும் பேரினவாத நிலைப்பாடாகும்.

சமாதான முயற்சிகள் என்ற அடிப்படையில் நாடு அந்நிய தேசங்களுக்கு விற்கப் படுகிறது. என ஜே.வி.பி குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் ஏகாதிபத்திய உலக மயமாதலை ஏற்றுக் கொண்ட சுதந்திரக்கட்சியுடன் இணைந்து நாட்டை ஆள முயற்சிக்கும் போது நாடு விற்கப் படுவது பற்றி அலட்டிக் கொள்வதாக இல்லை.

உண்மையான இலங்கை நாட்டை அந்நிய தேசங்களின் சுரண்டலிருந்து பாதுகாப்பதற்கு அணைத்து தேசிய இனங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

அடக்கப்படும் தேசிய இனங்களின் உரிமைகளை மறுத்து அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு இலங்கை தேசத்தை பாதுகாக்கும் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது.

ஜே.வி.பி ஊர்வலத்தில் பாரம்பரிய தமிழ் உடை அணிந்து ஒருவரும் பர்தா அணிந்து ஒரு முஸ்லிம் பெண்ணும் செல்வதால் ஜே.வி.பியின் நிலைப்பாட்டை தமிழ் முஸ்லிம் மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்பதாகாது. ஜே.வி.பி தனது பலத்தை விஸ்தரித்த அரசியல் அதிகாரத்தில் பங்கெடுத்தக் கொள்வதற்கான நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது. அது சிங்கள தேசியவாத நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பேரினவாத நடவடிக்கைகளை மிகவும் இலகுவாகச் செய்து கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.padippakam.com



# மலையக எம்.பி.மார் இருவர் உளறல்

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் எம் பியான வீ. புத்திர சிகாமணியும் பதுளை மாவட்ட ஐ.தே. கட்சி எம்.பி அடிக்கடி சக்தி தொலைக் காட்சியின் மின்னல் என்ற நிகழ்ச்சியில் அடிக்கடி தோன்று கின்றனர். புத்திர சிகாமணி கடந்த பொதுத் தேர்தல்வரை ஐ.தே.கட்சியில் இருந்தவர்.

இவர்கள் இருவரும் மலையகத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வில்லை என்று தொடர்ந்து அந்நிகழ்ச்சி களின் ஊடாக கூறிக்கொண்டு வருகின்றனர். அதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் இரண்டு பெரிய கட்சிகளுக்கும் அக்கறை இல்லா தது போன்று மலையகத்தமிழ் மக்களு டைய பிரச்சினைகளை தீர்ப்பதிலும் இரு கட்சிகளுக்கும் அக்கறை இல்லை என்று புத்திரசிகாமணி கூறிவருகிறார்.

இவை யாருக்கு கூறப்படுகின்றன எதற்காக கூறப்படுகின்றன என்று அந் நிகழ்ச்சியை பார்ப்பவர்கள் கேட் கின்றனர். மக்களிடம் வாக்கு கேட் கின்றபோது இரண்டு கட்சிகளையும் நியாயப்படுத்தியே வாக்கு கேட்டனர். நேற்றுவரை ஐ.தே.கட்சி எல்லா வற்றையும் செய்யும் என்று கூறிய புத்திர சிகாமணி இன்று பொது ஜனஐக்கிய முன்னணியில் எம்.பியாக இருக்கிறார். வேலாயுதம் இன்றுவரை ஐ.தே.கட்சியில் இருந்து கொண்டு ஐ.தே.கட்சி எல்லாவற்றையும் தீர்த்து வைக்கும் என்று கூறிவருகிறார்.

ஆனால் மேற்படி மின்னல் நிகழ்ச்சியில் பேசும்போது மலையகத்தமிழ் மக்க ளுடன் மக்களால் இருப்பதாக காட்டிக் கொண்டு இரண்டு கட்சிகளுமே எதனையும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். அதே போன்று புத்திஜீவிகளின் மத்தியில் பேசும்போது அதே ஒப்பாரியையே வைக்கின்றனராம்.

அப்படியாயின் ஏன் அந்தக் கட்சிகளை நியப்படுத்தி பேசி மலையகத்தமிழ் மக்களின் வாக்குகளை அக்கட்சி களுக்கு கொடுக்கின்றனர். அவர்கள் அங்கம் வகிக்கும் கட்சிகள் அவர்களின் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வில்லை என்றால் ஏன் அக்கட்சிகளின் தொடர்ந்து அங்கம் வகித்து வருகின்றனர்.

மலையகத்தமிழ் மக்கள் அக்கட்சிகளால் இரட்சிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையினால் தாங்கள் தொடர்ந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலா?

# வடபுலத்து கல்வித்துறையும் சாதிய வக்கிரமும்

வடபுலத்து கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகம் வரை சாதிய வக்கிரம் நிறைந்து காணப்படுகின்றது. வெளிப் பார்வைக்கு யாவும் பிரச்சினையின்றி இருப்பது போலவே தென்படும். ஆனால் உள் இறங்கி நோக்கும்போதுதான் சாதியப் பார்வையின் அசிங்கத்தைக் கண்டு கொள்ளலாம்.மாணவர்களை அவர்களது சாதியை அறிந்து கொள்வதில் முனைப்பாக நிற்கும் சில ஆசிரியர்கள் சாதி குறைந்தவர்கள் எனக் கொள்ளப்படும் மாணவர்கள் மீது பாகுபாடு புறக்கணிப்பு என்பனவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் நடை முறைப்படுத்துகின்றனர். ஒரு ஆசிரியர் பாடசாலை ஒன்றிற்கு மாற்றலாகி வந்தால் உடனேயே அவரது ஊர்பகுதி, குறிச்சி அறியப்பட்டு அச்சொட்டாக அவரது சாதி அடையாளம் முத்திரை குத்தப்பட்டு விடும். பின்பு அது மாணவர்கள் வரை பரப்பப்படும். பாட நேரங்கள் ஒதுக்குவதில், வகுப்புகள் வழங்குவதில், நிர்வாக வேலைகளுக்கு உதவுவதில், மாணவர்களது திறன் போட்டிகளுக்கு பொறுப்பு வழங்குவதில் எல்லாம் சாதியப் பார்வை முன்நிற் கின்றது.

மேலும் நியமனம், பதவி உயர்வு, மாற்றம், தரத்திற்குரிய பதவி வழங்குதல் போன்றவற்றில் இறுதித் தீர்மானம் சாதியைக் கொண்டே எடுக்கப் படுகிறது. குறைந்த சாதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் என முத்திரை குத்தப்படு வோரின் வீட்டு வைபவங்களில் மனப்பூர்வமாக உயர் சாதி ஆசிரியர்கள் என்போர் கலந்து கொள்வதில்லை. அரைகுறை மனதுடன் கலந்து கொண்டாலும் அங்கு உணவு உண்பதில் மிகக் கவனமாகவே நடந்து தவிர்த்துக் கொள்வார்கள். அண்மையில் வலிகாமம் வலயத்தில் உள்ள ஒரு பெரிய பாடசாலையின் ஆசிரியை ஒருவருக்கு திருமணம் நடந்தது. அந்த ஆசிரியை அப்பாடசாலையின் கற்பித்த லிலும் நிர்வாகத்திற்கு உதவுவதிலும் முன்நின்றவர். நன்கு வேலை வாங்கப் படுபவர். பாடசாலையின் உயர்வுக்கு உழைத்து வருபவர். ஆனால் அவரது திருமணத்திற்கு சென்ற சக ஆசிரியர்கள், அதிபர், உபஅதிபர் என்போர் மிகக் கெட்டித்தனமாகத் திருமணச் சாப்பாட்டைத் தவிர்த்து தண்ணீர் வெந்நீர் எடுக்காது முகம் காட்டி அவசர அவசரமாகத் திரும்பிய சம்பவம் நடைபெற்றுள்ளது. இது போன்ற சாதிய வக்கிரச் சம்பவங்கள் வடபுலத்தின் கல்வித்துறையிலே அவ்வப்போது வெளிவந்த வண்ணமே உள்ளன.

மேலும் கல்வி வலயங்களின் நிர்வாக மட்டத்திலும் சாதியப் பார்வையே மேலோங்கி நிற்பதாக கல்வி அதிகாரிகள் சிலர் சுட்டிக்காட்டி வருகின்றனர். பாடசாலைகளுக்கு அதிபர் நியமனங்கள், பதவி உயர்வு வழங்கல், இடமாற்றம் போன்றவற்றில் இறுதி முடிவு அல்லது தீர்மானம் எடுக்கும்போது சாதிய நோக்கு மேலதிகத் தகுதியாக உள்ளூரக் கணிக்கப்படுகிறது. இதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் பெருமான் போன்றவர்கள் ஆமோதித்து சிபாரிசும் செய்கின்றனர். வடபுலத்து சில உயர்சாதி எனப்படும் அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், படித்த கனவான் கள் என்போர் எத்தனை சத்தியம் செய்தாலும் கெட்டியான அமைப்பு முறையாக பழமையான கருத்தியலாக, சிந்தனை வழியாக முன்னெடுக்கப்படும் சாதிய யதார்த்த த்தை மறைக்கவோ மறுக்கவோ முடியாதவாறு இருந்து வருகின்றது. இதற்கு எதிராகச் சொல் லாலும் செயலாலும்தொடர்ந்து போராடு வதன் மூலமே சாதிய வக்கிரத்தை எதிர்த்து முறியடிக்க முடியும்.

# வவுனியா நகர பொதுக்காணிகள் யாருக்கு?

வவுனியா நகர பொதுக்காணிகள் யு. என்.பி அரசியல்வாதிகளுக்கு யூ என். பி அரசு தாரைவார்த்து வருகின்றது. வவுனியா நகரம் அண்மைக் காலங்களில் துரித வளர்ச்சி பெற்று வருகின்றது; ஆனால் பொது வசதிகள் குறைவு. பொது மக்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நிலம் இல்லை என்று கைவிரிக்கப்படுகிறது. வசதியான பஸ்நிலையம், சந்தை இல்லாமை பெருங்குறையாக நீண்ட காலமாக இருந்து வருகிறது.

பஸ் நிலையத்துக்கென புகையிரத நிலையத்துக்க அருகாமையில் நாலு ஏக்கர் காணி முன்பு ஒதுக்கப்பட்டது. அக்காணி முன்னாள் அமைச்சர் இராசமனோகரி புலேந்திரனின் கணவரும், யூ என். பி அமைப்பாளரு மான காலஞ்சென்ற புலேந்திரனுக்கு, கைத்தொழிற் பேட்டை அமைப்பதற்காக அன்றைய யூ என். பி அமைச்சரினால் வழங்கப்பட்டது. ஆனால் அக்காணியில் எவ்வித கைத்தொழில் முயற்சிகளும் நடைபெறவில்லை.

அங்கு அமைக்கப்பட்ட கட்டிடங்கள் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத் துக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அக்கட்டிடங்களை இவ்வருட முடிவில் பல்கலைக்கழகம் மீள ஒப்படைக்க வேண்டும்.

இக்காணி திருமதி புலேந்திரனின் குடும்பத்தினருக்கிடையில் பங்கிடப்பட்டு தனியாருக்கு விற்கப்பட்டு அதில் வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

கரப்பங்காட்டு குடியேற்ற திட்டத்துக்கு பொது வசதிகளுக்கு ஒதுக்கப்பட்ட காணி (குருமன் காட்டுச் சந்தி) முன்னாள் அமைச்சர் திருமதி புலேந்திரனின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பழைள கதையல்ல, கதை தொடருகிறது.

தற்போது புகையிரத நிலைய வீதியில் மணிக்கூட்டுச் சந்திக்கு அருகில் பழைய நீர்த்தாங்கி இருக்கும் இடத்தில் இன்றைய யூ என். பி வவுனியா இணைப்பாளர் திரு. தவச்செல்வத் துக்கு அமைச்சர் ஒருவரினால் உயர் அதிகாரி ஒருவருக்கூடாக காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பல புள்ளிகள் அடுத்த தேர்தலில் யூ என். பி பட்டியலில் போட்டியிட முன்னிற்கிறார்கள். தேர்தலில் வென்று உறுப்பினராக வருவோம் என்ற எண்ணத்தினாலல்ல தோல்வி அடைந்தாலும் நகரத்தில் காணி கிடைக்கும் என்ற நம்பிக்கையாக இருக்கலாம்.

விவசாய விரிவாக்க அலுவலகம் அமைந்திருக்கும் பகுதியை வெளிநாட்டு நிறுவனங்கள் வேறு தேவைகளுக்காக வட்டமிட்டு அந்நிறுவனங்களுக்கு வழங்கப்படக் கூடிய அபாயம் இருப்பதால் விவசாயிகள் விழிப்பாக இருக்க வேண்டும்.

மேலும் பம்பை மடுப்பகுதி - பல்கலைக் கழகம், தொழில் நுட்பக்கல்லூரி என்பவற்றுக்கு சுமார் 200 ஏக்கருக்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதி எதிர்காலத்தில் விருத்தியுற இருப்பதால் அரச காணிகள் கழுகுகளால் குறுக்கு வழியில் சூறையாடப்படும். இதில் அரச அதிபர், பிரதேச செயலாளர், பிரதேச சபை - உள்ளூராட்சி அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும்.


இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு வெகுஜன அரசியல் பத்திரிகை

புதிய பூமி

ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

✍ செய்திகள்–கட்டுரைகள் அனுப்புங்கள்
✍ உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

வருட சந்தா - 200 ரூபா ஆறு மாதம் - 100 ரூபா
வெளிநாடுகளுக்கு US $ 20.00
(தபாற் செலவு உட்பட)

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.



ஆசிரிய பீடம் / நிர்வாகம் : புதிய பூமி
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை. Tel: 2435117, 2335844 Fax : 01-2473757


# நாலும் நடக்கும் நற்குணம் உலகிலே

## காக்கை உவக்கும் பிணம்

ஒரு ஆண்டுக்கு முன்பு வரை கூட, ஜே.வி.பி.யை மிகுந்த சந்தேகத்துடன் நோக்கி வந்த ஐலண்ட்-திவயின பத்திரிகை நிறுவனம் இப்போது ஜே.வி.பி.யின் கொழும்பு யாத்திரையை நாட்டைக் காக்க ஜே.வி.பி. நடப்பதாகப் போற்றியுள்ளது. அத்துடன் ஜே.வி.பி.– பொதுசன முன்னணி கூட்டணி ஏற்படுவதை மிகவும் பாராட்டி வரவேற்றிருக்கிறது. ஜே.வி.பியின் இருண்ட கடந்தகாலம் பற்றி ஐலண்ட்–திவயின ஏடுகள் கண்டுகொள்வதில்லை. இது ஏன்? ஜே.வி.பியின் இனவாதம் இப்போது திவயினவின் இனவெறியை எட்டி விட்டதாலா? ஒருவரை யார் எதிர்க்கிறார்கள் என்பதை வைத்து அதிகங் கவலைப்பட இடமில்லை. எவர் ஆதரிக்கிறார்கள் என்பது பற்றிக் கவனமாக இருக்க வேண்டும்.

ஐலண்ட் போல ஒரு இனவாத பிற்போக்குவாத ஏடு ஜே.வி.பியை ஆதரிப்பது ஜே.வி.பியின் சீரழிவு முழுமை பெற்று விட்டதையே காட்டுகிறது.

## இதோ ஒரு வீராங்கனை

குஜராத்தில் சென்ற ஆண்டு நடந்த இந்துத்துவ வெறியாட்டத்தில் படுகொலைகள் பல இடங்களிலும் நடந்தன. "பெஸ்ற் பேக்கறி" என்கிற வெதுப்பகத்திற்குத் தீ மூட்டப்பட்டுப் பலர் இறந்தனர். அதற்குச் சாட்சிகள் இருந்தனர். எனினும் வழக்கு விசாரணக்கு எடுக்கப்பட்டபோது, சாட்சிகள் ஒவ்வொருவராக மிரட்டப்பட்டுக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கட்குச் சாதகமான பதில்களையே நீதி மன்றத்திற் கூறினர். இதனால் குற்றவாளிகள் தப்பிவிட நேர்ந்தது.

எனினும் பதற்றச் சூழல் தணிந்ததன் பின்பு தான் பொய்ச்சாட்சி சொன்னதாகப் பகிரங்கமாகக் கூறி வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு இயலுமாக்கியுள்ளவர் ஸஹிரா ஷெய்க் என்ற இளம்பெண். அவரது புதிய தைரியம் இந்துத்துவ ஃபாசிசத்துக்கு எதிரான பிரச்சாரத்தினதும் அரசியல் வேலைகளதும் பயனானது என்பது உண்மை. அதேவேளை, அவரது தைரியம் இந்தியாவின் முற்போக்குவாத, ஃபாஸிஸ விரோதச் சக்திகட்கு மிகுந்த ஊக்கத்தை வழங்கியுள்ளது.

அவரது தைரியத்தை மெச்சிப் பல இந்தியப் பத்திரிகைகளிலுங் கூடச் செய்தி வந்துள்ளது. எனினும் இவ்விடயம் பற்றி நாட்டின் பிரபல செய்தி ஏடுகள் கண்டு கொள்ளவில்லை. இது ஏன்? ஒடுக்கப்பட்ட மக்கள் கற்பதற்கான விடயங்கள் நமது பேரினவாத, முதலாளிய ஊடகங்களால் புறக்கணிக்கப்படுவது தற்செயலானதல்ல.

## உண்மை என்பது ஊமை

விடுதலைப்புலிகள் தாங்கள் செய்கிற கொலைகளை ஒப்புக்கொள்வதில்லை. எனவே கிழக்கு மாகாண முஸ்லிம்களது கொலைகளை எல்லாம் அவர்களே செய்துள்ளார்கள் என்று, ஒரு சட்ட வல்லுனருக்கு இருக்க வேண்டிய 'தர்க்கத் திறமையுடன்' பிரகடனம் செய்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், முஸ்லிம் இளைஞர் இருவர் கடத்தப்பட்டதற்கும் விடுதலைப்புலிகளையே பழிகூறியிருந்தார்.

'கடத்தப்பட்ட' இருவரும் தாமாகவே காணாமற் போனதாகவும், முஸ்லிம் தீவிரவாதச் செயற்பாடுகட்காக ஆயுதக் கொள்வனவுக்காகவே அவர்கள் தலைமறைவாகப் போனதாகவும் உண்மை வெளியானது.

அமைச்சருக்கு இன்னமும் உண்மையை ஒப்புக்கொள்ள மனம் வரவில்லை. இனக்குரோதத்தைக் கிளறிவிடத் துடிக்கிறவர்களது புதிய ஆயுதக் கலாசாரத்தைக் கண்டிக்கத் துணிவும் இல்லை. இது தான் இன்றைய முஸ்லிம் தேசியவாதத் தலைவர்கள் பலரதும் யோக்கியம்!

## அந்த நாள் ஞாபகம் இந்த நாள் வந்ததேன்?

காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் பேரைப் பகிரங்கமாக உச்சரிக்கவே த.வி.கூட்டணித் தலைமை 2001ம் ஆண்டு தேர்தலிற் கூடத் தயக்கம் காட்டியது. சென்ற ஆண்டு முதல் அமிர்தலிங்கம் தூசு தட்டித் துடைத்தெடுத்து நம்முன் வைக்கப்பட்டு வருகிறார். இந்த செப்றெம்பர் மாதம், தர்மலிங்கத்துக்கும் ஆலாலசுந்தரத்துக்கும் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. போகிற போக்கில் இவர்கள் தந்தையை விட முக்கியமானவர்களாகவும் காட்டப்படக்கூடும்.

என்னுடைய சந்தேகம் ஏதென்றால் தமிழரசுக்கட்சியினருக்கு, குறிப்பாக ஆனந்தசங்கரிக்கு, ஞாபகசக்தி மீண்ட மருமம் என்ன? அண்டை நாடொன்றிலிருந்து மருந்து ஏதேனும் தருவிக்கப்படுகிறதா?

## பிரேமசந்திரன் அரைகுறை உண்மைகள்

செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் பேசிய சுரேஷ் பிரேமச்சந்திரன் கிழக்கு மாகாணத்தில் நடக்கும் பல்வேறு கொலைகட்கும் ஆட்கடத்தல்கட்கும் அமைதியை விரும்பாத மூன்றாவது சக்திகளே பெரும்பாலும் காரணம் என்று சொன்னார். ஆனால், அச்சக்திகளை அடையாளங் காட்டுபோது, அவை பொதுசன முன்னணி, சில முஸ்லிம் சக்திகள், ஆயுத வியாபாரிகள் ஆகியோராக இருக்கலாம் என்று சொன்ன பிரேமச்சந்திரனுக்கு அயல்நாட்டுச் சக்திகளும் அதிற் சம்பந்தப்பட்டிருக்க முடியும் என்று சொல்லத் தைரியம் வரவில்லை. இது தாய்ப்பாசமா செஞ்சோற்றுக் கடனா?

## ஈராக்கில் அமெரிக்காவுடன் உடன்கட்டை ஏற ஆள் தேவை?

ஈராக் மீதான போரில் தான் எதிர்பார்த்த வெற்றியையும் அதன் நற் பலன்களையும் தனதேயாக்கிக் கொள்ள மும்முரமாக நின்ற அமெரிக்கா, இன்று ஈராக்கில் நாளாந்தம் உதை மேல் உதை வாங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இப்போது அதற்கு ஐ.நா. சபையின் போர்வைக்குக் கீழ் ராணுவ ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. அமெரிக்காவுடன் ஒத்துழைப்பதற்கு எங்கே என்று காத்துக்கொண்டிருந்த சில அடிமை நாடுகள் இதையே தருணம் என்று பற்றிக் கொள்ளலாம். ஈராக்கில் அமெரிக்காவுக்குத் துணையான ஐ.நா. படைகளில் எந்த நாடாவது தன் பங்கை அளிக்க முன்வந்தால் அந்த நாட்டு மக்கள் அதற்கெதிராகப் போராடுவது அவர்கள் ஈராக் மக்களது விடுதலைக்கு மட்டுமில்லாமல் தமது விடுதலைக்கும் அளிக்கிற ஒரு பங்காகும். எந்த வகையான ஒத்துழைப்பும் அமெரிக்காவின் நியாயமற்ற ஆக்கிரமிப்பிற்கான ஆசியே ஆகும்.

## வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்கின்றன

இடதுசாரிகள் மீது அவதூறு பொழிவதில் ஜெயமோகன் வெட்கட்சாமிநாதனையும் மிஞ்சியவர். இவரது தனிப்பட்ட தாக்குதல்கட்கு இலக்காகாத படைப்பாளிகள் வெகு சிலரே. கடந்த சில ஆண்டுகளாக இவரது கவனம் இதுவரை வளத்துவிட்ட சுந்தரராமசாமி மீது திரும்பி விட்டது.

தன்னுடைய அதிகாரத்தில் உள்ள "சொல் புதிது" என்கிற சஞ்சிகையில் மிகவும் கீழ்த்தரமான முறையில் சுந்தரராமசாமி பற்றிய தாக்குதலை ஒரு புனைகதை வடிவில் வெளியிட்டுள்ளார். எழுதியவர் சுந்தர ராமசாமியின் இன்னொரு செல்லப் பிள்ளையான வேதசகாயகுமார் கைலாசபதி மீது இவர் தாக்குதல் தொடுத்த போது இவரைத் தட்டிக் கொடுத்தவர்கள் இப்போது ஆவேசங்கொண்டு துடிக்கிறார்கள்.

ஜெயமோகன் வகையறாக்களின் சில்லறைத்தனம் கண்டிக்கப்பட வேண்டியது என்பதில் நமக்கு மறுப்பில்லை. கண்டிக்கிறவர்களும் தங்களைக் கொஞ்சம் சுய விமர்சனம் செய்வது பயனுள்ளது.

படிப்பகம்

# நமது விவசாயிகளுக்கு வயிற்றில் அடி!

விவசாயம் சம்பந்தப்பட்ட சட்டங்கள் எல்லாம் செல்வந்த நாடுகள் சார்பானதே. இலங்கையிலும் ஏனைய வளர்முகநாடுகளில் விவசாயத்திற்கான மானியங்களை குறைக்கும்படி உலக வங்கி ஆலோசனை கூறுவது நமக்குத் தெரிந்ததே. இலங்கை விவசாயிகளுக் கான மானியம் குறைக்கப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது.

செல்வந்த நாடுகள் தத்தமது நாடுகளில் விவசாயத்திற்கு வழங்கும் மானியத்தை நீக்கினால் உலகின் விவசாய உற்பத்தி பதினேழு (17%) வீதம் அதிகரிக்கும் எனவும் இதன் பெறுமதி ஆறாயிரம் கோடி (6000) அமெரிக்க டொலராக இருக்குமென உலக வங்கி மதிப்பிடுகிறது. இந்தத் தொகையானது கீழ், நடுத்தர வருமானமுள்ள நாடுகளின் கிராமப்புற வருமானத்தை ஆறு வீதத்தால் அதிகரிக்கச் செய்யும்.

ஐரோப்பிய பசுக்களுக்கான மானியம் நாள் ஒன்றிற்கு இரண்டரை (2 1/2) டொலர்கள். உலகின் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் தினம் ஒன்றிற்கு இரண்டு (2) அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்தில் சீவிக்கின்றனர். செல்வந்த நாடுகள் வருடமொன்றிற்கு முப்பதாயிரம் (30,000) கோடி அமெரிக்க டொலர்களை பண்ணைத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கான மானியமாகச் செலவு செய்கின்றன. இது வளர்ச்சிக் கான உதவு தொகையின் ஆறு மடங்கானது.

ஐரோப்பிய பசுவுக்குமட்டும் மவுசு என நினைத்துவிடாதீர்கள். யப்பானியப் பசுவும் சளைத்ததல்ல. ஒரு யப்பானியப் பசுவுக்கு தினமொன்றிற்கு ஏழரை (7.5) அமெரிக்க டொலர்கள் மானியம் வழங்கப்படுகிறதென உலகவங்கி அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

அமெரிக்கா அதன் பருத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வருட மொன்றிற்கு முன்நூறு (300) கோடி அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்குகிறது. இந்தத் தொகையானது அமெரிக்கா ஆபிரிக்காவிற்கு வழங்கும் உதவித் தொகையின் மூன்று மடங்காகும்.

இது தான் இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழான பொருளா தார ஒழுங்காகும். மூன்றாம் உலக நாடுகள் தமது விவசாய உற்பத்தியைக் கைவிட்டு விவசாயிகள் வறுமையில் வாடவேண்டும். அதேவேளை செல்வந்த முதலாளித்துவ நாடுகளில் விவசாயத் திற்கு போதியளவு மானியங்கள் வழங்கி அவ்விளை பொருட்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிகரித்த விலைகளில் விற்று கொள்ளை லாபம் பெறல் வேண்டும். இதற்கே உலகவங்கி சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக மையம் என்பன தினம்தினம் செயல்படுகின்றன.

# சங்கரியாரும் ஈஸ்வரனாரும்

முன்பு காங்கேசன் சீமெந்து தொழிற் சாலையின் மிதமாயிருந்த சுமார் 300 ஊழியர்கள் குறைந்த நட்ட ஈட்டுடன் வேலை நீக்கம் செய்யப்பட் டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய நட்டஈடு மூன்று இலட்சம் ரூபாய் மட்டுமே.

நிதி அமைச்சரின் செயலாளரும் ரணிலின் நெருங்கிய சகாவும் முன்னைய தோட்டத்துறையும் தற் போதைய சீமெந்து தொழிற்சாலைகள் தலைவரும் சேர்ந்து செய்த சதியே இதுவாகும்.

சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு கொடுக் கப்பட்டு வந்த படி நிறுத்தப்பட்டு, நட்ட ஈட்டிற்கான காசோலையும் அனுப்பப் பட்டு அவை ஊழியர்களினால் மாற்றப் பட்டுள்ளது. இறுதி நேரத்திலும் காசோலையை மாற்றுவதா இல்லையா யென்று யோசித்த ஊழியர்கள் ஆனந்தசங்கரியாரிடம் ஆலோசனை கேட்டனர். அவர் அவற்றை மாற்றும்படி ஆலோசனை வழங்கி மேற்கொண்டும் அமைச்சருடன் கதைப்பேன் எனவும் கூறினாராம். அதே வேளை ஒரு பகுதி ஊழியர்கள் அமைச்சர் மகேஸ்வரனாரிடம் சென்றனர். ஏன் என்னிடம் முன்பே வந்திருக்கலாமே என்றாராம். பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப் போவதாகவும் கூறினாராம். இதையறிந்த சங்கரியார் 'யார் குற்றினாலும் அரிசி கிடைத்தால் சரி' யெனக்கூறி மகேஸ்வரனிடம் சென்றமை பற்றி அதிருப்தியும் தெரிவித்தாராம். ஆனந்த சங்கரியாரும் கூட்டமைப்பினரும் செய்வதைத் தான் அமைச்சர் மகேஸ்வரனும் செய்கிறார். வித்தியாசம் என்னவெனில் மகேஸ்வரன் நேரடியாகப் பச்சையாகவே செய்கிறார். மற்றவர்கள் மறைமுகமாகச் செய்கிறார்கள். வர்க்கமும் அதன் நலன்களும் ஒன்றே. ஆட்களே வெவ்வேறானவர்கள். எமக்கு வேறு ஒரு தகவலும் கிடைத்துள்ளது. தளபதியாரின் பெறாமகனுக்கு நிதி அமைச்சில் ஒரு வேலை வாய்ப்பை சங்கரியார் பெற்றுக் கொடுத்துள்ளார் என்றும் அறியமுடிகிறது. கூட்டணி யாயினும் கூட்டமைப்பாயினும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு கிட்டியவர்களுக்கு இன்றைய யூஎன்.பி அரசாங்கத்தில் தொழில் பெற்றுக் கொடுப்பது ஒன்றும் புதிரான விடயமல்ல. 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு' என்றாவாறு முழக்கமிட்டு பாராளுமன்றம் செல்வது தத்தமது உயர்வர்க்க நலன்களுக்காகவே அன்றி சாதாரண தமிழ் மக்களுக்காகவல்ல.

# சொன்னாரே சொன்னார் பேராசிரியர்!

- "(வரலாற்றுப் பொருள் முதல்வாதம்) 19ம் நூற்றாண்டளவில் வரலாற்றை அறிந்து கொள்வதில் முன்னேற்றகரமானதாகக் காணப்பட்டது. ஆனால் 21ம் நூற்றாண்டில் வித்வத்தில் சர்வதேச ரீதியான அதீத முன்னேற்றம், பரிணாமம் ஏற்பட்டு விட்டன. எனவே இந்தக் காலகட்டத்தில் அதை முழுமையான பொருத்தமான விளக்கமாகக் கொள்வது சற்றுக் கடுமையானது".

•• ஐயா வரலாற்றுப் பேராசிரியரே, வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கில் பல முக்கியமான பங்களிப்புக்கள் 20ம் நூற்றாண்டில் தான் வழங்கப்பட்டன என்று உங்களுக்குத் தெரியாதா? அதுதான் உங்கள் வரலாற்று அறிவா? அதுபோக, நீர் கூறுகிற 'வித்வம்' எது? பின் நவீனத்துவமா அல்லது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இந்துத்துவமா? முன்னது வரலாற்றையே மறுப்பது பின்னது வரலாற்றைத் திரிப்பது. தயவு செய்து உங்களது கண்ணோட்டத்தில் நவீன சிந்தனை எது என்பதைத் தெளிவுபடுத்த முடியுமா?

- "அக்காலத்தில் கணிசமான தொகையிலுள்ள தரமான கல்லூரிகள் கிறிஸ்தவ மிசனரிமாரின் முகாமைத்துவத்தின் கீழ் இருந்தன. அந்தக் கல்லூரிகளில் பௌத்தர். இந்துக்கள், இஸ்லாமியர் என்ற வேறுபாடின்றி பலரும் கற்றனர்"

•• அதெண்டா மெய்தான். சாதி வேறுபாடில்லாமற் படிக்கிறதுதான் பிரச்சினையா இருந்தது.

- "இந்து சமயம் பௌத்த சமயம் ஆகிய இரண்டும் பொதுவாக மதமாற்றத்தில் ஈடுபடுவதில்லை"

•• அப்படியானால் நாவலர் (பெருமான்) முஸ்லிம்களை என்ன செய்யப் பார்த்தார். இப்போது இந்துத்துவக் கும்பல் இந்தியாவில் என்ன செய்யப் பார்க்கிறது? இந்துவாகிறதில் உள்ள ஒரு பிரச்சினை எந்தச் சாதியில் சேர முடியும் என்கிறது தான். முன்னர் திருநாவுக்கரசரும், சம்பந்தரும், மாணிக்கவாசகரும் என்ன செய்தார்கள். எண்ணாயிரம் சமணரைக் கழுவேற்றின பெருமையை இன்னமும் தான் சொல்கிறோமே. ஐயா, இதெல்லாம் மதமாற்றமில்லையா. அல்லது நீங்கள் அறிந்த வரலாறா? உண்மை என்னவென்றால் நாலு நூற்றாண்டாக அடிமைப்பட்டுக் கிடந்ததால் நமது மத வெறியர்கள் கொஞ்சம் ஓய்ந்து கிடந்தார்கள். இப்போது அவிழ்த்து விடப்பட்டிருக்கிறார்கள். அது விளங்குவதற்கு ஒருவேளை வரலாற்றை வேறு விதமாகப் பார்க்கத் தெரிய வேண்டாமா?

- அம்பேத்கர் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் சட்ட நிபுணர். ஆனால் சமய கலாசாரம் தொடர்பான இலக்கியங்களில் அதிக பயிற்சி கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

•• பேராசிரியர் சி. பத்மநாதன் வரலாற்று ஆசிரியர். அவருக்கும் இலக்கிய அறிவு குறைவு. அம்பேத்கர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் காந்தியே திணறிப்போய் விட்டார். மனுதர்மம் என்று ஒன்று இருக்கிறதே அதை அம்பேத்கர் வாசித்து விமர்சித்திருக்கிறார். பேராசிரியர் கேள்விப்பட்டிருப்பாரா?

குறிப்பு : பேராசிரியர் சி.பத்மநாதன் 3.9.2003 இல் ஞாயிறு தினக்குரல் பத்திரிக்கைக்கு வழங்கிய நேர்காணலில் இருந்து எடுக்கப்பட்டது.

# அன்று ஸ்ரீதர் தியேட்டர் இன்று கந்தர்மட இல்லம்

தற்போதைய வடபுலத்து சூழலிலே பலவகைத் தெருக்கூத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. அதில் ஒரு திருக்கூத்து தான் சமாதான நீதிபதி (ஜே.பி) பட்டம் வழக்கப்பட்டு வருவ தாகும். தமிழர் கூட்டணியும் கூட்டமைப் பின் கட்சிகளும் தத்தம் ஆதரவாளர் களை ஊர், சாதி, பிரதேசம் எனக் கணக்கிட்டு தமது வாக்கு வங்கிக்கு ஏற்றவாறு வகுத்து ஜே.பி. பட்டங்களை வழங்க சிபார்சு செய்து பெற்றுக் கொடுத்தும் வருகிறார்கள். இவர்களை விட இந்து கலாசார அமைச்சரும் பேரினவாத யூஎன்.பியின் வடபுலத்து முகவருமான மகேஸ்வரன் சமாதான நீதிபதிகளைக் குடாநாடு முழுவதும் நியமிப்பதில் மும்மரம் காட்டி நிற்கின்றார். அண்மையில் ஐம்பத்தைந்து பேருக்கு ஒரே நேரத்தில் இப்பட்டம் பெறவைத்த தாக பத்திரிகைகள் செய்தி வெளி யிட்டன. மேலும் ஊரூராய் இப்பதவிக்கு பெயர்கள் வாங்கி வருவதாகவும் அறிய முடிகிறது. கோவில்களுக்கு ஒரு கையால் பெருந்தொகைப்பணம் வழங்கிவிட்டு அதில் முக்கால்வாசியை மறுகையால் வாங்கி ஏனைய விடயங் களுக்கென இந்து அமைச்சர் வழங்கி வருவதாகவும் மக்களிடையே பேசப்படு கின்றது. இதனால் இந்த ஈஸ்வரன் சந்நிதானத்திற்கு ஒரு முறையாவது சென்று தரிசித்தால் பணம், வேலை இன்னும் பிற சலுகைகள் கிடைக்கும் என நம்பும் ஒருவகைப் பக்தர் கூட்டம் கந்தர்மட இல்லத்தின் முன் கூட்டு வதைத் தினமும் காணமுடிகிறது. அன்றைய ஸ்ரீதர் தியேட்டர் முன் இடம்பெற்ற காட்சிகள் இப்போது கந்தர் மடத்தில் அரங்கேறுகிறது. அன்று டக்ளஸ் இன்று மகேஸ்வரன் என்றே மக்கள் பேசுகிறார்கள். அப்படியானால் கடந்த தேர்தலில் டக்ளஸைப் பேரின வாதத்தின் பிரதிநிதி என்றும் துரோகி என்றும் மகேஸ்வரன் ஏன் திட்டி வாக்கு வாங்கினார். அதற்கு ஆதரவாகப் பல்கலைக்கழக மாணவர் சிலர் தலை கால் தெரியாத அளவுக்கு பிரசாரம் செய்து கள்ளவாக்குகள் கூடப் போட்டனர். எல்லாம் சற்று அழமான தமிழ் மக்களின் தலைவிதி என்று சும்மா இருந்தால் ஏமாற்றத் தெரிந்தவர்களும் பிழைக்கக் கூடியவர்களும் இப்படித்தான் செய்வார்கள் கேள்வி எழுப்பி சிந்திப்பதும் செயல்பட முற்படுவதும் தான் தமிழர்கள் மத்தியில் தேவைப்படும் விடயமாகும்.

# நல்லூர் பிரதேச சபையின் அடாவடித்தனம்

திருநெல்வேலி நவீன சந்தைக் கட்டிடத் தில் தி. சத்தியேந்திரா என்பவரால் நடத்தப்பட்டு வந்த ஹு Z to Infinity It Academy, Sri sakkarah ஆகிய கணனி நிறுவனங்கள் நல்லூர் பிரதேச சபையினரால் ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி சீல் வைக்கப்பட்டுள்ளன. அந் நிறுவனங்கள் நடத்தப்பட்ட கடைகளுக் குள் ரூபா 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேல் பெறுமதியான தி. சத்தியேந்திரா விற்கு சொந்தமான கணனிகள் மற்றும் பொருட்கள் இருப்பதாக அறிய முடிகிறது.

நல்லூர் பிரதேசசபைக்கு சொந்தமான இச்சந்தைக் கட்டிடத்தில் மேற்படி கடை களை ஏலக்கோரலின் மூலம் தி. சத்தி யேந்திரா குத்தகைக்கு எடுத்திருந்தார். அவற்றில் கணனி எழுத்தச்சு வேலை களும், கணனி கல்வி கற்பித்தலும் நடத்தப்பட்டு வந்தன. அவை சீல் வைக்கப்பட்டதால் சத்தியேந்திரா என்பவருக்கு மட்டுமன்றி கணனி எழுத்தச்சு செய்த வாடிக்கை யாளர் களும் கணனி கல்வி கற்று வந்த மாணவர்களுக்கும் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அக்கட்டிடத்தில் சுகாதாரவசதிகள் இல்லாமை பற்றியும் சந்தைக் கட்டிட நுழைவாயில் நேரத்திற்கு திறக்கப் படாமை பற்றியும், நேரத்திற்கு முன்பு மூடப்படுவது பற்றியும் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. பகிரங்கமாக அறிக்கை செய்யப்பட்டிருந்தன.

இதனாலேயே அக்கடைகளுக்கு நல்லூர் பிரதேச சபையினர் சீல் வைத் திருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது. இச்சட்ட முரணான நடவடிக் கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமுரணான, அடாவடித் தனத்தை நியாயப்படுத்தும் வகையில் பிரதேச சபையினர் குறிப்பிட்ட சத்தி யேந்திரா கட்டிடங்களுக்குரிய முழுக் கட்டணத்தையும் கட்டி முடிக்காத படியாலேயே சீல் வைக்கப்பட்டதாக கூறுகின்றனர். மூன்று மாத காலத்துக் குள் கட்டி முடிப்பதற்கு பிரதேச சபையினர் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்ததாக சத்தியேந்திரா கூறுகிறார்.

சீல் வைக்கும் முன்னர் சரியான காரணத்தை கூறாமை, போதிய அவகாசம் கொடுக்காமை, பொருட் களை உள்ளே வைத்து சீல் வைத்தமை என்பன சட்டத்திற்கு முரணான செயல் என்பதால் நல்லூர் பிரதேச சபை அடாவடித்தனமாகவே நடந்து கொண்டுள்ளது எனலாம். வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான அதிகாரிகள் சிலரும் பிரதேசசபைகளின் சில அதிகாரிகளும் இவ்வாறு நடந்து கொள்வது ஏன்? சபைகளின் அதிகாரிகள் சட்டப்படியும் சமூக நீதியின் படியும் நடந்து கொள்ளவில்லை எனச் சுட்டிக் காட்டினால் அதற்குப் பழிவாங் கலை செய்ய வேண்டும். மக்கள் தான் இதற்குத் தீர்ப்புக் கூறல் வேண்டும்.

(யாழ் நிருபர்)

# சாதியம் செத்து விடவில்லை வட்டுக் கோட்டையில் வெறித்தனம்!

சாதியம் வடபுலத்தில் செத்து விட்டது என்று சொன்னான் ஒரு படித்த முட்டாள். அது உண்மை தான் என்று ஆமாப் போட்டார்கள் சில மடையர்கள். ஆனால் வடபுலத்தில் நிகழ்ந்து வரும் சாதிவெறி கொண்டசம்பவங்களை இத்தகையவர்களின் வெளிகளை அம்பலப்படுத்தி நிற்கின்றன. இதோ ஒரு சாதியச் சம்பவம். வட்டுகோட்டை மேற்கில் அமைந்துள்ள கரைப்புலம் அம்மன் கோவிலுக்குரிய காணியில் ஒரு விளையாட்டு மைதானம். அதனை அவ்வூரில் உள்ள மக்கள் நீண்டகாலம் பயன்படுத்தி வந்தனர். இடப் பெயர்வின் பின் அது பயன் படுத்தப்படவில்லை. இப் போது மீளக்குடியமர்வுக்குப் பின் அதே விளையாட்டு மைதானத்தை பயன் படுத்த முற்பட்ட போது இரு சாரார்க்கும் இடையே தகராறு முரண்பாடு மோதல் நிலைக்குச் சென்றது. இது நீதிமன்றம் வரை சென்றது. ஆனால் இத்தகராறில் சாதியம் புகுந்து கொண்டது தான் விசனத்திற்குரியதாகிறது. வேளாளர்-திமிலர் என்ற சாதிய மோதலுக்கு விடயம் இழுத்துச் செல்லப்பட்டது. வேளாளர் எல்லாம் ஒன்று சேருங்கள் என்றும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்றும் கச்சை கட்டப்பட்டு திமிலருக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் எனவும் சாதியத்திமிர் பேசப்பட்டு இதன் கோவடியே சேர்க்கப்பட்டது. இதன் தலைவனாக ஐக்கிய தேசிய கட்சியின் கடந்த தேர்தலில் போட்டியிட்ட ஒரு சண்டியன் முன்நிறக சாதிய மோதலுக்கு சவால் விடுக்கப்பட்டது. திமிலர் சமூக மக்களது கிராமத்திற்குள் புகுந்து இச்சாதிவெறிக் கூட்டம் ஒரே அட்டகாசம் புரிந்து சாதித்தூசணைகள் பேசப்பட்டன கல்லெறிகள் தாக்குதல்கள் இடம் பெற்றன. கத்தி வாள் பொல்லுகள் காட்டப்பட்டு மக்கள் பயமுறுத்தப் பட்டனர் இவ்விடயத்தில் சில அரசாங்க உயர் அதிகாரிகள் தேர்தல் காலத்தில் கும்பிட்டு பல்லிளிக்கும் அரசியல் வாதிகள் சுத்த மௌனம் காத்து தமது சாதியச் சார்பை வெளிப்படுத்தி வருவதையும் அவதானிக்க முடிகிறது. போராட்டம் இன்றேல் போகாது சாதிப் பேய் என்பதை உணர்ந்து போராடு வதன் மூலமே சாதிய வெறித்தனத்தை தோற்கடிக்க முடியும்.



15.05.2003 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய மாநாடு நடைபெற்றது. மாநாட்டு வாசலில் 10 வயதுக்குட்பட்ட சிறுவன் ஒருவன் கடலை விற்பதையும் மாநாட்டில் கலந்துகொண்ட பெண்மணி ஒருவர் பேரம்பேசி கடலை வாங்குவதையும் படத்தில் காணலாம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# ஸ்ரீ பாத கல்வியல் கல்லூரிப் போராட்டம் தொடர்கிறது

## ஊழலும் இனவாதமும் கைகோர்த்து நிற்கின்றன

கடந்த பல வருடங்களாக ஸ்ரீ பாதக் கல்வியற் கல்லூாரியில் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், இம் மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் இடமாற்றம் செய்ய வேண்டும் எனவும் கோரி ஆசிரிய பயிலுனர்கள் பல் வேறு வகையில் போராட்டங்களை செய்து வருகின்றனர்.

ஸ்ரீ பாதக் கல்வியற் கல்லூரி மலைய மக்களுக் கென ஜேர்மன் அரசாங்கத்தால் கட்டு விக்கப்பட்டது. ஆனல் மலையகத் தலைவர்களின் பல வீனத்தாலும் அரசின் சதியாலும் பல்லினமாணவர்கள் கற்கும் ஓரிடமாக உருமாறியது. இக்கல்லூரி 1992 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் பயிலுனர்களை உள்வாங்கியது தொடக்கம் இன்று வரை இலங்கையின் ஏனைய கல்லூரிகளை விட அதிகளவான பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

உள்வருகின்ற சிங்கள ஆசிரிய பயிலுனர்களுக்கு முன் கூட்டியே இனவாத உபதேசம் செய்யப்பட்டு வருவதால் இவர்கள் எல்லாவகையான நிகழ்வுகளையும் இனவாதநோக்கில் பார்க்கும் வழக்கம்கொண்டவர்களாக உள்ளனர். ஒரே கல்லூாரியில் ஒரே விடுதியில் பயிலும் சிங்கள தமிழ் மாணவர்களுக்கிடையோ ஏற்படக் கூடிய ஆகக்குறைந்த பரஸ்பர உறவும் வளர்த்தெடுக்கப்பட முடியாத சூழலை இனவாத விரிவுரையாளர்களும், பிற சக்திகளும் ஏற்படுத்தி விடுகின்றனர். ஊழல் புரிந்தவர்கள் இப் பிளவை தங்களுக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொள்கின்றனர். மாதம் ஒரு பயிலுனர்க்கு தலா1500 ருபா ஒதுக்கப்படுகிறது. 500 க்கு உட்பட்டோர் பயிலுனர்களாக உள்ளனர். மாணவர்களுக்காக ஒதுக்கப்படும் இந் நிதியிலேயே இம் மோசடி இடம் பெற்றுள்ளது.

இம் மோசடி இடம் பெறுவது பற்றி பீடதிபதி, விரிவுரையாளர்கள், ஆசிரிய பயிலுனர்கள் கல்விசாரா ஊழியர்கள் சிற்றூழியர்கள், தலவாக்கலை, கொட்டகலை, ஹட்டன் வர்த்தகர்கள் என பலருக்கும் தெரியும். பொருள் கொள்வனவுக்கு முன் கூட்டியே உரிய கடைகளில் பேரம் பேசப்பட்டு விடுகிறது. தரப்படும் பற்றுச் சீட்டில் ஒரு விலை இடப்பட்டு கமிஷன் ரகசியமாக பெற்றுக் கொள்ளப்படுகிறது. உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யப் போகும் ஆசிரிய பயிலுனர்கள் இந் கமிஷன் விவகாரத்தை நேரடியாகவும் கண்டுள்ளனர்.

உதாரணமாக கோழியின் விலை ரூபாய் 115 ஆக இருந்த போது ரூபாய் 165 க்கும் தேங்காய் ரூபாய் 13 ஆக இருந்த போது ரூபாய் 18 க்கும் இதே போன்று நெஸ்பிறே கொள்வனவிலும் ஊழல் செய்யப்பட்டுள்ளது. இவை சில உதாரணங்களே. உப்பு தொடக்கம் கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொடும் பொருளிலும் இவ்வாறு காசு கொள்ளையிடப் பட்டுள்ளது.

இங்கு பதிவாளராக, நிதி உதவியாளராக, சிரேஸ்ட குமாஸ்தாவாக கடமையாற்றும் சுசில் கருணாசிறி, உதவி விடுதிக் காப்பாளராக கடமையாற்றும் அனுர திசாநாயக்கா, சுரேஸ்தரன் ஆகியோர் இவ் ஊழலுக்கு அதிபதிகளாக இருந்து வந்துள்ளதாக ஆசிரிய பயிலுனர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் சம்பந்தப்பட்ட இம் மூவரும் இனவாத அமைச்சர்களுடனும் பிர இன வாதிகளிடமும் அடைக்கலம் புருந்துள்ள தால் தம்மை அசைக்க முடியாது எனும் நம்பிக்கையில் உள்ளனர். மேலும் பகுதி நேர விரிவுரை யாளர்களாக கடமையாற்ற வரும் தலவாக்களை, லிந்துலை விகாரைகளின் பொறுப்பான பௌத்த மதகுருமார்களும் இவர்களுக்கு பக்கபலமாக இருந்து வருவதாகத் தெரிகிறது.

ஒரு நடு நிலையான விரிவுரையாளர் குறிப்பிட்டதும் போல சுசில் போண்றவர்களா பெரும் இனக் கலவரமே வெடிக்கவும் கூடும் ஹட்டன்தொழில் நூட்பக் கல்லூரியின் அதிபர் மெய்யநாதான் அமைச்சர் ஆறுமுகத்தின் அடியாட்களால் அடித்து தூக்கி விசப் பட்டார் ஆக இந்த தொண்டர்களாளே அமைச்சர் ஆறுமுகத்தாலே கூட இவர்களை ஒன்றும் செய்ய முடிய வில்லை. உள்ளுர் சண்டித்தனம் சுசில் போன்றவர்களிடம் செய்யமுடியாகாது ஏன்பதை ஆறுமுகம் உணர்த்திருக்கக் கூடும்.

அமைச்சர் சந்திரசோகரன் இந்தியாவில் இருப்பதால் ஒன்றும் செய்ய வில்லை என்று கூற முடியுமா? அவர் இருந்தால் மட்டும் என்ன கிழித்து விட முடியும்? சதாசிவம் வந்து விட்டுப் போய்விட்டார் முத்து சிவலிங்கம்,மு.சிவலிங்கம் உட்பட பல பிர முகர்கள் இவ்வாறு வந்து போனவர்களில் அடங்கும்.

தமிழ் பயிலுனர்கள் பகலுனவை நிராகரித்து வருவதுடன் கறுப்புப்பட்டி அனிந்து தமது எதிர்ப்பை காட்டி நிற்கின்றனர். பகலுனவு நேரத்தில் பிரதான வாயிலருகே அமர்ந்து இவ்விடையம் தொடர்பான கலந்துரையாடல்களை செய்வதுடன் வீதி நாடகங்களை நடத்துகின்றனர். உடல் கலைப்புற்ற நிலையிலும் உள உறுதியுடன் இருக்கின்றனர் உயித் தியாகம் செய்ய தயார் என உறுதி கூறுகின்றனர்.

இக் கல்லூரி மலையக மக்களின் செத்து என்பதால் மலையக ஆசிரியர்கள், மாணவர்கள், புத்திஜிவிகள், மக்கள் என பல்வேறு தரப்பினரும் ஒன்று திரண்டு போராடுவது அவசியம் அவ்வாறு போராடுவதன் முலமே குறிப்பிட்ட அவர்களை வெளியேற்றவும் கல்லூரியைக் காப்பற்றவும் முடியும்.

~ கொட்டகலை குமார் ~

# பிரஜாவுரிமைத் திருத்தச்சட்டமும்

## பேரினவாதத்தின் அடிபணிவும்

கடந்த மாதம் 23ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரஜா உரிமைச் சட்டத்திற்கான திருத்தச் சட்டமூலத்துடன் மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை சட்டரீதியாக முடிவிற்கு கொண்டுவரப் பட்டுள்ளது. சட்டமூலம் பாராளுமன்றத்திலிருக்கும் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும்.

ஐ.தே.க. அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. மறுக்கப்பட்டது. அதிலிருந்து பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்வதற்கு பலதரப்பட்ட போராட்டங்கள். பேரப்பேச்சுகள் மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

பண்டா செல்வா ஒப்பந்தம். திம்பு ஒப்பந்தம் என்பவற்றில் பிரஜா உரிமை பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனும் ஏற்பாடுகள் இருந்தது.

அதன் பிறகு 1949 ஆம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்பிறகு இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கமும் பல பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டன. அதன் விளைவாக 1964ஆம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 5 இலட்சத்து 25 பேரை இந்தியாவுக்கு அனுப்பவும் 3 இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது.

இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவர்களின் விருப்பம் இதில் அறியப்படவில்லை. நிர்பந்தப்படுத்தப்பட்டே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு இந்தியாவுக்கு அனுப்பப்படவிருந்த ஒரு இலட்சம் பேர் 1983 ஆம் ஆண்டிற்கு பிறகு ஏற்பட்ட நிலைமைகளினால் இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லை.

1986, 1988 ஆண்டு சட்டங்களின் பிறகு கொண்டுவரப்பட்ட சட்டங்களி னாலும் அவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அத்துடன் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களென்று இங்கிருந்த மலையகத் தமிழ் மக்களை இந்தியா ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதனால் 1991 ஆம் ஆண்டு அப்போது குடியகல்வு குடிவரவிற்கு பொறுப்பாக

**ம. அழகேசன்**

இருந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண அவர்களை நாடுகடத்த வேண்டும் என முடிவு செய்தார்.

அதற்கு எதிராக எதிர்ப்புக் கூட்டங்கள், போஸ்டர், துண்டுப்பிரசுர இயக்கங்களை தனித்தனியாகவும். ஏனைய அமைப்புகளுடன் சேர்ந்தும் புதிய-ஜனநாயக கட்சி முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. அப்போராட்டங் களை அடுத்து மலையக அமைப்பு களும் வடக்கு கிழக்கு தமிழ் அமைப்புகளும் இடதுசாரி கட்சிகளும், வெகுஜன அமைப்புகளும் இந்தியாவு க்கு அனுப்பப்பட வேண்டியவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட்டு மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சினைக்கு இறுதி தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தன.

1949ஆம் ஆண்டிலிருந்து அனைத்து தோட்ட தொழிற்சங்கங்களினதும் மாநாட்டு தீர்மானங்களில் மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என்பது பிரதான இடத்தை பிடித்திருந்தது.

இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி உட்பட அனைத்து இடதுசாரி கட்சிகளும்

தொடர்ச்சி 11ம் பக்கம்.

# மலையகத்திலிருந்து

குமரன்

## இன்னும் சில வழக்குகள்

நுவரெலியா புனித திருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் இருவர் அவர்களின் திடீர் இடமாற்றத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். அவ்வழக்குகளில் நுவரெலியா கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி, மாகாண கல்விச் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாண கல்வி அமைச்சரும், அவரின் அமைச்சு அதிகாரிகளும் இடமாற்ற ஒழுங்கு விதிகளுக்கு இணங்கவோ சட்டத்திட்டங்களுக்கு இணங்கவோ ஆசிரியர் இடமாற்றங்களை செய்யாது அவர்களது விருப்பு வெறுப்பிற்கு இணங்க செய்து வருவதாக ஏற்கனவே பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

நுவரெலியா புனித திருத்துவக்கல்லூரி ஆசிரியர்களான எம். ஏ. கபூர், வி. அரசரட்ணம் ஆகியோர் தாக்கல் செய்திருந்த மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு தகுதியானவை என ஏற்றுக் கொண்டுள்ளது.

அக்கல்லூரிக்கு புதிய அதிபர் ஒருவரை நியமிக்கும் போது மேற்படி இரண்டு சிரேஷ்ட ஆசிரியர்களும் தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கலாம் என்பதால் கல்வி அதிகாரிகள் மேற்படி இருவரை இடமாற்றம் செய்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

இடமாற்றம் ஒழுங்குவிதிகள். சட்டதிட்டங்கள் இடமாற்றச்சபை என்பன இருந்தென்ன பயன்? அதிகாரத்துவத்தின் முன்னாள் செயலிழந்து விடுகின்றன.

தற்போதைக்கு நீதிமன்றம் ஒன்றையே பாதிக்கப்பட்டவர்கள் நம்புகின்றனர்.

## நியமனத்தில் முறைக்கேடா?

நுவரெலியா மாவட்டத்தில் மிக அண்மையில் வழங்கப்பட்டுள்ள உதவிக்கல்வி அதிகாரிகள் நியமனத்தில் முறைக்கேடுகள் நடந்துள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்வித்தகுதி. சேவைக் காலம் என்பனவற்றை விட அமைச்சரின் அம்மையாரின் அனுதாபம் விசேட் தகுதியாக கொள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் சில படித்தவர்கள் மேலே மேலே போவதற்கு சாதி தொழிற்சங்கம், போன்றவற்றை தாராளமாகவே பகிரங்கப்பிரகடனம் செய்கின்றனர்.

## ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி மோசடி

மாணவர்களுக்கு உணவுக்காக ஒதுக்கப்படும் பணத்தை முழுமையாக பயன்படுத்தாது மோசடி செய்ததாக பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியின் சில கல்விசாரா உத்தியோகத்தர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மாணவர்களே அம்மோசடியை அம்பலத்திற்கு கொண்டு வந்தனர்.

விசாரணைக்காக கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் ஒரே அறையில் இரவு வேளையில் சந்தித்து விருந்துடனும் தண்ணி வெண்ணியுடனும் கலந்துரையாடியதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கொழும்பு கல்விச்சேவைகள் காரியாலய விசாரணையை விட சி.ஐ.டி. விசாரணை வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மோசடியில் ஈடுபட்டவர்களை விசாரித்து தண்டிக்க வேண்டுமென மாணவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். சத்தியாக்கரகம், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

## கூறியதையே கூறுகிறார்

தமிழகத்திலுள்ளவர்களுக்கு கூட இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் பற்றியோ அவர்களின் பிரச்சினை பற்றியே தெரிவதில்லை என்று அண்மையில் அமைச்சர் பெ. சந்திரசேகரம் கொழும்பிலுள்ள வியாபாரிகள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இதே கதையை அவர் 10 வருடங்களுக்கு முன்பும் கூறியதாக ஞாபகம் அப்போது கூறியதை ஏற்றுக் கொண்டவர்கள். இப்போது கூறுவதை கேட்டு முகம் சுளிக்கின்றனர், ஏனெனில் கடந்த 10 வருடங்களாக பதவியில் இருந்து கொண்டு மலையகத்தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏனையோருக்கு விளங்கப்படுத்தாமல் அமைச்சரும் அவரது தொண்டர்களும் என்ன செய்தார்கள் என்று கேட்கின்றனர்.

மலையகத்தமிழ் மக்கள் பற்றியும் அவர்களின் பிரச்சினைகள் பற்றியும் தமிழகமக்களும், நோர்வே நாட்டினரும் அறியாமல் இருக்கட்டும் அவர் அங்கம் வகிக்கும் அரசாங்கமே அவரின் பிரதமரோ அறிவாரா?

## கட்சி மாறிவிடுவாராம் கரு

மேல் கொத்மலை திட்டத்தை நடைமுறைப்படுத்தவிடாது அரசாங்கம் தடுத்தால் தான் கட்சி மாற வேண்டிவரும் என்று நீர்மின்சக்தி அமைச்சர் எச்சரித்திருப்பதாக பரவலாக பேசிக்கொள்கிறார்கள். மலையகத்தமிழ் மக்களின் குடிசன செறிவை சிதைக்கவும், வளமான நிலப்பரப்பை நீரில் மூழ்கடிக்கவும் இப்படி கங்கனம் கட்டவேண்டுமா என்ன? மக்களின் எதிர்ப்பு பதில் சொல்லட்டும்.

## இதயம் இல்லாதவர்கள்

கொட்டகலையை சேர்ந்த ஒரு தொழிலாளியின் குழந்தைக்கு இருதய சத்திர சிகிச்சை செய்வதற்கான நிதியை சேகரித்துக் கொடுப்பதில் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்த போதும் மலையகத்தில் பிரதான தொழிற்சங்கத்தலைமைகள் பாராமுகமாக இருந்துவிட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது. சத்திரசிகிச்சைக்கான செலவை ஈடு செய்வதற்கான ஜனாதிபதி நிதியிலிருந்தும், ஏனைய தனிநபர்களிடமிருந்து நிதியுதவிகளை பெறுவதில் கொட்டகலையையும், கொழும்பையும் சேர்ந்த இளைஞர்களே முன்நின்று உழைத்துள்ளனர்.

இதயம் இல்லாதவர்களுக்கு சிறு குழந்தையின் இதய வலியை புரிந்து கொள்ளமுடியுமா?

இருதய சத்திரசிகிச்சை போன்ற பாரதூரமான சிகிச்சைகளை செய்வதற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து எல்லோருக்கும் உதவி கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அத்தொகையை கொண்டு முழு செலவையும் ஈடுசெய்ய முடியாது. இவ்வாறான நிலையில் க்'டப்படுகின்ற தொழிலாளர் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு மேற்படி சிகிச்சைகளை செய்துகொள்வதற்கான மக்களின் பங்களிப்புடன் கூடிய மாற்றுத்திட்டங்கள் இருப்பது அவசியம்.

## வேலை நிறுத்தங்கள்

மலையக பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் பரவலாக வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டுவருகின்றனர். தினமும் வேலைநிறுத்தம் பற்றிய தகவல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

தொழிலாளர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் போதும் மறுக்கப்படும் போதும் தொழிலாளர்கள் அமைதியிழந்து வேலை நிறுத்தங்களில் ஈடுபடுகின்றனர். அதன் மூலம் பெருந்தோட்ட தனியார் கம்பெனிகள் அந்தளவிற்கு அடக்குமுறைகளை தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளன என்பதும் தொழிலாளர்களுக்கும் கம்பெனிகளுக்குமிடையிலான தொழிலுறவு ஓரளவாவது சுமுகமாக இல்லை என்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது.

தோட்டத்தொழிலாளர்களின் சங்கங்களோ மௌனம் காக்கின்றன. சில தலைவர்கள் அறிக்கை விடுகிறார்கள். தொழிலாளர்களுக்கு தெரியாமல், தொழிலாளர்களைப் பற்றி கவலைப்படாமல் கம்பெனிகளுடன் தொழிற்சங்கங்கள் செய்து கொள்ளும் கூட்டு ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே பல உரிமைகளை தொழிலாளர்கள் இழந்துள்ளனர்.

இந்நிலைமை தொடரும்போது தொழிலாளர்கள் புதிய தொழிற்சங்க வழிமுறைகளை. தேடிக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். அப்புதிய வழிமுறை தோட்டக்கம்பெனிகளின் சுரண்டல்களிலும், அடக்குமுறைகளிலும் இருந்து ஆகக் குறைந்தது தொழிலாளர்களை பாதுகாக்கும் அடிப்படைகளை கொண்டதாக இருக்க வேண்டும்.

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි Puthiya Poomi
சுற்று 10 ஒக்ரோபர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 62

எஸ்.47. 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## உலக வர்த்தக அமைப்பு (W.T.O) மாநாடும் படிப்பினைகளும்

உலக வரத்தக அமைப்பு என்று அழைக்கப்பட்ட போதும் செல்வந்த நாடுகளின் வர்த்தக அமைப்பாகவே செயற்பட்டு வருகிறது. செல்வந்த நாடுகள் அவற்றின் வர்த்தகத்தை வறிய நாடுகளில் இடையூறின்றி உறுதி செய்துகொள்வதுடன் வறிய நாட்டு வர்த்தகத்தை பலவீனப்படுத்தும் நோக்கத்துடனும் வியூகத்துடனுமே உலக வர்த்தக அமைப்பின் செயற்பாடுகள் இருந்து வருகின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன வறியநாட்டு அரசாங்கங்கள் விவசாயிகளுக்கும், கைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் மானியங்களை வழங்கக்கூடாது என்று நிபந்தனைகளை விதித்து வருகின்றன. அத்துடன் அரசாங்க பண்ணைகள் தொழில் முயற்சிகள் ஆகியவற்றை தனியார் மயமாக்க அழுத்தங்களை கொடுத்து வருகின்றன.

ஆனால் செல்வந்த நாட்டு விவசாயிகளுக்கும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பெருந்தொகையில் மானியங்களை அந்நாட்டு அரசாங்கங்கள் வழங்குகின்றன. அதனால் பொருட்கள் மிகையாக உற்பத்தி செய்யப்பட்டு வறிய நாட்டு மக்களின் நுகர்விற்காக திணிக்கப்படுகின்றன. அப்பொருட்கள் வறியநாடுகளில் குவிக்கப்படுவதால் வறியநாட்டு விவசாயிகளினதும் கைத்தொழில் ஈடுபட்டுள்ளோரும் உற்பத்திகளை கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இதனால் செல்வந்த நாட்டு மக்களுக்கும் வறியநாட்டு மக்களுக்கும் வாழ்க்கைத்தரத்தில் பாரிய வித்தியாசம் நிலவுகிறது. செல்வந்த நாடுகளின் பசு மாடுகளுக்கு இருக்கும் வசதி கூட வறிய நாட்டு மக்களுக்கு இல்லை என்று கொலம்பிய பல்கலைக்கழக பேராசிரியர் ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் என்பவர் ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐரோப்பாவில் ஒரு பசு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 2 அமெரிக்க டொலர் மானியமாக செலவிடப்படுகிறது. ஆனால் வறிய நாடுகளில் ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க டொலர் மட்டுமே மானியமாக செலவிடப்படுகிறது. இது வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட நிலைப்பாடாகும்.

இவ்வாறான நிலையில்தான் உலகவர்த்தக அமைப்பின் மாநாடு கடந்த மாதம் மெக்சிக்கோ நாட்டிலுள்ள கன்கூன் நகரில் நடைபெற்றது. இதில் 146 நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் கலந்துகொண்டனர். இம்மாநாட்டில் கலந்து கொண்ட வறியநாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் தங்களது நாட்டு ஏற்றுமதி வர்த்தகம் சீர்செய்யப்படுவதற்கு தடையாக ஏற்றுமதி வர்த்தகம் சீர்செய்யப்படுவதற்கு தடையாக இருக்கும் வரி முதலான கட்டுப்பாடுகளை செல்வந்த நாடுகள் இல்லாமலாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டோகாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்புக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி வறிய நாடுகளின் வர்த்தகத்தை சீர்செய்ய செல்வந்த நாடுகள் எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை. செல்வந்த நாடுகளிலிருந்து ஏற்றுமதிகளை செய்வதற்கான மானியங்கள் இரத்து செய்யப்படவில்லை.

செல்வந்த நாடுகள் அவற்றின் வர்த்தகத்திற்கு தேவையான எல்லா கட்டமைப்புக்களையும் வறிய நாடுகளில் அமைத்துக் கொண்டுள்ளன.

ஒரு காலத்தில் தாராள பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு மெக்சிக்கோ நாட்டையே உதாரணமாக காட்டினர். ஆனால் இன்று மெக்சிக்கோ அப்பொருளாதார முறையால் மிகவும் சீரழிந்து கீழ்நிலைக்கு சென்றுள்ளது. அங்கு நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பு மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து மெக்சிக்கோ மக்களும் ஏனைய நாட்டு அரசியல், வெகுஜன நடவடிக்கையாளர்களும் பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

செல்வந்த நாடுகள் வறிய நாடுகளையும், மக்களையும் சுரண்டிக் கொழுப்பதற்கே உலகவர்த்தக அமைப்பு வியூகங்களை அமைத்து செயற்படுகின்றன. இம்மாநாட்டின் மூலம் வறியநாட்டு வர்த்தக அமைச்சர்களினூடாக உலக வர்த்தக அமைப்பு அதன் நிகழ்ச்சி நிரலை முன்னுக்கு தள்ள அதற்கு சாதகமாக வறியநாட்டு வர்த்தக அமைச்சர்கள் இணங்கவில்லை.

உலக வர்த்தகத்தில் செல்வந்த நாடுகள் அவற்றின் பூரண கட்டுப்பாட்டை வைத்திருக்கும் நோக்கம் கொண்டுள்ளன. வறிய நாடுகள் அந்நாட்டு மக்களின் பட்டினி, வறுமை என்பனவற்றையும் அந்நாட்டு கிராம மக்களுக்கு தற்போதைய உலகவர்த்தகத்தினால் இழைக்கப்படுகின்ற சமூக அநீதிகயையும் ஒழிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளன.

இந்த எதிரிடையான நோக்கங்களும் மெக்சிக்கோ கன்கூன் மாநாட்டில் முட்டி மோதிக்கொண்டுள்ளன. செல்வந்த நாடுகள் அவற்றின் மிகை உணவு உற்பத்திக்கு சந்தை தேடுகின்றன. வறிய நாடுகளின் மக்களுக்கு நிறை உணவல்ல சாதாரண உணவிற்கான உத்தரவாதமே இல்லை.

வறிய நாட்டு கிராம மக்களின் உற்பத்தி உலக களியாட்டங்களில் வேடிக்கைக் குரிய பொருட்களாக இருக்க முடியாது. மாறாக உலக சனத்தொகையில் பல கோடிக்கணக்கான மக்களின் இருப்புடனும் வாழ்நிலையுடனும் சம்பந்தப்பட்ட குறியீடாகவே அவை அமைகின்றன. இவை மெக்சிக்கோ மாநாட்டு மண்டபத்திலும் வெளியிலும் எதிரொலித்துள்ளன. இதுவறிய நாட்டு மக்களுக்கு கிடைத்த ஆரம்ப வெற்றியாகும். உலகவர்த்தகம் என்பது செல்வந்த நாடுகளின் அக்கறைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருக்க முடியாது என்பது இடித்துரைக்கப்பட்டுள்ளது. வறிய நாடுகளின் வறுமைக்கு வறியநாட்டு உற்பத்தியாளர்களுக்கு இழைக்கப்படும் சமூக அநீதிக்குத் தீர்வு காண்பதில்அக்கறைக் கொள்ளாத எந்தவொரு வர்த்தக நடவடிக்கையும் வறியநாடுகளின் வர்த்தகத்திற்கு உதவாது.

ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் சர்வதேச நிறுவனங்களில் ஒன்றே உலக வர்த்தக அமைப்பாகும். அதற்கு எதிராக வறிய நாடுகள் குரல் எழுப்புவது என்பது ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான வறிய நாட்டு மக்களின் போராட்டமே ஆகும். அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஏனைய செல்வந்த நாடுகளும் அவற்றிற்கு வேண்டியவாறெல்லாம் உலக ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ள முடியாது என்பதை உணர்த்தும் இன்னொரு விதமான நடவடிக்கையாகவும் கொள்ள முடியும்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற சேவைத்துறைகளுக்கு அரசாங் கங்கள் வழங்கும் மானியங்கள் இரத்து செய்யப்பட்டு, அவற்றை தனியாரிடம் ஒப்படைப்பது சேவைத்துறைகள்ள வர்த்தகமயமாக்குவதாகும். வறிய நாடுகளுக்கு கடன் உதவி வழங்கும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் எல்லாவற்றையும் வர்த்தகமயமாக்கும்படியும் நிர்ப்பந்தித்து வருகின்றன. இதனால் வறிய நாடுகளில் அரசியல் பொருளாதாரம் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

இதனால் வறியநாட்டு அரசுகளுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைவதுடன் வறியநாட்டு அரசுகளின் இருப்பு கேள்விக்குட்படுத்தப் படுகிறது. அதனால் வறியநாட்டு அரசுகள் செல்வந்த நாட்டு அரசுகளுடன் மோதவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்த மோதலினால் செல்வந்த நாடுகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ள உலக வர்த்தகம் கேள்விக்குட் படுத்தப்படுகிறது. இறுதியில் ஏகாதிபத்திய உலகமயமாதலின் இயலாமையை தோலுரித்துக் காட்டி, உலக வளங்கள் நாடுகளிடையே சமமாக பங்கிடப்படுவதற்கு ஏதுவான ஒழுங்கை வேண்டி நிற்கிறது.

அந்த புதிய உலக ஒழுங்கை வென்றெடுப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படலாம். அதற்குப் பல போராட்டங்கள் அவசியமாகலாம். அவ்வொழுங்கை நிலைநிறுத்தும் வரை போராட்டங்களும் வறிய நாடுகளை பாதுகாப்பதற்கான பொதுவான உலகளாவிய ஏற்பாடுகளும். வறிய நாடுகளிடையே குறிப்பான மாற்று ஏற்பாடுகளும் அவசியமாகின்றன.

மெக்சிக்கோவில் நடைபெற்ற உலக வர்த்தக மாநாடு- செல்வந்த நாடுகள் எதிர்பார்த்தவாறன்றி முடிவடைந்ததிலிருந்து பாடங்களை கற்று வறிய நாடுகளும் வறிய நாட்டு மக்களும் முன்னேற இடமிருக்கிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது.

- ஆசிரியர் குழு -

# புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வும் தாயகத்தில் அதன் விளைவுகளும்

ஈழத் தமிழர்கள் மேற்குல நாடுகளுக்கு பெரும் தொகையினராகப் புலம் பெயர்ந்து இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இலங்கையின் போர்ச் சூழலில் வாழமுடியாது வந்தோம் எனப்பெயர்ப்பதிந்து வசிப்பிட சலுகைள பெற்று அகதிப் பெயரில் வாழ்ந்து வரும் நம்மவரின் வாழ்க்கை கஷ்டங்களும் துன்பங்களும் நிறைந்தவைகளாகும். அங்கு பெறும் சம்பளத்தைக் கொண்டு நிறைவான வழ்வையோ வெள்ளையர் வாழ்க்கைத் தரத்தையோ கொண்டிருக்க முடியாது. ஆனால் சொந்த நாட்டிற்கு பெறப்படும் சம்பளத்தில் ஒருபகுதி அனுப்பப்படும்போது அதன் பெறுமதி பல மடங்காகி அதிகரித்து நிற்பது மட்டும் தான் புலப்பெயர்வின் அதி உச்ச நன்மையாகக் கொள்ளப் படுகின்றது. அந்தப் பணம் பத்தொன்பது வருட கொடிய, யுத்த சூழலில் பட்டினிச்சாவு ஏற்படாது தடுப்பதில் பங்களித்திருக்கிறது.

இத்தகைய பணத்தை அதிகளவு சேர்ப்பதற்கு நம்மவர்கள் கடும் பனியிலும் நடுங்கும் குளிரிலும் ஒன்றுக்கு மூன்று வேலை தேடிச் செய்கிறார்கள். ஊண் உறக்கமின்றி பதினாறு பதினெட்டு மணிநேர வேலைகளில் மாறி மாறிச் செய்து கொள்கிறார்கள். சொந்த நாட்டில் தாழ்ந்த சாதித் தொழில் எனக் கூறி ஒதுக்கி வைத்த தொழில்களையெல்லாம் எல்லோரும் பணத்திற்காகச் செய்கிறார்கள். அதிக உடல் உழைப்பு இருபது வருடங்களுக்குப் பின் நம்மவர்களின் பெரும்பாலானோரை நோயாளிகளாக்கி வரும் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

முதலாளித்துவம் மனித வாழ்வை யந்திரமயமாக்கி விட்டது. அதிலும் இன்றைய நவீன தொழில் நுட்ப வளர்ச்சி மென்மேலும் யந்திரமயமாக்கப் பட்ட வாழ்வை வாழுமாறு நிர்பந்திக் கிறது. அதன் ஒரே குறிக்கோள் லாபம் லாபம் அதீத பணச்சேர்ப்புமேயாகும். முதலாளித்துவத்திடம் மனித நேயத்தை எதிர்பார்க்க முடியாது. இவர்கள் கொலனித்துவ காலம் முதல் இங்கு வந்து எம்மையும் எமது வளங்களையும் சூறையாடிச் சென்றனர். அதே எசமானர்கள் நமது நாட்டின் பிரச்சினைகளின் ஒரு பகுதியாகவும் பின்புலமாகவும் நின்று நம்மவர்களை தமது சொந்த நாடுகளுக்குப் புலம்பெயர வைத்து அவர்களைச் சுரண்டிக் கொழுத்து நிற்கின்றனர்.

ஈழத்தமிழர்கள் மேற்குலக முதலாளித் துவ நாடுகளிலே வாழ்ந்து வரும் வாழ்க்கை இரண்டும் கெட்டான் வாழ்க்கையாகும். முற்றுமுழுதாக வெள்ளையராக மாறமுடியாமலும் தமது இருப்புக்காக இசைவாகப்போக வேண்டியவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் அடுத்த தலைமுறையினர் அதற்கும் அடுத்த தலைமுறையினர் எவ்வாறு இருந்து விடப் போகிறார்கள் என்ற மிகப்பெரும் கேள்விக்குறி எழுந்து நிற்கவே செய்கிறது. இவை மட்டுமன்றி புலம்பெயர்ந்த தமிழர்கள் முன்னே பல முனைப் பிரச்சினைகள் எழுந்த வண்ணம் உள்ளன. அவை பரந்தும் ஆழ்ந்தது மான விவாதங்களுக்கு உட்படுவது அவசியம்.

நிற்க, புலம் பெயர்ந்த சூழலில் இங்கு இதுவரை அனுப்பிவைக்கப்பட்ட பெறுமதி அதிகரித்த பணத்தால் ஏற்பட்ட விளைவுகள் சிந்திக்கப்பட வேண்டியவைகளாகும். இருபத்தைந்து வருட தேசிய இன விடுதலைப் போராட்டம், அவற்றின் மத்தியில் தமிழர்களைக் கொடுமைப் படுத்திய யுத்தம், அதன் காரணமான உயர் இழப்புக்கள் உடமை அழிவுகள் இடப்பெயர்வுகள் நடந்தேறியவைகளாகும். இவற்றுக்கு ஆறுதலும் ஆதரவும் வழங்கும் வகையில் புலம் பெயர்ந்தவர்களின் உறவுகளும் சுற்றமும் அனுப்பிய பணம் பயன்பட்டிருக்கிறது. இன்றைய சமாதான சூழலுக்கும் மீளக் குடியமர்விற்கும் குறிப்பிட்ட தொகையினருக்கு கைகொடுத்து வருகின்றமை உண்மையேயாகும்.

அதேவேளை வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாத சொந்த உழைப்பைக் கொண்டு வாழுகின்ற மக்களைப் புறந்தள்ளவும் ஓரங்கட்டவும் இதே புலம்பெயர்ந்தவர்களின் பணம் ஒரு வலிய கருவியாகி நிற்பதையும் காண முடிகின்றது. பழமைவாதக் கருத்தியல்களையும், சிந்தனைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தவும் உள்ளவன் இல்லாதவன் என்ற ஏற்றத்தாழ்வை உறுதிப்படுத்தவும் இதே பணம் காரணமாகி நிற்கின்றது.

காணிகள் வீடுகள் வாகனங்கள் நகைகள் என்பவற்றைத் தேவைக்கதிகமாகப் போட்டிபோட்டு வாங்குவதில் புலம்பெயர்ந்தோரின் பணம் முன்னிலை

**வெகுஜனன்**

வகிக்கிறது. சீதனப் பேயை உருவேற்றி தலைவிரித்து ஆட வைப்பதில் அதே பணம் போட்டியிட்டு நிற்கிறது. இதனால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் திருமணத்தை இழந்து வரும் அவலம் வளர்ந்து செல்கிறது. வெளிநாட்டுப் பணம் பல லட்சங்கள் சீதனமாகி அதுவே குடும்ப அந்தஸ்தாகவும் மாறி நிற்கிறது.

கிராமங்களில் பெரும்பாலான வீடுகள் சதாரண நிலையிலும் கொட்டில் குடிசைகளுமாகக் காட்சி தர ஒரு சில வீடுகளோ கிராமியச் சூழலையும் மீறிய ஆடம்பர வீடுகளாக உயர்ந்து நின்று சாதாரண மக்களைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரிக்கின்றன. தேவை வேறு ஆடம்பர அந்தஸ்து வேறு என்பது புரிந்து கொள்ளப்படவில்லை.

ஊரின் கோயில்கள் எல்லாம் போட்டியிட்டு கோபுரங்களாக, மதில்களாக, புதிய புதிய கட்டிடங்களாக, வர்ண வர்ணப் பூச்சுக்களாக வளர்ந்து செல்கின்றன. அன்று பெரும் கோவில்களில் சாதிய சமதத்துவம் கோரிப் போராட்டம் இடம் பெற்றது. இன்று சிறு தெய்வ வழிபாட்டுக் கோவில்கள் எல்லாம் பெரும் கோவில்களாக மாற்றப் பட்டு ஆகம விதிகளால் கட்டிறுக்கப்படுகின்றன. சாதியக் கோவில்கள் கிராமங்களில் விரைவாக அதிகரித்த பணச் செலவுகளுடன் எழுந்து வருகின்றன.

சாதியம், பெண்ணடிமை, மூடத்தனங்கள், பழமைவாத நடைமுறைகள் போலிக் கௌரவங்கள் அந்தஸ்துக்கள், ஆடம்பர வைபவங்கள், அதிவிலை உயர்ந்த ஆடைகள் மற்றும் தங்க அணிகலன்கள் என்பன எழுந்து நிற்கின்றன. இவற்றுடன் இன்றைய சமாதான சூழலின் ஊடே வடக்கு கிழக்கு நோக்கிப் பாய்ந்து வரும் உலகமயமாதலின் கீழான அந்நியப் பொருள் மோக நுகர்வுக்கும் இதே பணம் தாராளமாக அள்ளி வீசப்பட்டு வருகின்றது. அதேவேளை இன்றும் அன்றாட வாழ்வோடு மல்லாடி அடிநிலை வாழ்வு வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படை நிலைகள் மாறாமலே இருந்து வருகின்றன. ஏற்றத்தாழ்வும் சமூக நீதி மறுப்புகளும் அனுபவிக்கும் மக்களாகப் பெரும் பான்மையான சாதாரண தமிழ் மக்கள் இருந்து வருகிறார்கள் என்ற உண்மை வெளியே கொண்டு வரப்படல் வேண்டும்.

மேற் கூறியனவற்றை கூர்ந்து நோக்கும் போது ஈழத் தமிழர்களின் எதிர்காலம் தாயக மண்ணிலும் சரி புலம் பெயர்ந்த மேற்குலக நாடுகளிலும் சரி எவ்வாறு அமையப் போகின்றது என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகின்றது. இந்த இடத்திலேதான் கொள்கை கோட்பாட்டின் தேவையும் அதன் நடைமுறைச் செயற்பாட்டின் அவசியமும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகக் காணப்படுகிறது. நமது சமூக வாழ்வின் அடிப்படைக் கருத்தியலும் சிந்தனைகளும் நடைமுறைகளும் நிலவுடமையின் ஊடாகப் பழமைவாதமாகப் பாதுகாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்தவைகளாகும். அவற்றை அந்நிய கொலனித்துவமோ அதன் பின்னால் வந்த முதலாளித்துவ வளர்ச்சி என்பதோ முட்டி மோதி அழிவுக்கு உள்ளாக்கவில்லை. எனவே பின்வந்த தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது கூட பேரினவாதத்தை ஆயுத முனையில் எதிர்த்து தீரத்துடன் போராடிய அளவுக்கு நிலவுடமை பழமைவாதக் கருத்தியலுடன் உரிய தளங்களில் போராடவில்லை. முற்றிலும் அவற்றுடன் சமரசமாகவே நடந்த கொண்டது. அது அது அப்படியே இருக்கட்டும் பின்பு பார்ப்போம் என்ற கொள்கையே பின் பற்றப்பட்டது. அதன் காரணமாக இன்று சாதியம் பெண்ணடிமை வர்க்க ஏற்றத்தாழ்வு மற்றும் பழமைவாதச் சிந்தனைகள் நடைமுறைகள்யாவும் போர் ஓய்வுச் சூழலில் மேலெழுந்து தத்தமது வழமையான செயற்பாடுகளில் வேகம் பெற்று நிற்கின்றன. இவற்றுடன் ஏகாதிபத்திய மறுகொலனியாக்க ஊடுருவல்கள் எவ்வித தயக்கமும் இன்றி தமிழர் சமூகப் பரப்பிலே நடைபெற்றும் வருகின்றன.

எனவே இவற்றுக்கு மாற்றாக எத்தகைய கொள்கைகள் எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் முன்வைக்கப்படப் போகின்றன என்பது எதிர்பார்க்கப்படும் பிரதான கேள்விகளாகும். தேசிய விடுதலைப் போராட்டங்களில் நிலவுடமை எதிர்ப்பும் எகாதிபத்திய எதிர்ப்பும் ஜனநாயகக் கோரிக்கைகளும் அடிப்படைகளாக இருந்து வந்துள்ளமையை வரலாற்றில் கண்டிருக்கின்றோம். நமது தமிழர் சமூகப் பரப்பிலே இவற்றை ஏவ்வாறு எதிர் நோக்கப் போகின்றோம். இது பற்றி தாயக மண்ணிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் உள்ள மக்கள் ஆழ்ந்து சிந்திப்பது இன்று அவசியமாகிறது.

ஊரின் கோவில்கள் எல்லாம் போட்டியிட்டு கோபுரங்களாக மதில்களாக புதிய புதிய கட்டிடங்களாக வர்ணவர்ணப் பூச்சுக்களாக வளர்ந்து செல்கின்றன. அன்று பெரும் கோவில்களில் சாதிய சமத்துவம்கோரிப் போராட்டம் இடம் பெற்றது. இன்று சிறு தெய்வ வழிபாட்டுக் கோவில்கள் எல்லாம் பெரும் கோவில்களாக மாற்றப்பட்டு ஆகம விதிகளால் கட்டிறுக்கப் படுகின்றன. சாதியக் கோவில்கள் கிராமங்களில் விரைவாக அதிகரித்த பணச் செலவுகளுடன் எழுந்து வருகின்றன.

சாதியம் பெண்ணடிமை மூடத்தனங்கள் பழமைவாத நடைமுறைகள் போலிக் கௌரவங்கள் அந்தஸ்துக்கள், ஆடம்பர வைபவங்கள் அதிவிலை உயர்ந்த ஆடைகள் மற்றும் தங்க அணிகலன்கள் என்பன புலம் பெயர்ந்த பணத்தின் விளைவுகளாக விரிந்து நிற்கின்றன இவற்றுடன் இன்றைய சமாதான சூழலின் ஊடே வடக்கு கிழக்கு நோக்கிப் பாய்ந்து வரும் உலகமயமாதலின் கீழான அந்நியப் பொருள் மோக நுகர்வுக்கும் இதே பணம் தாராளமாக அள்ளி வீசப்பட்டு வருகின்றது. அதேவேளை இன்றும் அன்றாடவாழ்வோடு மல்லாடி அடிநிலை வாழ்வு வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படை நிலைகள் மாறாமலே இருந்து வருகின்றன. ஏற்றத்தாழ்வும் சமூகநீதி மறுப்புகளும் அனுபவிக்கும் மக்களாகப் பெரும் பான்மையான சாதாரண தமிழ் மக்கள் இருந்து வருகிறார்கள். அத்தகைய மக்களின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து செயல்படுவதே உண்மையான சமூகச் சிந்தனையாக இருக்க முடியும்.

www.padippakam.com



# பேச்சுவார்த்தை இழுத்தடிப்பால் யாருக்கு நன்மை?

தமிழ்த் தொலைக்காட்சிகளில் வரும் 'மெகா' தொடர்களைப் போல அபத்த மான ஆனால் எதிர்பார்க்கக் கூடிய திருப்பு முனைகளுடன் கோமாளித் தனங்களுடனும் அமைதிப்பேச்சு வார்த்தைகள் இழுபட்டுக் கொண்டிருக் கின்றன. இதுவரை நடந்தவற்றை வைத்து நோக்குகிற போது, சில விடயங்கள் மிகவும் தெளிவாக உள்ளன. குறிப்பாக அந்நிய வல்லரசு களது நிலைப்பாட்டில் எந்தவிதமான தளம்பலும் இல்லை.

அமெரிக்காவும் அநேகமாக அதன் தூண்டுதலின் பேரில், இல்லாவிட்டால் அதன் பூரண அங்கீகாரத்துடன் யப்பானும் அமைதிப் பேச்சுவார்த்தை களுள் மறைமுகமாக நுழைந்துள்ளன. நோர்வே நாம் முன்பு அஞ்சியது போல அமெரிக்க நெருக்குவாரங்கட்கு உட் பட்டுச் சில காரியங்களைச் செய்கிறது என்றாலும் அமெரிக்கா மிரட்டும் தொனியிலும் யப்பான் கனிவாகவும் விடுதலைப்புலிகள் மீது செலுத்துகிற அழுத்தங்கள் போல நோர்வே அழுத்தங்களைச் செலுத்தவில்லை.

அமெரிக்கா விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமா என்பது அரசியல் ஆருடகாரரது பொழுது போக்குக்கு முக்கியமான அளவுக்கு அது இன்றைய அமைதிப் பேச்சுவார்த்தைகட்கு அதிகம் முக்கியமற்ற ஒரு விடயம். இலங்கை அரசாங்கத்தின் வற்புறுத்தல் இல்லாமல் அமெரிக்காவோ விடுதலைப்புலிகளைத் தடைசெய்துள்ள எந்த அயல் நாடுமோ அத்தடையை இப்போது மறுபரிசீலனை செய்யும் என்று நாம் எண்ண

## நிர்ப்பந்த சூழலிலேயே அரசாங்கம் பேச முன்வந்தது நியாயமான அரசியல் தீர்வை அது விரும்பவில்லை

இடமில்லை. இலங்கை அரசாங்கத்தின் நம்பகத்தன்மை (அதாவது இலங்கையில் அந்தந்த நாடுகளது நலன்களைப் பேணுவதற்கு இலங்கை அரசாங்கத் துக்கு இயலுமாக இருக்குமா என்ற விடயம்) மட்டுமே இலங்கை அரசாங் கத்தை மீறி அப்படி ஒரு முடிவை எடுக்க உதவும். ஆகவே அமெரிக்கத் தடை நீக்கத்துக்கான சட்டரீதியான முயற்சிகளுக்கு ஒரு சடங்காசாரமான பெறுமதிக்கு மேலாக எதுவும் இல்லை என்றே சொல்லவேண்டும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை யின் மூலம் எதிர்பார்க்க முடிந்த அரசியல் ஆதாயத்தை வைத்தே இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் இருந்துவந்துள்ளது என்பதை மாக்ஸிய லெனினியவாதிகள் 1987ல் இந்திய இலங்கை உடன்படிக்கை ஏற்படப் பல ஆண்டுகள் முன்பிருந்தே சொல்லியும் விளக்கியும் வந்துள்ளார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணயத்துடன் கூடிய சுயாட்சி பற்றி இந்தியாவின் ஆட்சியாளர்கட்கு உண்மையான அக்கறை இல்லை என்பது உடன்படிக்கை ஏற்பட்ட நாள் முதலாகத் தெளிவாகவே தெரிந்த விடயம். இலங்கைத் தமிழ் மக்களது உண்மையான விடுதலையை நாடுகிற எந்த ஒரு தலைமையும் இந்திய மேலாதிக்கத்துக்குப் பணிந்து போக முடியாது என்பது காரணமாகவே பல விதமான எடுபிடிகளை ஊக்குவிக்கிற காரியத்தில் இந்தியாவின் அதிகார நிறுவனம் முனைப்பாக இருந்து வந்தது. அத்தகைய ஒரு வலிய சக்தியை உருவாக்க இயலாத நிலையிலேயே சிங்களப் பேரினவாதிகளை ஊக்குவிக் கிற காரியத்தில் இந்தியாவின் சதிகாரச் சக்திகள் தீவிரமாயின.

இந்தியாவின் நோக்கங்கட்குச் சப்பைக்கட்டுக்கட்டுகிற ஈழத்துத் தமிழ்ச் செய்தி ஏடுகளும் அரசியல்வாதிகளும் என்ன சொன்னபோதிலும் இந்திய மேலாதிக்க வாதிகள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைக் குழப்புவ தற்கு உடந்தையாக உள்ள ஒவ்வொரு சக்தியையும் ஊக்குவிப்பதும் புதியவற்றை உருவாக்குவதும் பற்றிய உண்மை களை மூடி மறைக்க முடியாது.

இலங்கையில் தமது மேலாதிக்கத்தை நிறுவும் நோக்கத்துக்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்ற விடயத்தில் அமெரிக்காவையும் இந்தியாவையும் பொறுத்தவரை கருத்து வேறுபாடு கிடையாது. எனினும் விடுதலைப் புலிகளைப் பணிய வைப்பதற்கு அமைதிப் பேச்சுவார்த்தை களை அமெரிக்கா பயன்படுத்த முயல்கிறது. இந்தியா பேச்சுவார்த்தை களைக் குழப்புவதன் மூலம் விடுதலைப் புலிகளை அழிக்க விரும்புகிறது. இந்தியாவின் தலையீட்டை வரவேற்று அல்லது கோரி வெளியிடப்படுகிற ஒவ்வொரு அறிக்கையும் இந்தியாவின் தூண்டுதலின் பேரிலேயே வெளியா கிறது என்ற கருத்து வலுப்பெறத் தொடங்கியுள்ளது.



முன் குறிப்பிட்ட பின்னணியிலேயே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை யின் தீர்வுக்கான முயற்சிகளின் இன்றைய தேக்க நிலையைக் கவனிக்க வேண்டியுள்ளது. இலங்கையின் எந்தப் பேரினவாத அரசாங்கமும் தானாக மனம் விரும்பித் தேசிய இனப்பிரச்சினை க்கு ஒரு நியாயமான தீர்வை வழங்க முன் வந்ததில்லை. பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன் படிக்கை, டட்லி சேனநாயக்க செல்வநாயகம் உடன் படிக்கை என்பன தமிழ் மக்களின் தலைமையின் அரசியல் வலிமையை விடப் பேரினவாதிகளது வலிமை பெரிது என்று தெரியவந்த போது கிழித்தெரியப் பட்டன.

ஒடுக்குமுறையாளர்கள் தாமாகவே நியாயமான தீர்வை நாடி வருவதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களது கிளர்ச்சிக்கு அஞ்சிச் சலுகைகளை வழங்கிச் சமாளிப்பார்கள். ஆனால் நியாயமான உரிமைகளை வழங்கமாட்டார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்து எழும் போது அதை வன்முறையால் அடக்க முயல்வதும் அது இயலாத போது

## அமெரிக்கா மிரட்டிப் பேசுகிறது யப்பான் கனிவாகக் கதைக்கிறது

பேச்சுவார்த்தைக்கு இணங்கி வருவதும் தான் மனிதஇனத்தின் விடுதலைப் போராட்டங்களின் வரலாறு. எனவே யூஎன்.பி.அரசாங்கம் தமிழ்மக்கள் மீதான கருணையினால் அமைதியான தீர்வை நாடுகிறது என்று நம்புவது பேதமை.



பேரினவாதிகள் தொடக்கிவைத்த போரின் விளைவாக ஏற்பட்ட பொருளா தார நெருக்கடியின் விளைவாகவே பொதுசன முன்னணியும் யூஎன்.பி அரசாங்கமும் அமைதியான தீர்வை நாடின. ஆயினும் அவர்களின் அக்கறை போர் நிறுத்தமும் அதன் மூலம் கிடைக்கக் கூடிய வெளிப் பொருளா தார ஆதரவும் அந்நிய முதலீடு என்பதற்கும் மேலாக எதுவாகவும் இருந்ததில்லை. தென்னிலங்கை மக்களுக்குப் போர் அலுத்துவிட்டது. இதனாலேயே அமைதிக்காக முயல்வ தாக காட்டும் தேவை இரண்டு பெரிய கட்சிகட்கும் இருந்து வந்தது.

எனினும் அமைதி மூலம் ஒருகட்சிக்கு அரசியல் ஆதாயம் கிடைப்பதை மறுகட்சி விரும்பவில்லை. அமைதியான தீர்வு பற்றிப் பேசிக்கொண்டே எதிர்க் கட்சி அமைதிக்கான முயற்சிகளைக்



குழப்ப முயலுவதை நாம் திரும்பத் திரும்பக் கண்டு வந்திருக்கிறோம்.

பொதுசன முன்னணி பேரினவாத ஜே.வியுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் குழம்புவதற்குப் பொதுசன முன்னணி தேசிய இனப்பிரச்சனையில் அமைதி யான தீர்வு பற்றி உறுதியாக இருப்பது தான் காரணம் என்றால் ஜே.வி.பியுடன் தீர்த்திருக்க வேண்டிய முதலாவது முரண்பாடாக அது அமைந்திருக்க வேண்டும். ஆனாலும் அந்தக் கருத்து

## ஜே. வி. பி–பேரினவாதப் பிரச்சாரத்தை முறியடிக்க தீர்வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை

வேறுபாடு இருக்கத்தக்கதாகவே கூட்டணி அமைப்பதற்கு இரு தரப்பினரும் ஆயத்தமாக இருந்தனர். எனவே ஜே.வி.பியுடனான கூட்டுக்கு எதிரான வேறு அழுத்தங்களும் இருந்திருக்கலாம். குறிப்பாகச் சனாதிபதி மீது அமெரிக்காவின் நெருக்குவாரம் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

அமைதிப் பேச்சுவார்த்தைகட்கு எதிரான பிரசாரம் ஜே.வி.பியினரால் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு



வருகிறது. அதற்கு உறுதுணையாக பொதுசன முன்னணியின் சில முக்கிய தலைவர்கள் செயற்படுகிறார்கள். நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தமான முறையில் விடுதலைப் புலிகளின் ராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் அரசாங்கம் கையைக் கட்டிக் கொண்டிருப்பதாகவும் பிரசாரம் பலவேறு மட்டங்களில் நடைபெறுகிறது. விடுதலைப் புலிகள் இந்தியாவுக்கு எதிரான ராணுவ மிரட்டலாக வளர்ச்சி பெறுவதாகக் கதிர் காமர் செய்த பிரசாரமும் பாதுகாப்புப் போதாது என்று அவர் அண்மையில் முன்வைத்த தகவல்களும் அமைதியைக் குழப்புவதற்குச் சனாதிபதியின் அங்கீகாரத் துடன் தான் முன்வைக்கப்பட்டன.

போர் நிறுத்தம் பற்றி ஆயுதப்படைகளின் உயிர் அதிகாரிகள் பலருக்கு என்றுமே உற்சாகம் இருந்ததில்லை.



அமைதியைக் குழப்புவதற்கான பல்வேறு முயற்சிகள் ஒருபுறம் இருக்க, திட்டமிட்ட முறையில் சிங்களமயமாக்கல் பணிகள் வடக்கு கிழக்கின் அமைதிச் சூழலில் தொடர்கின்றன. இவை பற்றி எந்த விதமான கவனமும் அரசாங்கத்திடம் இல்லை.

தமிழ் முஸ்லிம் முரண்பாட்டைப் பகை முரண்பாடாக வளர்த்தெடுப்பதற்குக் கிழக்கின் முஸ்லிம் தலைமைகளை வெகு எளிதாகவே பயன்படுத்தும் காரியத்தைப் பொதுசன முன்னணியும் பிற விஷமிகளும் முன்னெடுத்து வருகின்றனர். இதில் தமிழ்த் தலைமை கள் பிரச்சனைகளைக் கையாளும் விதம் பற்றி நாம் விமர்சிக்கும் அதே வேளை, இனப் பகையைமூட்டும் விஷமத்தனம் பற்றிப் பேசாமலிருக்க முடியாது.

அமைதிக்கான முயற்சிகளைக் குழப்பு கிற சக்திகள் யார் என்பது அரசாங்கம் அறியாத விடயமல்ல. அவர்களுடைய நடவடிக்கைகள் பற்றியும் அரசாங்கம் அறியாமல் இல்லை. ஜே.வி.பியின் பிரசாரம் முதல் கிழக்கின் அசம்பாவிதங் கள் வரையான யாவுமே அமைதிப் பேச்சுக்கட்குப் பாதகமானவையே. இவற்றில் சிலவற்றைத் தடுக்க அரசாங்கம் போதியளவு முயன்றதாகக் தெரியவில்லை. அதைவிட முக்கியமாக அமைதிக்கு எதிரான ஜே.வி.பி பிரசாரத்துக்கு எதிராக மக்களிடையே அமைதிக்கு ஆதரவான பிரசாரத்துக் கான எந்த முயற்சியும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டதாகக் கூற முடியாது.

அரசாங்கம் இன்று தனது படைப்



பலத்தை வலுப்படுத்திவருகிறது. அதன் ஆயுத வலிமையை அதிகப்படுத்து வதற்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்தியாவும் உதவுகின்றன. இலங்கை அரசாங்கத்துடன் தனது செல்வாக் கைப் பேணுவதற்காக பாகிஸ்தானும் உதவுகிறது. இலங்கையில் அமெரிக் காவும் இந்தியாவும் தமது இராணுவ நோக்கங்களை நிறைவு படுத்துவதைத் தடுக்க முடியாவிட்டாலும் தனது செல்வாக்கைப் பேணுவதற்காகச் சீனாவும் பாதுகாப்பின் பேரில் போர் உபகரணங்களைச் சலுகை விலைகளில் வழங்கிவருகிறது. பங்களாதேஷ் ராணுவ அதிகாரி கூட இங்கு வருகை தருகிற அளவுக்கு இலங்கை அரசாங் கம் தனது இராணுவ உறவுகளையும் பலப்படுத்திக் கொண்டு வருகிறது. போர் நிறுத்தம் எவ்வளவு நிரந்தரமானது என்ற நிச்சயமின்மையின் பின்னணியில் இதற்காக அரசாங்கத் தைக் குற்றம் சொல்ல முடியாது. ஆனால் அதே நியாயம் விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தும் அல்லவா.

விடுதலைப்புலிகள் எதிர்பார்த்த வேகத்தில் தேசிய இனப்பிரச்சனையின் முக்கியமான விடயங்கள் பற்றி எதுவுமே பேசப்படாத கிளையிலேயே பேச்சுவார்த் தைகளை அவர்கள் இடைநிறுத்த நேர்ந்தது. அமைதிப் பேச்சுவார்த்தை களை அயல் உதவிக்கான தந்த ரோபாயமாகவே அரசாங்கம் பயன் படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் சந்தேகிப்பதில் நியாயம் இருக்கலாம். பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகியதன் மூலம் அவர்கள் தமது வெறுப்பைத் தெரிவித்ததன் மூலம் அரசாங்கத்தை இடைக்கால நிர்வாகம் பற்றிப் பொறுப் புடன் சிந்திக்கத் தூண்டினார்கள். அதன் இன்னொருவிளைவாக விடுதலைப் புலிகளது கோரிக்கைகள் நாட்டைத்துண்டாடும் நோக்கினவை எனவும் காட்டின் பாதுகாப்புக்குத் தீங்கானவை எனவும் பிரசாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஜே.வி.பி பொதுசன முன்னணி பேச்சுவார்த்தை கள் முடங்கிவிட்டாலும் இடைக்கால நிர்வாகத்தை முறியடிப்பதற்கான பணிகளில் இரண்டு கட்சிகளும் இன்னமும் ஒரே வேகத்துடன் தான் செயற்படுகின்றன.

விடுதலைப்புலிகள் தமது மாற்று ஆலோசனைகளை முன்வைப்பதற் காகக் கோரியுள்ள நீண்ட அவகாசம் அவர்களும் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதில் முனைப்பாக இருக் கிறார்களோ என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. குறிப்பாக அமைதிச் சூழலுக்குப் பழக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் மனதில் பேச்சுவார்தைகளின் போக்குப் பற்றிய அச்சங்கள் கூடிவருகின்றன.

விடுதலைப்புலிகளது அரசியல் நோக்கம் இனப்பிரச்சனைக்கு அமைதியான தீர்வு என்ற விடயத்தில் அரசாங்கத்தின் நம்பகத் தன்மையைச் சர்வதேச அரங்கில் கேள்விக்குட்படுத்துவதும்

– மோகன் –

தான் என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனாலும் இதன் விளைவாக இலங்கை அரசாங்கத்தை எவ்வாறு சர்வதேச ரீதியாகத் தனிமைப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுகிறது. இன்று இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை யின் தீர்வு பற்றி அக்கறைகாட்டுகிற முக்கியமான ஒவ்வொரு நாடும் இலங்கையின் ஆளும் அதிகார வர்க்கத் துடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. எனவே அவற்றிட மிருந்து பெரியளவில் எந்தவிதமான சலுகைகளும் விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கப் போவதில்லை.

விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முன்வைக்கிற யோசனைகளை அரசாங்கம் முழுமை யாக ஏற்குமானால் அவற்றை நடை முறைப்படுத்துவற்கு எதிரான பிரச்சனைகள் பெரிதாகவே இருக்கும். எனவே ஒருசில விட்டுக்கொடுப்பு களுடனேயே இடைக்கால நிர்வாகம் பற்றிய விடுதலைப்புலிகளின் ஆலோசனைகள் அரசாங்கத்துடன் உடன்பாட்டுக்கு வர இயலுமாயிருக்கும். பேச்சுவார்த்தைகள் இவ்வளவு காலமாக இழுத்தடிக்கப் பட்டதன் விளைவாகத் தமிழ்மக்கள் மனதில் ஏமாற்றமும் எதிர்காலம் பற்றிய அச்சங் களும் மீண்டும் அதிகமாகி வருகின்றன. அவற்றைத் தணிப்பதில் விடுதலைப் புலிகட்கு ஒரு முக்கியமான பொறுப்பு உண்டு.

எந்தப் பேச்சுவார்தையும் பூரணமான பரஸ்பர நம்பிக்கையின் பேரிலே பூரணமான அவநம்பிக்கையுடனோ நடந்ததில்லை. எனவே ஒரு புறம் பல்வேறு நோக்கங்களுடன்

தொடர்ச்சி 12ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# உலக வர்த்தக அமைப்பு (WTO) யாருக்காக?

ஆபிரிக்காவில் இயங்கும் ஒரு நிறுவனத்தின் இயக்குனரும் உகாண்டா நாட்டின் உத்தியோக பூர்வ பேராளருமான பேராசிரியர் யாஸ் ராண்டன் டோகா கட்டாரில் இடம்பெற்ற உலக வர்த்தக அமைப்பின் நான்காவது அமைச்சர்கள் மகாநாட்டின் போது 'பச்சை அறை' க் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அப்போதுதான் பணக்காரனுக்கு ஒரு சட்டம் ஏழைக்கு ஒரு சட்டம் என்பதை விளங்கிக் கொண்டார் பேராசிரியர்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் உலக வர்த்தக அமைப்பு வெளிப்படையானதும் ஜனநாயக ரீதியானதுமாகும். அதன் முன்னாள் இயக்குனர் நாயகம் மைக் மூர் 'இன்று உலகில் இருக்கும் மிகவும் ஜனநாயக வழியில் இயங்கும் அனைத்துலக நிறுவனம்' என ஒருதடவை புகழ்பாடியிருந்தார்.

உலக வர்த்தக அமைப்பு நாடுகள் மீது எதையும் திணிப்பதில்லை. எங்களுடைய உடன்பாட்டை ஏற்று ஒப்பமிடுமாறு நிர்ப்பந்திப்பதில்லை' யெனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். 'உலக வர்த்தக அமைப்பின் ஒவ்வொரு சட்ட விதியும் அங்கத்துவ அரசாங்கங்களால் கலந்துரையாடப்பட்டு ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.'

மேற்கண்டவாறு தெரிவித்த மூர் பிறிதொரு தடவை 'செல்வாக்கைப் பொறுத்தமட்டில் சில அங்கத்தவர்கள் கூடிய செல்வாக்கைப் பிரயோகிக் கின்றனர்' என்பதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டார்.

உலக வர்த்தக அமைப்பில் 'ஜனநாயகம்' என்பது வெறும் வார்த்தை மட்டுமே என தென்பகுதி நாடுகளின் பேராளர்கள் தெரிவித்தனர்.

உலக வர்த்தக அமைப்பில் 'பச்சை அறை' முறை என்பது மிகவும் மோசமான முறையென அனைவரினதும் கண்டனத்திற்குள்ளாகிறது. 'பச்சை அறை' கூட்டங்களுக்கு செல்வாக்கான அங்கத்துவ நாடுகளே அழைக்கப்படும். அங்கேயே மூடிய கதவுகளுக்குள்ளேயே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

உலக வர்த்தக அமைப்பின் டோகா



மகாநாட்டின் கூட்டத்திற்கான சிம்பாவே நாட்டின் பிரதிநிதி பொனிபேஸ் சிட்யாயுசிக் 'பச்சை அறை' க்கூட்டம் பற்றி பின்வருமாறு கூறினார்.

'அது மாபியா பாணியிலேயே இயங்குகிறது. எனது அமைச்சர் உத்தியோக ரீதியாக கலந்துரையாடலுக்கு அழைக்கப்படாததால் அவரால் பேச முடியாது. அவர் தனது சகாக்களுக்கு குறிப்புக்களை மட்டுமே அனுப்பமுடியும்.'

பல ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் நின்று பிரயோசனமில்லையென உணர்ந்து தமது ஹோட்டல்களுக்குத் திரும்பினர். 'ஒரு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை இவ்வாறு கேவலப்படுத்துவதும் கதவடியில் காத்துநிற்க வைப்பதும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதென ஒரு பிரதிநிதி தெரிவித்தார்.

'பச்சை அறை' க் கூட்டங்கள் மட்டும் அழைப்பின் பேரில் இடம் பெறுவதல்ல. முழு மகாநாடுகளே ஒரு ' சில நாடுகளின் அரசாங்க அமைச்சர்கள் மட்டும் கலந்து கொண்டு முன் கூட்டியே உடன் பாடுகளைத்தயாரித்து விடுகின்றனர்.

'அழுத்தங்கள்' பலவிதம். சக்திமிக்க நாடுகள் உதவிகளை வெட்டி விடுவோம் எனப்பயமுறுத்தக் கூடும் அல்லாவிடின் புதிய பணத்தை லஞ்சமாகக் கொடுக்கவும் கூடும். செப்டம்பர் 11ம் திகதிக்குப்பின் பாக்கிஸ்தானுக்கு உதவிப் பொதியாக அமெரிக்கா நூறு கோடி டொலர்களை வழங்கியது – டோகா மகாநாடு நிறைவு பெற்ற அடுத்த நாளே இது வழங்கப்பட்டது. பல முறைப்பாடுகளைச் செய்த தன்சானியாவுக்கு டோகா மகாநாடு முடிந்த ஒரு வாரத்தில் பாரிய தொகையை முன்னைய கடனை மீள் செலுத்துவதற்காக உலக வங்கி யும் சர்வதேச நாணய நிதியமும் வழங்கியது.

செப்டம்பர் 11ம் திகதிக்குப்பின் இரண்டு மாதங்களுக்குள் டோகா மகாநாடு இடம்பெற்றது. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது பேரம் பேசுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. புதிய வர்த்தக சுற்று பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்க உதவும் என்பதால் எந்த ஒரு நாடும் இதனை எதிர்க்காதென்ற நம்பிக்கையை அமெரிக்க வர்த்தக பிரதிநிதி நோபேட் சோலிக் வெளியிட்டார்.

டோகா உடன்பாடானது உலக சமூகம் பயங்கரவாதத்திற்கு எதிராக வர்த்தகத்தையும், ஆயுதங்களையும் பயன்படுத்துவதில் திடசங்கற்பத்தை வெளிக்காட்டுவதாக பிரிட்டனின் வர்த்தக, கைத்தொழில் செயலாளர் பற்றீசியா ஹேவிற் தெரிவித்திருந்தார்.

'கஷ்டமான' தென்பகுதி நாடுகளின் பிரதிநிதிகளை நேரடியாகவே மிரட்டுவது ஒரு வழி. ஒரு வளர்ச்சியடையும் நாடுகளுக்கு உலக வர்த்தக அமைப்பின் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளப்பிரதிநிதிகளை அனுப்புவது கூட ஒரு பெரிய சுமை. இந்த உலக வர்த்தக அமைப்பு வருடத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டங்களை நடாத்துகிறது. சில கூட்டங்கள் ஒரே சமயத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெறும். சகல கூட்டங்களிலும் பங்குபற்ற வேண்டுமாயின் ஒவ்வொரு நாடும் பெரும் எண்ணிக்கையான பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். ஐரோப்பிய ஒனறியம் டோகா மகாநாட்டிற்கு ஐநூற்றி இரண்டு (502) பேரை அனுப்பியிருந்தது. சின்ன நாடான மாலை தீவினால் இரண்டு பேரை மட்டுமே அனுப்பமுடிந்தது. மிகவும் வறியநாடான கெயிட்டி ஒரு பிரதிநிதியைத்தானும் அனுப்பமுடியவில்லை.

'தினமும் இரவுபகலாக கண்விழித்து பேரம் பேசுவதென்பது மிகவும் கஷ்டமான விடயம். செல்வந்த நாடுகள் ஏகப்பட்ட பிரதிநிதிகளை அனுப்பி தாம் விரும்பியதைச் சாதிக்கிறார்கள். இது மட்டுமல்ல மகாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் ஆங்கிலத்திலேயே இடம்பெறுவதால் பின் தங்கி நாடுகளின் பிரதிநிதிகள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் பெரும் சிரமப்படுகின்றனர்.' என ஆபிரிக்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

டோகா மகாநாடு ஐந்தாம் நாள் முடிந்ததும் வளர்முகநாடுகளின் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் ஆகக் குறைந்த மலிவான விமானப் பயணத்தைப் பதிவு செய்து புறப்படத் தொடங்கினர். அப்போது எதுவித உடன்பாடும் ஏற்பட்டிருக்கவில்லை.

அவர்களில்லாமலே மகாநாட்டை நீடிப்பதென முடிவுசெய்தனர். ஆரம்பத்தில் மகாநாடு முடிவடையவிருந்த தினத்திற்கு அடுத்தநாளே மாதிரிப்பிரகடனம் திணிக்கப்பட்டது.

முன்னைய டோகா மாநாட்டிற்குப்பின் அண்மையில் மெக்ரிகோவில் கான்குன் நகரில் நடந்த மாநாட்டில் அமெரிக்க – ஐரோப்பிய நாடுகளால் தமது நலன் சார்ந்த முடிவுகளுக்கு வரமுடியாமல் போனமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலக வர்த்தக அமைப்பு காருண்யம் மிக்க நன்கொடையாளர்கள் அல்ல என்பதை ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படையாகவே கூறியது. ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிககாவும் உலகின் வறிய நாடுகளிடமிருந்து மேலும் மேலும் தங்கு தடையற்ற சுரண்டலை தொடர்வதற்கே உலக வர்த்தக அமைப்பு பயன்படுத்தப்படுகிறது.

– பொருளியல் நிருபர் –

# ஏகாதிபத்தியமும் பெண்களும்



**பெண்கள் மீதான ஒடுக்குமுறை ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தளத்தோடும் அதன் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்துடனும் பின்னிப் பிணைந்திருக்கவில்லையா?**

இந்த அத்தியாயம் பிரதானமாக ஏகாதிபத்தியமும் மூன்றாமுலகப் பெண்களும் பற்றியது. புரட்சிகரப் பெண்களான நாம், உலகில் நாம் வாழும் பகுதி பற்றிய விடயங்களைச் சேகரித்து ஆராய்ந்த பிறகு, இந்த ஆய்வு, பெண்களின் போராட்டம் என்ற ஒரு துணைப் பிரிவுக்குமட்டுமன்றி நமது பொதுவான மூலோபாயத்துக்கும் முக்கியத்துவம் உடையது என்ற முடிவை அடைந்தோம். ஆனால், மூன்றாம் உலகிலும் பெண்கள் மீதான ஒடுக்குமுறை இல்லையா? பெண்கள் மீதான ஒடுக்குமுறை ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தளத்தோடும் அதன் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்துடனும் பின்னிப்பிணைந்திருக்க வில்லையா? பெண்களின் நிலைமை பற்றிய ஆய்வு, பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு மூலோபாயத்துக்கு அவசியம் முக்கியத்துவமுடையதாக இருக்கும் என்று பொருட்படாமல் இருக்குமா?

இது பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய ஆய்வொன்றை வழங்க நான் முயலவில்லை. அவ்வகையான ஆய்வொன்றை நடத்துவதும் அதன் அரசியல் விளைவுகள் பற்றிய முடிவுகளை வந்தடைவதும் இந்த நூலின் எல்லைகளை உடைத்துச் சென்றுவிடும். எவ்வாறாயினும், சில அம்சங்களை முன்வைத்து எதிர்காலத்தில் தொடர்ந்து கலந்துரையாடுவதற்குத் துணையாகப் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறேன்.

கொடியதொரு கூட்டிணைப்பு

உணவுக்கும் விவசாயத்துக்குமான ஐ.நா அமைப்பு (எஃப்.ஏ.ஓ), நைரோபியில் 1985ல் நடந்த பெண்கள் மாநாட்டுக்காகத் தயாரித்த அறிக்கையில், 'பெண்கள் – ஒரு உலக அறிக்கை 1985' என்ற ஆவணத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு பின்வருவனவற்றைக் கூறுகிறது:

1) பிரதான உற்பத்தி மூலவளங்களையும் சேவைகளையும் பெண்கள் அணுகும் வாய்ப்பு முன்னேறாத வரை மூன்றாமுலகின் விவசாய உற்பத்தித் திறனைக் கணிசமாக உயர்த்தவோ கிராமிய வறுமையைத் தணிக்கவோ முடியாது. விவசாய உற்பத்தித்திறன் மீது தந்தை வழிச் சமூக அமைப்பின் பாதிப்பிற்கான விலை மிக அதிகம். இப்பெரும் விலையை விருத்தியடைந்துவரும் நாடுகளாற் தாங்க இயலாது.

2) இவ்வாறு எஃப். ஏ.ஓ, உணவுப் பஞ்சப் பெருங்கேட்டைப் பெண்கள் மீதான ஒடுக்குமுறையுடன் தொடர்புடுத்தி யுள்ளது. பெரும்பான்மையான மூன்றாமுலக நாடுகளிற் பெண்கள் முக்கியமான உணவு உற்பத்தியாளர்களாகவும் சிலவற்றில் அதி முக்கியமானவர்களாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. விவசாயம் செய்வது பெண்களுக்கும் கடினமாகும் போது அது சனத்தொகையின் உணவு ஊட்ட நிலைமையில் உடனடியாகவே தென்படுகிறது. பின்வருமாறான நிலைமைகள் பற்றியும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

- மூ விவசாயத்தை நவீனப் படுத்தும் முனைப்புடைய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் வழமையாக ஆண்களை இலக்காகக் கொண்டன. திட்டமிடு வோரும் நிபுணர்களும் பெண்களை 'மங்களகரமான ஒரு பார்வை' கொண்டு தாய்மாராகவும் மனைவியரா கவுமே நோக்குகின்றனர். இவ்வாறு பெண்களின் விவசாய உழைப்பு கண்ணுக்குப் புலனாகாது போகிறது. உதாரணமாக, ஆபிரிக்காவில் இது பெரும்பாலான உண்மையான விவசாயிகளான பெண்களை விவசாய அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து ஒதுக்கி விடுகிறது.
- விவசாயத்துக்கு ஒதுக்கப்படும் வரையறுக்கப்பட்ட நிதியில் அனேகமாக எல்லாமே ஆண்களிடம் போகிறது.
- 'முன்னேற்றம்' வரும்போது, ஆணே குடும்பத்தலைவனாகப் பதியப்பட்டு காணிக்குச் சொந்தக் காரனாவதால், நிலத்தை உடைமையாக்கி நிலத்தில் உழைக்கும் பாரம்பரிய உரிமை பெண்களிடமிருந்து பறித்தெடுக்கப்படுகிறது.
- தங்கியிருக்கின்றனர். பெண்களின் வேலைப்பளு மிகப்பெரி தாகி அதுவே பசிக்கும் போஷாக்கின்மைக்கும் காரணமாகிவிடுகிறது.

ஸம்பியா, கானா, பொற்ஸ்வானா, ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி, அறுவடையின் அளவு நிலத்தால் வழங்க முடிந்ததில் தங்கியிருக்கவில்லை. அது பகல் வெளிச்சத்திற் பெண்களால் எவ்வளவு வேலை செய்ய முடிந்தது என்பதிலேயே தங்கியிருந்தது. கானாவில் வேலைப் பளுவின் அதிகரிப்பின் விளைவாகப் பெண்கள் பாரம்பரியக் கிழங்கு வகைகளுக்குப் பதிலாக வளர்ப்பதற்குக் குறைய உழைப்பை வேண்டி நின்றவையான சத்துத் 'தன்மை குறைந்த மரவள்ளிச் செய்கையில் ஈடுபட்டனர்.

விருத்தியடைந்து வரும் நாடுகளாற் தாங்க இயலாத பெருஞ்சுமை என்று எஃப்.ஏ.ஓ தந்தைவழிச் சமூக அமைப்பைக் குறிப்பிடும் போது அப்பார்வை மிகவும் குறுகலாக அமைந்து விடுகிறது. மரபுசார்ந்த வாழ்க்கைப் பங்கு வடிவங்களையும் அதிகாரச் சமநிலைகளையும் ஏகாதிபத்தியம் பயன்படுத்தும் போதே விளைவுகள் மிக ஆபத்தானவையாகின்றன.

ஏகாதிபத்தியம் தனது சொந்தப் பொருளாதார நலன்கட்கு அமைவான 'அபிவிருத்தி முன்மாதிரி' ஒன்றிற்கு பல மூன்றாமுலக நாடுகளைக் கட்டாயப் படுத்திப் புகுத்தியுள்ளது. பொருளாதார விருத்தி பெற்ற நாடுகளிற் பயன் படுவதற்காக ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுத்தரவல்லதான உலகச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கான மூல திரவியங்களை உற்பத்தி செய்வதே இவ் 'அபிவிருத்தி முன்மாதிரி கடனாகவோ 'உதவி' என்ற பேரிலோ வரும் 'மூலதன இறக்குமதி மூலம் அபிவிருத்தி' இதற்குப் பக்கத் துணையாகிறது.

ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தில் இந்த 'அபிவிருத்தி முன்மாதிரி' பல நன்மைகளையுடையது. அது விருத்தியடைந்துவரும் நாடுகளை உலகச்சந்தையின் நுகர்பொருட் பொருளாதாரத்திற்கு ஈர்க்கிறதுடன் ஏகாதிபத்திய நாடுகட்கும் புதிய சந்தைகளையும் திறந்துவிடுகிறது. அபிவிருத்திக்கான உதவி பற்றிய கொள்கை, பிற விடயங்கட்கு நடுவே, 'கொடையாளி நாட்டுக்குப்' புதிய சந்தைகளைத் திறந்து விடுவதற்கே பயன்படுகிறது. விருத்தியடைந்து வரும் நாடுகள் மூலத் திரவியங்களை ஏற்றுமதி செய்து தொழில் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்கிற ஒரு தோரணை சமனற்ற பரிமாறல் மூலமான சுரண்டலுக்கு வாய்பபளிக் கிறது. அத்துடன், மூன்றாமுலக நாடு கட்குக் கடன் வழங்குவதன் மூலம் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை வங்கிகள் கண்டறிந்துள்ளன.

மூன்றாமுலக நாடுகளின் பார்வையில், நிலவரம் வேறு விதமாகத் தோன்றுகிறது. ஏற்றுமதிக்கான வணிகப் பயிர்ச் செய்கை பெருமளவும் தமது மக்களின் தேவைக்கான உணவு உற்பத்திக்கு மாற்றாகவே மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, ஆர்ஜன்ற்றீனா தனது மக்களுக்கு உணவூட்டப் பயன்படுவதற்கும் அதிகமானளவு தானியத்தைக் கால்நடைத் தீனியாகப் பாவிக்கிறது. இத்தானியம் பெரிய கால்நடைப் பண்ணைகட்குப் போய் அங்கிருந்து வட அமெரிக்கச் சந்தை யில் ஹம்பேர்கர் எனும் பதனிட்ட மாமிச உணவாக முடிகிறது. அதே வேளை, ஆர்ஜன்ற் றீனாவின் கிராமத் துக் குழந்தைகளில் 80% பேர் போஷாக் குக் குறைந் தோரா யுள்ளனர். மூலப் பொருட்களுக்குக் கிடைக்கும் குறைந்த விலையின் விளைவாக, நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பாவிக்கச் சிறிதளவு ஏற்றுமதி வருமானமே கிடைக்கிறது. அண்மைய கடன் நெருக்கடி இந்தத் தீமைச் சூழலை மேலும் வலுப்படுத்தி யுள்ளது. வட்டி வீதம் படுவேகமாக உயர்ந்ததன் விளைவாகப், பல மூன்றாமுலக நாடுகள் தமது ஏற்றுமதி வருமானத்திற் பெரும் பகுதியை மேல்நாட்டு வங்கிகளிடம் வாங்கிய கடனுக்கு வட்டியாகச் செலுத்தவே பயன்படுத்த வேண்டியுள்ளது. இது மீண்டும் அவர்களை மேலும் அதிக ஏற்றுமதிவருமானத்தைப் பெறும் முயற்சியில், மேலும் அதிக நிலத்தை வணிகப்பயிர்ச் செய்கைக்கு மாற்றுமாறு செய்கிறது.

சிலர் இந்த 'அபிவிருத்தி முன்மாதிரியை' மூன்றாமுலக நாடுகட்கு வைக்கப்பட்டுள்ள ஒரு பயங்கரப் பொறியாக, அவர்களை மேலும் வலுவிழந்த நிலைக்கும் போதாமைக்கும் கொண்டு செல்லும் ஒரு 'அபிவிருத்தியாகக்' காணுகின்றனர். (ஸமிர் அமின் எழுதிய 'மாஓவிசத்தின் எதிர்காலம்', 'வர்க்கமும் தேசமும்' ஆகிய நூல்களைப் பாருங்கள்). அவர்கள் இன்னொரு சாத்தியப்பாட்டைச் சுட்டிக்காட்டு கின்றனர். உலகச்

தொடர்ச்சி 12ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# இஸ்ரேலியச் சியோனிசத் திமிருக்கு அமெரிக்கா பக்கத்துணை

பாலஸ்தீனத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் யசீர் அரபாத் பாலஸ்தீன மக்களின் விடுதலைச் சின்னமாக விளங்குபவர். அத்தகைய ஒருவரை நாடு கடத்த வேண்டும் அல்லது கொல்ல வேண்டும் என இஸ்ரேலிய சியோனிச அரசாங்கம் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறது. இதற்கு அமெரிக்க ஆதரவு தெரிவித்து நிற்கிறது. இத்தகைய இஸ்ரேலின் கொலை வெறிக் கூற்றை பாலஸ்தீன மக்கள் அரபு உலக மக்கள் மட்டுமன்றி உலக நாடுகளும் மக்களும் எதிர்த்து நிற்கின்றனர். ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலின் இக்கொலை வெறித்தீர்மானத்தை எதிர்த்து ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு பதின்நான்கு வாக்குகள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட இருந்த வேளை அமெரிக்கா தனது (வீட்டோ) ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து அதனைத் தடுத்துவிட்டது. பின்பு அதே தீர்மானம் பொதுச் சபையில் 133 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இஸ்ரேலிய சியோனிசத் திமிர் நாளாந்தம் பாலஸ்தீன மண்ணையும் மக்களையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கவே முயன்று வருகின்றது. பாலஸ்தீன மக்களின் குடியிருப்புக்களை இஸ்ரேலிய ராணுவ டாங்கிகள் தரைமட்டமாக்கி வருகின்றன. மக்கள் கைகளுக்கு கிடைத்தவற்றைக் கொண்டு இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி வருகின்றனர். அவர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தான் என்ற நிலைக்கே பாலஸ்தீன மக்கள் வந்துள்ளனர்.

பாலஸ்தீன சுதந்திர நாடு உருவாகுவதைத் தடுத்து இஸ்ரேலிய அமெரிக்கத் திட்டத்துடனும் கட்டுப்பாட்டுடனும் கூடிய ஒரு பாலஸ்தீனத்தை வரையறையுடைய பெயரளவிலான நாடாக்குவதே அவர்களது திட்டமாகும். இதனை பாலஸ்தீன மக்களோ அவர்களது தலைவர்களோ ஏற்கும் நிலையில் இல்லை. எனவே தான் தலைவர்களை அழித்து பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முடிவு கட்டலாம் என இஸ்ரேலியர்கள் நம்புகிறார்கள். அதற்கு கேடுகெட்ட அமெரிக்கா ஆதரவு வழங்கி நிற்கிறது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலை உருவாக்கி தனது காவல் நாயாக அதனை வளர்த்தது அமெரிக்கா. எனவே அதற்கு சோறு போட்டுப் பாதுகாக்க வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு உண்டு. ஆதலால் எத்தகைய கொலை வெறித் தீர்மானத்திற்கும் அமெரிக்கா ஆதரவு தெரிவித்தே வருகிறது. எவ்வாறாயினும் பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்ட வேட்கையை இஸ்ரேலியச் சியோனிசத் திமிரால் தடுத்து நிறுத்த முடியாது. அப்பனான அமெரிக்காவிலும் முடியாது. ஏனெனில் பாலஸ்தீன மக்களது அபிலாஷை முற்றிலும் நியாயமானது வெற்றி பெற்றே தீரவேண்டியதுமாகும்.



பலஸ்தீன சிறுவனின் நெஞ்சில் இஸ்ரேலிய படைத் துப்பாக்கி

# நேபாள புரட்சிகர விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் தலைமைத்துவ அனுபவங்கள்

## தோழியர் பார்வதி (5)

> தந்தைவழி விழுமியங்கள் பிழைகளைத் திருத்துவதற்கான இயக்கங்கள் மூலம் காலத்திற்குக் காலம் கண்டிக்கப்படாதுவிடின் அவை அதிகாரத்துவமாக மாறிவிடும் அபாயம் உண்டு.

புரட்சிகரப் பெண்களது முக்கியத்துவத்தையும் கம்யூனிஸ இயக்கத்தில் அவர்களது பங்கையும் உணர்ந்ததன் விளைவாக, நேபாள (மாஓவாத) கம்யூனிஸ்ற் கட்சி, ஊக்கமளிக்கும் பெறுபேறுகள் சிலவற்றைக் கண்டுள்ளது. கட்சியின் பிரதேச மட்டத்தில் டசின் கணக்காகவும் மாவட்ட மட்டத்தில் நூற்றுக்கணக்காகவும் கட்சிக் கலங்களின் (உநடட) மட்டத்தில் ஆயிரக்கணக்காகவும் பெண்கள் உள்ளனர். மக்கள் விடுதலைப் படையிற் பல பெண் படைத் தலைவர்களும் துணைப் படைத்தலைவர்களும் வெவ்வேறு பிரிவுகளில் உள்ளனர். படையணிப்பகுதிகளில் (பிறிபேட்) தனியான பெண்கள் பிரிவுகள் உள்ளன: களத்திற் செயற்படுவனவான பெண்கள் காலாட்படைப் பிரிவுகள் (ப்ளற்றூண்), பெண்கள் குழும (ஸ்குவாட்) அணிகள், பெண்கள் குடிப்படை (மிலிஷியா) அணிகள் என்பன. ஐக்கிய புரட்சிகர மக்கள் சபையில், முப்பத்தேழு பேரில் நால்வர் பெண்கள். மக்கள் சபைகளில் எல்லா மட்டங்களிலும் பெண்கள் பங்குபற்றுவது கட்டாயமாக்கப்பட் டுள்ளது.

வெவ்வேறு துறைகளில் அவர்களது பங்குபற்றுதலைப் பற்றிய ஒரு சித்திரத்தை வழங்க நேபாளத்தின் மேற்குப் பிரதேசத்தை எடுத்துக்கொள்வோம். இப் பிரதேசத்தில் மட்டும், 1500க்கு மேற்பட்ட பெண்கள் அலகுகள் உள்ளன. பெண்கள் வெகுசன அமைப்புக்களில் உள்ள பெண்களின்



பெண் விடுதலைப் போராளி மக்கள் கூட்டத்தில் உரையாற்றுகிறார்

மொத்த எண்ணிக்கை ஆறு லட்சம். இராணுவத்துறையில், பிராதான படையில் படைப் பிரிவுத் தலைவர்களாகப் பெண்கள் பத்துப் பேரும் இரண்டாம் நிலைப் படையில் பெண்கள் காலாட்படைப் பிரிவில் படைத் தலைவர்களாக இரண்டு பெண்களும், அடிப்படையில் குடிப்படை (மிலிஷியா) தலைவர்களாகப் பெண்கள் பலரும் உள்ளனர். போரணிப் பிரிவுப் படையின் (பேற்றாலியன் ஷோஸ்) உடல்நலப் பிரிவு அணியின் படைத்தலைவர் ஒருபெண்.

அங்குள்ள பெண்கள் "ஒரு கிராமம், ஒரு அலகு, ஒரு வீடு, ஒரு நண்பன்" என்ற பிரசார இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர். இது கிராமங் கிராமமாக ஒழுங்கமைத்து அரசியற்படுத்துவதில் உதவியுள்ளது. இவ்வாறே, உற்பத்தித் துறையில் "எங்கே தொடர்பு உண்டோ அங்கே ஒருங்கமைத்தல் உண்டு; எங்கே ஒழுங்கமைத்தல் உண்டோ அங்கே உற்பத்தி உண்டு" என்ற பிரசார இயக்கமொன்றைத் தொடங்கியுள்ளனர். இதனாற் பெண்கள் உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தகவல் கொடுப்போர், குடிகாரர். சூதாடிகள், காமுகர், ஏமாற்றுக்காரர் ஆகியோரைத் தண்டிக்கும் மக்கள் நீதிமன்றங்களை நடத்துவதில் அவர்கள் செயலூக்கத்துடன் ஈடுபடுகின்றனர். இத்தகையை வழக்குகளில் கிராமத்தவர்களுடன் உள்ளூர்ப் பெண் குடிப்படையினர் செயலூக்கத்துடன் பங்குபற்றுகின்றனர். இவ்வாறு, பல்வேறு துறைகளில் பெண் தலைவர்களை உருவாக்குவதற்குகந்த புறவயமான அடிப்படை மேற்குப் பிரதேசத்தில் முதிர்ந்து வருகின்றன.

இன்று, அடக்குமுறைப் பண்புள்ள திருமணங்கட்கும் அரசியற் பிழையுடைய திருமணங்கட்கும் எதிராகக் கிளர்ந்தெழுமாறு மேலும் அதிகளவிற் பெண்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். தொடக்கத்தில் ஒரு கெரில்லாப் பெண்கள் குழுமப் படைத்தலைவராக இருந்து பின்னர் கட்சியின் துணைப்பிராந்தியச் செயற்குழு உறுப்பினரும் மாவட்ட மட்டத்தில் மக்கள் செயற்குழுவின் துணைத் தலைவர் ஒருவரான தோழியர் ஷில்பாவை எடுத்துக்கொள்வோம்: 2002 மே மாதம், பிற்போக்கு இராணுவப் படைகளுக்கெதிரான மறைந்திருந்து தாக்குதலின் போது அவர் வீரமிக்க சாவைத் தழுவினார். பிடிபட்ட பின்பு, பிரட்சிக்கு விரோதமாகத் திசைமாறிய தனது கணவனைக் கண்டனஞ் செய்து விவாகரத்துப் பெற அவர் துணிந்தார். இப்போது விதவைகளின் மறுமணங்கள் அதிகரித்து வரு ஒரு போக்குக் காணப்படுகிறது. தியாகிகளின் குடும்பம் என்ற வரைவிலக்கணம், இப்போது, உயிர்த்தியாகஞ் செய்த தோழர்களின் மனைவியர் மறுமணஞ் செய்தால், அவர்கள் புரட்சிகர நோக்கைக் கைவிடாதளவில், அவர்களையும் உள்ளடக்குகிறது. உயிர்தியாகஞ் செய்த ஆண்களின் விதவைகள் குற்ற உணர்வின்றி மறுமணஞ் செய்ய இது மறைமுகமாக உதவியுள்ளது. 2001 மார்ச் மாதம் போர்கா சிறையுடைத்து வரலாற்று முக்கியம் பெற்ற பெண்களின் படைத்தலைவியான தோழிய தோழியர் ஷிலுவின் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். (மாஓவாத) நேபாள கம்யூனிஸ்ற் கட்சியின் தலைமைக்குழு (பொலிட்பீரோ) உறுப்பினர்களுள் முதலாவது உயிர்த்தியாகியான தோழர் டீஸூவுக்குப் பாதுகாப்பளிக்கும்போது உயிர்த்தியாகஞ் செய்த தனது கணவரான பீம் ஸேன் பொக்கரேல் இறந்தபின்னர் அவர் இன்னொரு தோழரை மறந்தார். கணவர்கட்கும் மனைவியர்க்கும் சவால்கள் மிகுந்த பணிகள் வழங்கப்பட்ட நிலைமைகளும் உள்ளன. 2001 நவெம்பர் 23ம் நாள் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியம் வாய்ந்த டாங் போர்வீரர் குடியமைப்பின் மீதான தாக்குதலில் போரணிப் பிரிவு (பேற்றாலியன்) ஒன்றன் படைப் பிரிவுத்தலைவரான தோழியர் ப்ஹூல் மாயா BK, அவரது கணவரான தோழர் பிஜோக்குடன் அப்போராட்டத் தில் உயிர்த்தியாகியானார். 2002 ஏப்ரலில் டாங்கில் நிகழ்ந்த சத்பரியா போர்வீரர் குடியமைப்பின் மீதான தாக்குதலின் அரசியற் பொறுப்பாளர் ஒரு பெண்ணென்பதும் குறிப்பிடத் தக்கது. அவசரகாலச் சட்டம் நிறை வேற்றப்பட்டு இராணுவம் களத்தில இறக்கப்பட்டதையொட்டிப் பல கணவர்களும் மனைவியரும் புதல்வரும் புதல்வியரும் உயிர்த்தியாகஞ் செய்துள்ளனர். இது நேபாளத்திற் குடும்பங்கள் எவ்வளவு தூரம் அரசியல் மயப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது.

### முடிவுகள்

மேற்கூறியவற்றினின்று, கம்யூனிஸ் இயக்கத்தைப் புதிய ஜனநாயகப் புரட்சியினின்று சோஷலிசத்துக்கும் சோஷலிஸத்தினின்று அரசும் சொத்துடைமையுமற்றதும் பெண்களின் பூரண விடுதலையை உத்தரவாதப் படுத்துவதுமான கம்யூனிஸம் வரை, கம்யூனிஸ இயக்கத்தை உந்துவதற்கு உதவக்கூடிய நம்பகமான, நீண்டகால, வெகுசன அடிப்படையிலான சக்தி என்ற காரணத்தாற், கம்யூனிஸ்ற் கட்சியிற் புரட்சிகரப் பெண்கள் தலைமைத்துவம் மூலோபாய முக்கியம் வாய்ந்தது என்ற முடிவுக்கு வரலாம். கம்யூனிசத்துக்கும் பெண்களின் விடுதலைக்கும் உள்ள உறவு பற்றிப் பேசுகையில் இனெஸ்ஸா அர்மன்ட், "கம்யூனிஸமின்றிப் பெண்களின் விடுதலைப் பற்றி எண்ணவே இயலாது எனின், பெண்களின் பூரண விடுதலையின்றிக் கம்யூனிஸம் பற்றி எண்ணவே இயலாது" என்று மிகச் சரியாகவே கூறியுள்ளார். கிளர்ச்சி செய்வதற்கான உரிமை, பண்பாட்டுப் புரட்சி, தொடர்ச்சியான புரட்சி, ஒட்டுமொத்த மான புரட்சி போன்ற கருத்தாக்கங்கள் அனைத்தும், பெண்கள் இரட்டிப்பான ஒடுக்குமுறைக்குட்பட்ட நிலையில் இருப்பதன் விளைவாக, அவர்கட்குச் சிறப்பான ஈர்ப்பும் பயன்பாடும் உள்ளவை. அவர்கள் மீதான இரட்டை ஒடுக்குமுறையும், திரிபுவாத இடதுசாரிக் கட்சிகள் உட்பட, ஆளும் வர்க்கத்தால் அவர்கட்கு வழங்கப்பட்ட பொய்வாக்குறுதிகளும், எதிர்ப்புரட்சியோ திரிபுவாதமோ பற்றி அவர்களை விழிப்புடனும் ஆயத்தத்துடனும் வைத்திருக்கின்றன. ஏனெனிற் பெண்களின் உரிமைகளாக வென்றெடுக்கப்பட்டவை, ரஷ்யாவிலும் சீனாவிலும் உள்ள கட்சிகள் எடுக்கும் ஒவ்வொரு முதலாளிய நிலைப்பாட்டுடனும் மெல்லமெல்லத் தேய்வுறுவதை அவர்கள் கண்டுள்ளார்கள்.

தந்தைவழி விழுமியங்கள் பிழைகளைத் திருத்துவதற்கான இயக்கங்கள் மூலம் காலத்துக்குக்காலம் கண்டிக்கப் படாவிடின், அவை, கட்சிக்குள் அதிகாரத்துவத்தை மெல்லமெல்லப் பெருக்க இடமுண்டு என்பது பற்றிக், கம்யூனிஸ்ற்றுகள் அரசியல் விழிப்புடன் இருக்க வேண்டும். அதிகாரத்துவத்தின் விளைவாகக், கட்சி மக்களிடமிருந்து தனிமைப்பட நேருகிறது. கட்சி தனது இருப்பின் நலன்களைப் பேணுமாறு, கட்சியே தன்னளவில் ஒரு குறிக் கோளாகுமெனின், அது திரிபுவாதத் துக்கே வழிகோலும். இதன் விளைவாகக், கட்சி சுரண்டப்படும் வர்க்கத்தின் முன்னோடியாகவன்றிச் சுரண்டுகிற வர்க்கத்தின் முன்னோடி யாகி, வர்க்க அடிப்படையிலும் பாலடிப்படையிலுமான பார்வையை இழந்துவிடுகிறது.

கம்யூனிஸ்ற் இயக்கம் செழிப்பதற்கு, றோஸா லக்ஸம்பேர்க் போலவோ க்ளாரா ஜெற்கின் போலவோ தனிப்பட்ட முறையில் உன்னதமான பெண் கம்யூனிஸ்ற் தலைவர்களை உருவாக்குவது மட்டும் போதாது. க்றுப்ஸ்கயா, ஜியாங் சிங் போன்று, தமது துறைகளிற் தலைமையிடம் வகித்ததோடு கம்யூனிஸ்ற் இயக்கத் தலைவர்களான தமது கணவர்கட்கு ஆதரவாக நிற்கும் பெண் கம்யூனிஸ்ற் துணைவியரும் தேவை. அவர்கள் தமது கணவர்கட்குச் சுகமும் பக்கதுணையும் வழங்கியதோடல்லாமற் கட்சியில் இரண்டு பாதைகட்குமிடையிலான போராட்டத்திலுஞ் செயலூக்கத்துடன் ஈடுபட்டனர். மக்களின் அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் அவர் சந்தித்த புயல்களின்போது, மலைபோல் துணை நின்று தன்னாலியன்ற உதவியை வழங்கிய ஜெனி மாக்ஸ் போன்ற பெண்களுந் தேவை. ஏனெனிற், புரட்சி மூலம் வெல்லப்பட்டவற்றைப் பேணிக் காக்கவும் தொடர்ச்சியாக விருத்தி செய்யவும் நாம் புரட்சிகரப் பெண் தலைவர்களை உருவாக்குவது மட்டுமன்றிப் புரட்சிகரக் கம்யூனிஸ்ற் ஆண் தலைவர்களை ஆதரித்துப் பேணுவதும் முக்கியம். காள்மார்க்ஸ், ஏங்கல்ஸ், ஓகஸ்ற் பெபெல், லெனின், மா ஓ ஆகியோர் போன்ற புரட்சிகர ஆண்களே பெண்கள் மீதானஒடுக்குமுறை பற்றிய ஆழமான ஆய்வுகளை முன்வைத்துப் பெண்களின் விடுதலைக்கான மார்க்கத்தையும் காட்டியுள்ளனர்.

பாட்டாளி மக்களின் சக்தியின் ஒவ்வொரு வெற்றிக்கும் சார்புடையதாகப் பெண்களின் சக்திக்கும் ஒரு வெற்றி உண்டு என்பதைக் கவனிப்பது முக்கியமானது. அவ்வாறே, புரட்சியும் புரட்சி மூலம் வெல்லப்பட்டனவும், மேலும் பெண்கள் புரட்சியில் இணைந்து தலைமை தாங்குவதன் மூலமே பேணப்படவும் வளர்க்கப்படவும் இயலும் என்பதைக் கம்யூனிஸ்ற் ஆண்கள் அறிய வேண்டும் தமது வர்க்கப் பார்வைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள அனைவரதும் பங்களிப்புப் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்குத் தேவையானது எவ்விதமோ, அவ்விதமே, தமது வர்க்கப் பார்வைக்கு எதிராக மட்டுமன்றித் தமக்குப் பழக்கப்பட்டுப் போன பாலடிப் படையிலான பார்வைக்கு எதிராகவும் கிளர்ந்தெழும் அனைவரதும் பங்களிப்பு பாட்டாளிவர்க்கப் பெண்கள் இயக்கத் துக்குத் தேவை. எனவே புரட்சிகர ஆண்களுக்கும் பெண்களுக்கு மிடையிலான கூட்டணி விரும்பத்தக்கது மட்டுமன்றி வரலாற்றுத் தேவையுமாகும். பெண் கம்யூனிஸ்ற் தலைவர்களை உருவாக்குவதில் அது மேலும் அவசியமாகிறது.

இறுதியாக "அதிருப்தியோடு இருந்து கொள்ளுங்கள். உலகம் அதிருப்தியுடையோருக்குரியது" என்ற மாஓவின் கூற்றைக் குறிப்பிடுவது முக்கியம். அதிகம் நீண்டதும் மேலுஞ் சிக்கலானவையுமான வர்க்கப் போராட்டம், உட்கட்சிப் போராட்டம், அகப் போராட்டம் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டி யுள்ள புரட்சிகரப் பெண் தலைவர்கட்டு இது மேலும் முக்கியமானது.

(முற்றும்)

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [18]

## சுயநலப் புத்தியும் புகழ்நல நாட்டமும் கூடிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளா?

"தமிழ்த் தேசிய இனத்தின் மையப்புள்ளியாக தனிச் சொத்துடமை ஆதிக்கம் பெற்று விளங்குகின்றது. தனிச் சொத்துடமையின் பாதுகாவலர்களாக பாரம்பரியக் குடும்பங்கள் அமைகின்றன. பாரம்பரியக் குடும்பங்களின் மேலாண்மை கிராமங்களை கட்டுப்படுத்துகின்றன. கிராமங்களின் சமூக நிறுவனங்களாக கோயில்கள் விளங்குகின்றன. கோயில்களில் தனி நபர்களின் பிரமுகத்தன்மையும் முனைப்பும் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப் படுகின்றன.

கிராமங்களில் ஏற்படும் வெளிநாட்டுப் பொருளாதார மாற்றங்கள் குடும்பங்களைச் சீர்குலைக்கின்றன. தனி நபர்கள் தனித்தீவுகளாக்கப்படுகின்றனர். ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைக்கு முதலில் பலிக்கடாக்களாக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணத் தமிழர் சமூகமேயாகும். எனினும் அதனையே தமது தகுதியாகவும் மேலாண்மையாகவும் நன்மையாகவும் கருதி 'உலகமெலாந் தமிழ்' எனும் பிரமையைத் தமக்குள் விரித்துக் கொண்டு டொலரையும் பவுண்சையும் யூரோவையும் இலங்கைக் காசுப் பெறுமதியில் கணக்குப் பார்த்துத் தற்திருப்தி கொண்டு மயங்கியிருப்பது கவலைக்குரியது.

மேற்குலக வெளிநாட்டு வேலைவாய்ப்பும் அகதி அந்தஸ்தும் பற்றித் தீர்மானிக்கப் படும் உரைகல்லாக உள்நாட்டு யுத்தமும் தற்செயல் நிகழ்ச்சிகளுமே அமைந்து விடுகின்றன. அகதி அந்தஸ்துக்கு உத்தரவாதமளிக்கும் உள்நாட்டு யுத்தம் தவிர்க்கவியலா அவசியத்துவத்தை ஏற்படுத்துகின்றதென்பதை பலரினதும் தற்போதைய சமாதான சூழலில் கவலை கொள் முகங்களிலும் கதையாடல்களிலுமிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. பல்கலைக்கழக கல்வியில் பட்டம் பெற்றவர்களுக்கே வேலை வழங்க முடியாதிருக்கும் அவலத்திலிருக்கும் இலங்கை அரசிடமிருந்து வேலைவாய்ப்பினை தமிழர்கள் மட்டுமன்றி எந்தச் சமூகத்தினருமே எதிர்பார்ப்பதற்கு எதுவுமில்லை. தனியார் துறையினரோ தமது இலாபமீட்டும் நோக்குத் தவிர வேலை வழங்கவேண்டிய அவசியமோ எவ்வித கடப்பாடுமோ உடையவர்களல்ல. இத்தாலிக்குக் கப்பலில் கடத்தப்பட்டுச் செல்லும் இளைஞர்கள் பலர் சிங்களவர்கள் மட்டுமன்றி இந்திய, பாகிஸ்தானிய, சீனப் பிரஜைகளாகவுமுள்ளனர். இவர்கள் அண்மைக் காலங்களில் தென்னிலங்கையில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இலங்கை இப்போது சர்வதேச கடத்தல் கேந்திர நிலையமாக மாறிவருகிறது. இந்நிலையில் தமிழர் சமூகமும் இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுமையும் அலைந்து திரியும் அவலத்துக்குள்ளாக்கப்பட்டு விட்டது. தற்செயல் நிகழ்வுகளே தமது தலைவிதியை தீர்மானித்துக் கொள்வதனால் கோயில்களில் தஞ்சமடை கின்றனர். கோயில்கள் பெருகுகின்றன. விழாக்கள் அதிகரிக்கின்றன. பிரசங்கங்கள் பரவுகின்றன. தான் தோன்றித்தனம் தலைவிரித்தாடுகின்றது.

இத்தகு சூழலிலிருந்து தமிழர்களை மட்டுமன்றி இலங்கையையும் மீட்கவேண்டுமெனில் இழந்த வாழ்வை மீளப்பெறவேண்டுமெனில் சுயசார்புப் பொருளாதாரமும் தன்னிறைவான சமூகமும் உருவாக்கப்படுவதுடன் திறந்த பொருளாதாரத்தின் கீழ் இரந்து வாழும் பண்பாட்டைத் தூக்கி வீசும் பலத்தையும் அரசியல் ஞானத்தையும் பெறுவதற்கு விடுதலை விரும்பும் தமிழர் சமூகம் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் தகுதிப்பாடுள்ளதா என்ற வினா எம்முன் எழுகின்றது.

முதலாவதாக, மக்கள் மத்தயில் அரசியல் ஞானத்தின் அவசியம் முக்கியமெனலாம். அரசியல் கல்வி என்பது இன்று இலங்கையில் மாணவர்களின் பாடவிதானத்தில் கிட்டத்தட்ட இல்லாமலேயே போய்க்கொண்டிருக்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரையில் ''தமிழீழம், ஏகப்பிரதிநிதி' என்ற கோசங்களைத் தவிர அதற்கப்பால் 'நமக்கேன் இந்த வம்பு' என்ற சாட்டில் தமக்குள் தாமே ஒடுங்கிக்கொள்கின்றனர். 'அரசியல் என்பது அயோக்கியர்களின் புகலிடம்' என மாமனிதராகிய தமிழ் தலைவர் ஒருவர் செப்பியபடி சமூக அரசியலின் பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்வதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொண்டு தமது சுயநலத்தை விருத்தி செய்து 'ஆமாம் சாமி' போடும் பெருநலத் தொண்டர்களாக மாறிவருகின்றனர். மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதனை மறுதலித்து சுய மனித முன்னேற்றமே 'ஆத்ம ஈடேற்றம்' என்று தப்பித்துக் கொள்கின்றனர். அரசியல் சிந்தனை, அரசியல் ஞானம், அரசியல் கல்வி என்பன அவசியமற்றவையென்றும் அரசியல் சுத்த சூனியமாக இருப்பதே கும்பலில் கோவிந்தா போடவும் அரோகராப் பாடும் பக்தர் கூட்டமாகவும் தாம் இருந்து விடுவதால் எவ்வித ஆபத்தும் ஏற்படப்போவதில்லை என்று தம்மைக் காவாந்து பண்ணிக் கொள்ள வசதியாய் அமைந்துவிடுகிறது. வர்த்தகக் கல்வியும் கணனிக் கற்பனையிலிருந்தும் மீண்டு அரசியல் பாடபோதம் நடாத்த தமிழர் சமூகம் அனுமதிக்குமா?

இரண்டாவதாக, தமிழர்களின் ஒற்றுமையீனம் உலகறிந்தது. சுயநல நாட்டத்தின் மூலம் பணத்தைப் பாடுபட்டுத் தேடித் தேக்கி வைத்துக் கொண்டு திருப்திப்பட்டுவிட முடியுமா? தத்தமது தனிப் புகழ் கொடி நாட்டித் தமது பணத்தின் பெருமையையும் நிரூபித்துக் காட்டும் ஆவலில் அவதிப்படுகின்றனர். எனவே கிராமியக் கோயில்கள் அவர்களது களங்களாகின்றன. காணி நிலங்களின் விலைகள் உயர்கின்றன. சாதி அகம்பாவத்தை வெளிப்படுத்துவர். எல்லை வழக்குகளில் பிரிவிடல் வழக்குளில் தமது முத்திரை பதிப்பர். கிராமங்கள் இச்சிலரின் மேலோங்கித் தனத்தால் பிளவுறும். ஊர்கள் இரண்டு படும். குடும்பங்கள் சிதறும். சாதித்திமிர் புதுமெருகு பெறும். பழைய பணக்காரர் புதிய பணக்காரரர என்ற நாட்டாமைத்தனங்கள் மலிந்து பெருகி கிராமங்கள் ஒன்றுபடும் நிலை இல்லாமலாக்கப்படும்.

மூன்றாவதாக, பொது நோக்கற்ற வாழ்வே கணிக்கப்படும் வாழ்வாகும். 'தானுண்டு தன் குடும்பமுண்டு' என்று தன்நலத்தோடு தாம் தாம் தப்பிக் கொள்ளும் மனப்பாங்கும்- சமூக அக்கறையில்லாது தனி மனிர்களாகச் செயற்படுவதுமே சமூக கௌரவமாகக் கொள்ளப்படும். "மிதிச்ச புல்லுச் சாகாத நல்ல மனிதர்" என்ற தன்பாட்டைப் பார்த்து பொது நோக்கற்று வாழும் மனிதர்கள் சமூக விமர்சனமெதுவுமற்று தமது பிள்ளைகளைக் கரை சேர்த்த புண்ணியவாளன் எனக் கணிக்கப் படுவார். அத்தகைய 'நல்ல மனிதர்கள்' மற்றோரை தூற்றி நிராகரித்துவிடுவர்.

நான்காவதாக, சமூகத்தின் பன்மைத் தன்மையை அங்கீகரிக்க மறுக்கும் போக்கு வளர்ந்துள்ளது. முழுமுதல் சிந்தனை மரபின் ஆதிக்கம் தமிழர் சமூகத்தைப் பீடித்துள்ளது. 'ஏகன் அநேகன்' என்ற ஆதர்சமே அனைவரதும் அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்றது. வளரும் சமூகத்தில் நூறு கருத்துகள் தோன்றுவது தவிர்க்க முடியாதது. அக் கருத்துகளிடையே முரண்பாடுகள் ஏற்படுவது இயற்கையானது. அவற்றுக்கிடையேயான சிநேகபூர்வமான மோதல்களை மதிப்பதும் வளர்ச்சிக்கு உந்து விசை வழங்குவதும் அனைவரதும் சமூகக் கடமையாகும். மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனப்பக்குவமும் மக்கள் மத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டும். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி' போன்ற விஞ்ஞான ஆதாரமற்ற முதன்மைவாத நோக்கிலிருந்து தமிழ்ச் சிந்தனை மரபு விலக்கப்பட வேண்டும்.

ஐந்தாவதாக, கிராமங்கள் சுயசார்பில் தன்னிறைவு காணும் பொருளாதார பலத்தைப் பெறும் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும். இயன்றவரை அந்நியப் பொருள் பாவனை, ஆடம்பரமோகம் என்பவற்றிலிருந்து விடுபட்டு தத்தமது கிராமங்களிலும் சூழலிலும் உருவாக்கும் உற்பத்திப் பொருட்களையே கூடிய வரை பாவனைக்குட்படுத்தும் பழக்க வழக்கங்களை மேம்படுத்த வேண்டும்.

ஆறாவதாக, தமிழ்ப்பண்பாடு என்பது மத நீக்கம் பெற்றதாக மானுட நேயம் மிக்கதாக மாற்றம் பெறுதல் வேண்டும். பெண்கள் மீதுமட்டும் தமிழர்ப்பண்பாட்டைத் திணிக்கும் சடங்காசாரங்களிலிருந்து தமிழர் சுயவாழ்வை மீட்க வேண்டும். சடங்கு, சம்பிரதாயங்களில் மட்டும் தமிழ்ப் பண்பாட்டை பேணும் எண்ணம் அகன்று வாழ்வு முறையில் மாறும் சமூக சூழலுக்குப் பொருந்தும் மனித நேய விழுமியங்களைக் கைக் கொள்ளும் பண்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

ஏழாவதாக, மேற்குலக மாயையிலிருந்தும் ஆங்கில மோகத்திலிருந்தும் விட்டு விடுதலையாக வேண்டும். தமிழ் மொழியில் பேசுவதற்கும் பெயர் வைத்துக்கொள்வதற்கும் இருக்கும் தயக்கம் அகல வேண்டும். தமிழ் மொழியைப் போதனா மொழியாகக் கொள்வதில் ஏற்படும் கழிவிரக்கம் துடைத்தெறியப்படவேண்டும். ஆங்கிலம் மட்டுமே அறிவு மொழி என்ற மேற்குலக ஆதிக்க குணாம்சத்தின் அடியாட்களாகிப் போதகர்களாகும் போக்குகளையப்படவேண்டும்.

எட்டாவதாக, தனிமனிதர்களுடைய ஆளுமைப் பண்புக்கு கௌரவம் வழங்கும் பொழுது ஊழல், நேர்மையீனம், பணச்செருக்கு ஆகியவற்றில் மூழ்கித் திளைத்தவர்களை மனிதர்களாக மதிப்பதையே தவிர்க்க வேண்டும்.

ஒன்பதாவதாக, தமிழர்கள் என்று வரைவிலக்கணப்படுத்தும் பொழுது உழைப்பில் ஈடுபடும் உழைப்பாளர்களான மக்களையே கருதிக் கொள்ள வேண்டும். பெரும் முதலாளிகளை தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் என்று கருதிச் செயற்படுவதையோ அவர்களின் ஆதிக்க கருத்தியலுக்கு செவி சாய்த்து தமிழர் சமூகத்தை பலியிடுவதையோ அனுமதிக்கக் கூடாது.

பத்தாவதாக, உலகமயச் சிந்தனையை நிராகரித்து ஒடுக்கப்பட்ட மூன்றாமுலக நாடுகளின் நட்புறவை உருவாக்கி உலகமெலாம் ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் சர்வதேச உறவைப் பூணுவது மட்டுமே தமிழர் விடுதலைக்கான சர்வதேச அனுதாபத்தையும் ஆதரவையும் பெறமுடியும். ஏகாதிபத்திய சார்பு நிலை கைவிடப்பட வேண்டும்.

மேலே எடுத்துக்கூறப்பட்ட பத்து அம்சங்களிலும் உறுதியான பிடிப்பையும் கொள்கையையும் நடைமுறையையும் பகிரங்கப்படுத்திச் செயற்படுவதன் மூலம் மட்டுமே தமிழர் சமூகம் விடுதலையை நோக்கி வீறுநடைபோட இயலும்.

மாறாக, அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இந்தியாவுக்கும் அஞ்சுவதன் மூலமோ- அல்லது அஞ்சுவது போல் பாசாங்கு பண்ணுவதாலோ அல்லது அமெரிக்க- யப்பான்- இந்தியா போன்றோருக்கு அனுசரணையாக வழிவிட்டு வரவேற்பு பாடுவதாலோ தமிழ்த்தலைமைகள் தமிழ் மக்களின் அச்சத்தையோ சமாதானம் மீது அவர்களுக்கிருக்கும் அவ நம்பிக்கையையோ போக்கிவிட முடியாது.

தமிழ்த்தலைவர்கள், தமிழ்மக்களைப் புறக்கணிக்க நேரிட்டால், தமிழ் மக்கள் தம் வழியைத் தாமே தீர்மானிக்க நிர்பந்திக்கப்படுவதிலிருந்து தவறமுடியாது. ●

**செண்பகன்**




## பயங்கரவாதப் பிரச்சினைக்கு மாக்ஸியச் சிந்தனை முகங்கொடுப்பது எப்படி?

பயங்கரவாதம் பற்றி நிறையப் பேசப்படுகிறது. பயங்கரவாதம் என்பது என்ன என்ற விடயத்தில் ஒருவரது சமூகப் பார்வைக்கு ஏற்ற விதமாக விளக்கங்கள் வேறுபடலாம். எனினும் எல்லா விதமான சமூக வன்முறைகளையும் நாம் பயங்கரவாதம் என்று ஏற்பதில்லை. உதாரணமாக, நாடுகளிடையிலான போர் பயங்கரவாதம் எனப்படுவதில்லை. பொதுப்பட, பொலிஸ், இராணுவம், இரகசியப் பொலிஸ் போன்ற அமைப்புக்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கொடுமைகள் பயங்கரவாதமாகக் கருதப்படுவது இல்லை. ஏனெனில் பயங்கரவாதம் என்பது சட்டம், ஏற்கப்பட்ட சமூக ஒழுங்கு முறைகள் என்பனவற்றுக்கு வெளியே நடப்பதாகவே கொள்ளப்படுகிறது. திட்டமிட்ட முறையில் சட்ட ஒழுங்குகளையும் சமுதாய நெறிகளையும் மீறி நடக்கிற வன்முறை கூட அத்துமீறல் என்று கண்டிக்கப்படுகிறதே ஒழியப் பயங்கரவாதம் எனப்படுவதில்லை.

பயங்கரவாதத்தின் முக்கியமான பண்புகளில் வன்முறை ஒன்று. எனினும் வன்முறை பற்றிய அச்சமும் வன்முறையைப் பிரயோகிப்பதாகச் செய்யப்படும் மிரட்டலும் வன்முறையின் பிரயோகத்தை விடவும் வலியன. ஒரு கொலை மூலமோ ஒரு கடுந்தாக்குதல் மூலமோ முழு சமுதாயம் ஒன்றையே பயமுறுத்திப் பணிய வைக்க இயலும். பெரும்பாலான அரசியற் பயங்கரவாதம் இந்த விதமான நோக்கிலேயே மேற்கொள்ளப்படுகிறது. எனவே வன்முறை மூலம் சமுதாயத்தை மிரட்டிப் பணியவைக்கும் பண்பு பயங்கரவாதத்தினது முக்கியமானதொரு பண்பாகும்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் மாஃபியா பாதாள உலகக் கோஷ்டிகள் வரை ஒரு விதமான பயங்கரவாதத்தைக் கையாளுகின்றன. இவற்றின் நோக்கங்கள் ஒரு சமுதாய அமைப்பைப் பேணுவதோ மாற்றி அமைப்பதோ அல்ல. எனவே இவற்றுக்கும் அரசியற் பயங்கரவாதத்துக்கும் பாரிய வேறுபாடு உண்டு.

பயங்கரவாதத்தின் இன்னொரு முக்கியமான பண்பு அதன் இரகசியமான செயற்பாடு எனலாம். சில சமயங்களிற் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் பகிரங்கமாகவே தம்மையும் தமது செயல்களையும் அறிவித்துக் கொண்டாலும் அடிப்படையில் அதன் இயக்க முறை ஒரு சிறு குழுவுக்கு வரையறுக்கப்பட்டதும் இரகசியமானதுமாகவே அமைகிறது. இதன் விளைவாக அது மக்களைச் சார்ந்ததும் ஜனநாயக அடிப்படையிலும் இயங்குவது இயலாமற் போகிறது. எனினும் எல்லாப் பயங்கரவாதத்தையும் ஒரே அளவுகோல் கொண்டு மதிப்பிட முடியாது.

எந்த செயலையும் போலப், பயங்கரவாத செயல்களும் அவற்றின் நோக்கமும் விளைவும் சார்ந்தே மதிப்பிடப்பட வேண்டும். மாக்ஸியம் வன்முறையை புரட்சிகர வன்முறை என்றும் எதிர்ப்புரட்சிகர வன்முறை என்றும் வேறுபடுத்துகிறது. பயங்கரவாதம் அடிப்படையில் சமூக விரோதமானதும் எதிர்புரட்சிகரமானதும் என்பதில் மாக்ஸியம் உறுதியாகவே உள்ளது. ஆயினும் அது எல்லாவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் ஒரே விதமாக ஒட்டுமொத்தமாகக் கண்டித்து நிராகரிப்பதில்லை.

அரசியற் பயங்கரவாதம் பல்வேறு சூழ்நிலைகளில் அரச ஒடுக்குமுறை, சனநாயக மறுப்பு, மாற்று வழிகள் இல்லாமை என்பனவற்றால் தூண்டப்படுகிறது. எனினும் அது வெகுசனச் சார்பான வெகுசன ஆதரவுடைய நடவடிக்கையாக இல்லாது போனால் அது தொடரான குற்றச் செயல்களாகச் சீரழிந்து போக நேரிடுகிறது. இதனாலேயே தனிப்பட்ட வீரசாகச நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் பயங்கரவாதமும் கண்டனத்துக்குரியதாகிறது. மறுபுறம், அரச அடக்குமுறைக்கு எதிராகவும் அரச யந்திரத்துக்கு எதிராகவும் அரசியற் தெளிவுடனும் ஒரு அரசியல் இலக்குடனும் நிகழும் போராட்டம் சில வேளைகளிற் பயங்கரமான வன்முறைச் செயல்கட்கு இடமளிக்கலாம். எனினும் ஒரு உண்மையான வெகுசன இயக்கம் தனது வன்செயல்கள் யாரை, எதை இலக்கு வைக்கிறது என்பது பற்றி மிகவும் கவனமாகவே இருக்கிறது.

அதேவேளை, ஒரு பயங்கரவாதச் செயலைக் கண்டிக்கும் போது அதற்கான அரசியற் பின்னணியையும் சமூக நிலவரங்களையும் கணிப்பில் எடுக்காமல் இருக்க முடியாது. இதனாலேயே செப்றெம்பர் 11, 2000 தாக்குதல் பற்றிய மாக்ஸிய நிலைப்பாடு அதைக் கண்டித்த அதேவேளை, அத்தாக்குதலை இயலுமாக்கியது அமெரிக்க ஏகாதிபத்திய அடாவடித்தனமே என்பதையும் தெளிவுபடுத்தியது.

உண்மையில் கடந்த மூன்று தசாப்தங்களில் உலகளாவிய முறையில் பயங்கரவாத இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பங்கு முதன்மையானது. இன்று இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பேரில் அமெரிக்காவுக்கு எதிராகத் திரும்பியுள்ள தீவிரவாதமும் பயங்கரவாதமும் அமெரிக்காவால் சவூதி அரேபிய பிற்போக்குவாதிகளின் தூண்டுதலின்பேரில் வளர்த்தெடுக்கப்பட்ட தீய சக்திகள் தாம். ஆயினும் அவை ஓரளவுக்கு வளர்ச்சி பெற்ற பிறகு தமது சுயாதீனமான இருப்பை வலியுறுத்துகின்றன. அவற்றால் தமது எசமானர்கள் விதித்த எல்லைகட்குள் நிற்க இயலுவதில்லை.

இந்தியாவில் இந்திரா காந்தி சீக்கிய தேசியவாதத்தை எதிர்ப்பதற்காக ஆதரித்து ஊக்குவித்த சீக்கிய தீவிரவாதிகளே அவருடைய உயிரைக் குடிக்கும் நிலை வந்ததற்கு அவரது சந்தர்ப்பவாதமே முக்கியக் காரணம். எனினும், மேலாதிக்கவாதிகள் இவற்றிலிருந்து எதையுமே கற்பதில்லை.

மறுபுறம் அயல் ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் எழுந்தமான முறையில் வெகுசன எதிர்ப்பையும் வன்செயல்களையும் தூண்டி விடுகின்றன. இவை ஒரு விடுதலை இயக்கமாக நெறிப்படுத்தப்படாவிட்டால் உதிரியான சம்பவங்களாக வெறும் வன்முறைக் குழுக்களாகச் சீரழியவும் நேரலாம் எனினும், ஆயுதமேந்திய ஒரு எதிரியை இலக்கு வைத்துப் பலவீனப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகளைப் பயங்கரவாதம் என்று லேசாக நிராகரிக்க முடியாது. அது இப்போது திட்டமிடப்படாத ஒரு கெரில்லாப் போராக உள்ளது. காலப்போக்கில் அது எப்படி விருத்தி பெறும் என்பது கவனிக்கப்பட வேண்டும். அது ஒரு விடுதலைப் போராட்டமாக அமெரிக்காவின் படைகளை நாட்டை விட்டு விரட்டலாம். தெளிவீனமாகத் திட்டமின்றி, எழுந்தமான வன்செயல்களாகவும் சில சமயங்களிற் பொதுமக்களைப் பாதிக்கும் சம்பவங்களாகவும் மாறினாலும் நாம் அதற்காகக் கண்டிக்க வேண்டியது ஆக்கிரமிப்பாளர்களையே ஒழிய அதற்கெதிராகப் போராடுகிறவர்களையல்ல.

போராட்டம் வெகுசனப் போராட்டமாக விருத்தி பெறாது குழுக்களாகவும் மேலாதிக்கத்துக்காகத் தமக்குள் மோதிக் கொள்ளும் கோஷ்டிகளாகவும் சீரழியும்போது அவை மக்களுக்கு எதிரான காரியங்களிலும் இறங்க நேரிடலாம்.

மாக்ஸியவாதிகளைப் பொறுத்தவரை, அரச வன்முறைக்கும் ஏகாதிபத்திய வன்முறைக்கும் எதிரான தவிர்க்க முடியாத போராட்டக் கருவியாகவே வன்முறையை அவர்கள் கருதுகிறார்கள். அந்த வன்முறை வெகுசன அரசியற் கண்ணோட்டத்தில் ஒரு வெகுசன இயக்கத்தினூடு வெகுசன ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகிறது. அனைத்தினும் முக்கியமாக அந்த வன்முறை எப்போதுமே கேள்விக்கும் விமர்சனத்துக்கும் தன்னை உட்படுத்திக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

மாக்ஸியவாதிகள் நிராகரிக்கும் பயங்கரவாதம், வெகுசன அரசியலை நிராகரிப்பது மட்டுமன்றி, எந்தளவு தூரத்துக்கு ஆட்சியாளர்களை மிரட்டுகிறதோ அதே அளவுக்கு அல்லது அதிலும் அதிகமாகத் தம்முடன் முரண்படுகிற அல்லது ஒத்துழைக்க மறுக்கிற பொதுமக்களையும் மிரட்டலுக்கு உட்படுத்துகிறது.இதன் விளைவாக இவ்வாறான பயங்கரவாதம் வெகுசன விரோதமானதாகவும் எதிர்ப்புரட்சிகரமானதாகவும் மாறுகிறது.

சுருங்கச் சொன்னால் எந்த வன்முறை பற்றியுமான மாக்ஸிய நிலைப்பாடு அவ்வன்முறையானது மக்களுக்கும் எதிரிக்குமிடையிலான முரண்பாடு தொடர்பானதா மக்கள் மத்தியிலான முரண்பாடு தொடர்பானதா என்ற கேள்வியின் அடிப்படையிலேயே முடிவாகிறது எனலாம். மாக்ஸியவாதிகள் இதுபற்றிக் தெளிவாக உள்ளவரை, மூர்க்கத்தனமான இடது தீவிரவாதத்திற்கோ சந்தர்ப்பவாதம் மிக்க வலதுசாரிப் போக்குகட்கோ பலியாக இடமிராது.

– இமயவரம்பன் –

# கம்யூனிஸ்ட் பாண்டியனா? இந்துத்துவ பாண்டியனா?



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையாவின் நினைவு நாள் நிகழ்வில் நினைவுப் பேருரை ஆற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த தா. பாண்டியன் தான் அடக்குமுறையாளர்களுக்கு சார்பானவர் என்பதை தோலுரித்துக் காட்டியுள்ளார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையும் இந்திய அனுபவங்களும் என்ற தலைப்பில் உரையாற்றிய அவர் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை சரியாக புரிந்து கொள்ள மறுப்பவராகவும் இந்திய அனுபவங்களை சரியாக பகிர்ந்து கொள்ள முடியாதவராகவும் இருந்தார்.

தமிழர்கள் பிரிவினை கேட்டதால் தான் இலங்கையில் இனப்பிரச்சினை ஏற்பட்டதாக கூறி தமிழர்கள் இணைந்து வாழ பழகிக் கொள்ள வேண்டும் என்றும் அதன் மூலம் பிரச்சினையை தீர்க்கலாம் என்றும் உபதேசம் செய்துள்ளார். பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டமே தமிழ்மக்களின் போராட்டமாகும். பிரிவினை என்ற கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்ட போதும் அது அடிப்படையில் இனஒடுக்கலுக்கு எதிரான போராட்டம் என்ற நியாயப்பாட்டை கொண்டிருந்தது. இலங்கை பிளவுபடுவதையோ இந்தியா பிளவுபடுவதையோ ஏற்க முடியாவிட்டாலும் தேசிய இனங்களின் சிறைக்கூடங்களாக அவை இருப்பதை எவராலும் ஏற்று அங்கீகரிக்கவும் முடியாது.

நாடுகளினதும் தேசங்களினதும் சுயநிர்ணய உரிமை என்பது தேசிய இனங்களுக்கும் புவியில் ரீதியில் பிரித்துச் செல்ல முடியாதவாறு வாழும் தேசிய இனங்களுக்கும் சமூகங்களுக்கும் சுயநிர்ணய உரிமை விரிவாக பிரயோகிக்க முடியும். அவ்வுரிமைக்கான போராட்டத்தை எந்தவொரு மாக்சிஸ்ட்டும் நிராகரிக்க முடியாது. போராடும் சக்திகள் கம்யூனிஸ்ட்டுகளாக இல்லை என்பதாலோ அவை சில தவறுகளை இழைத்துள்ளன என்பதாலோ போராட்டத்தின் நியாயத்தை நிராகரிக்க முடியாது. ஒரு கம்யூனிஸ்ட் எப்போதும் அடக்கப்படுவர்களின் பக்கமே இருக்க கடமைப்பட்டவன்.

பாண்டியனோ இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தை ஏற்பவராகவன்றி அதனைக் குற்றஞ் சாட்டியே உரையாற்றியுள்ளார். அனைத்து இலங்கைத்தமிழ் மக்களையும் கொலைகாரர்கள் என்றவாறு குற்றஞ்சாட்டியுள்ளார். அதாவது இலங்கை 'தமிழ்மக்கள்'சாப்பிட்டுக் கொண்டே எப்படி உங்களைக் கொலை செய்யலாம் என்பது பற்றியே அவர்கள் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள் என்று தமிழகக் கிராமத்துப் பெண்கள் கூறினார்கள் என்று நினைவுப் பேருரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் கொலைய்யை மனதில் வைத்துக்கொண்டு அவர் அவ்வாறு பேசியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ராஜீவ்காந்தி கொலையை ஏற்று அங்கீகரிக்க முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கமே அவரை கொலை செய்ததாக இந்திய நீதிமன்றங்கள் முடிவு செய்துள்ளன. 1987ஆண்டு சமாதான ஒப்பந்தத்தை கைச்சாத்திட கொழும்பிற்கு வந்த ராஜீவ்காந்திக்கு இலங்கை கடற்படையினரின் மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டது. அப்போது ரோஹன குமார என்ற கடற்படை வீரனால் ராஜீவ் கொலை செய்யும் நோக்கில் தாக்கப்பட்டார். அது கொலை முயற்சியாகும் என்று கொழும்பு நீதிமன்றம் ரோஹன குமாராவிற்கு தண்டனை வழங்கியது என்பதை மறந்துவிட முடியர்து. அதற்காக இந்தியமக்களோ, இந்திய அரசாங்கமோ அனைத்து சிங்கள மக்களுக்கு எதிராகவும் வன்மம் சாதிக்கவில்லை. தன்னைத் தாக்கிய கடற்படை வீரனை மன்னிக்கும்படி ராஜீவ் காந்தி இலங்கை அரசாங்கத் திற்கு செய்தியொன்றை அனுப்பி யிருந்தார்.

## இலங்கைப் பிரச்சினை புரியாதுவிட்டால் வாயை மூடிக்கொள்வது நல்லது!

பின்னர் அவனது தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்பே பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அக்கடற்படை வீரன் விடுதலை செய்யப்பட்டான்.

அமைதிகாக்கும் படை என்ற பேரில் இங்கு வந்த இந்தியப்படையினர் மிகவும் பெறுமதியான யாழ் பல்கலைக்கழக கம்பியூற்றர் பிரிவை தாக்கி நாசப் படுத்தினர். அத்துடன் அவர்கள் செய்த சொத்தழிவுகள், களவுகள், கொலைகள், பாலியல் வல்லுறவுகள் துன்புறுத்தல்கள் என்பன சொல்லில் அடங்காதவைகளாகும்.

இந்த கசப்புணர்வுகள் இந்திய மக்களுக்கோ தமிழக மக்களுக்கோ எதிரானதாக மாறுவது எவ்வகையிலும் நியாயமாக இராது. அவ்வாறு மாறவும் இல்லை. இன்றும் தமிழக மக்களும். நேர்மையான இந்திய ஜனநாயக இடதுசாரி சக்திகளும் விடுதலைப் புலிகள் மீது விமர்சனங்களை கொண்டிருந்த போதும் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கின்றனர் என்பதனை புரிந்து கொள்ளாமல் பாண்டியன் இங்குவந்து இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரையும் எதிரிகளாக சித்தரித்துப் பேசியுள்ளார்.

இவ்வாறு பேசியது மட்டுமல்ல காலிஸ்தான் போராட்டத்தை இந்திய இராணுவம் அடக்கி ஒடுக்கியதால் தான் பஞ்சாப்பில் சமாதானமும், ஜனநாயகமும் நிலைப்பதாக அவர் கூறியுள்ளார். காலிஸ்தான் பிரச்சினையில் பேச்சுவார்த்தை நடை பெறவில்லை என்றும் அவர் கூறி யுள்ளார். அடக்கப்படும் தேசிய இனத்தின் போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவர இராணுவ அடக்கு முறையே சிறந்ததென அவர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியுமா? அடக்கு முறை. இந்திய இராணுவம் எவ்வாறு பஞ்சாபில் அமைதியையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டியது? அங்கு இந்திய அரசாங்கம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதையும் அவற்றின் பலனாக சில அதிகாரங்கள் பஞ்சாப் மாவட்டத்திற்கு கொடுக்கப்பட்டன என்பதையும் பாண்டியன் மறந்துவிட்டார் போல் தெரிகிறது, இவ்வாறு பேசியதன் மூலம் இங்கும் தமிழர்களின் போராட்டம் இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட வேண்டும் என்ற அவரது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிகிறது.

தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழவில்லை என்று பாண்டியனால் கூறமுடியாது. தமிழர்கள் மீதான இனவன்முறைகள் காரணமாக சிங்களமக்களுடன் இணைந்து வாழமுடியாது துரத்தப் பட்டனர் என்பதே உண்மை. இணைந்து வாழ்வது என்பது சுயமாகவும், புரிந்துணர்வுடனும் ஏற்பட வேண்டும். அடக்குமுறை யாளனுக்கு பயந்து இணங்கிப்போவது இணைந்து வாழ்வதாகாது. மீண்டும் இணைந்து வாழ்வது தமிழர்களுடைய கைகளில் மட்டுமன்றி சிங்களவர்களின் கைகளிலும் இருக்கிறது.

அந்த அடிப்படையிலேயே தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் முன்னேற்றமடைய வேண்டும். தமிழ்மக்களுக்கு மறுக்கப் பட்டிருக்கும் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தியாவில் நடக்கும் பல தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங் களினதும் நியாப்பாட்டை ஏற்காதவர்கள் இந்துத்துவத்திற்கு துணைபோகிறவர் களாவர். அப்போராட்டங்களின் நியாயப் பாடுகளை மட்டுமன்றி இலங்கைத்தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடு களையும் அவர்கள் விளங்கிக் கொள்ள மறுக்கின்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினதும், இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைமைகள் இலங்கையின் இனப்பிரச்சினையை இந்திய ஆளும்

தொடர்ச்சி 11ம் பக்கம்

# யூலியஸ் பியூசிக்

## கொல்லப்பட்டு 60 வருடங்கள்

தனது தாய் நாடான செக்கோஷ்ல வேக்கியாவின் விடுதலைக்காகவும் மனிதகுல விடுதலைக்காகவும் இன் உயிரை விலையாகக் கொடுத்த பத்திரி கையாளர் யூலியஸ் பியூசிக். அவரை ஒரு தீரம் மிக்கப் பத்திரிகை யாளர் என்று மட்டுமே கூறப்படுவது அவரது உண்மை நிலையினை மறுப்பதாகும். அவரது நினைவாக வருடாவருடம் உலகப் பத்திரிகையாளர் தினம் நினைவு கூறப்படுகின்றது. ஆனால் பத்திரிகை யாளர் என்பதற்கும் அப்பால் அவர் ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்து ஹிட்லருடைய படைகளின் கொடிய சித்திரவதை களுக்கு மத்தியிலும் நிலைகுலையாத புரட்சிவாதியாக வாழ்ந்து இறுதியில் கேடுகெட்ட நாஜிப் படைகளால் கொல்லப்பட்டவர்.

தோழப் பியூசிக் 1903ம் ஆண்டு பெப்ரவரி 23ம் திகதி செக்கோஷலவேக்கியாவின் பிராக்நகரில் பிறந்தவர். தனது 12வது வயதில் முதலாவது உலக யுத்தத்தின் கோரத் தனங்களைக் கண்டு அதிர்வுற்று தனது சிந்தனைத்திறனை விரிவாக்கினார். அதன் விளைவாக நூல்களை நிறைய வாசிக்கவும் ஒக்ரோபர் புரட்சியின் அனுபவங்களைக் கிரகிக்கவும் செய்தார். தனது 17வது வயதில் 'றூடே பிராவோ' பத்திரிகைக்கு எழுத ஆரம்பித்தார். அவரது எழுத்துக்கள் அநீதிகள் அடக்குமுறை களை எதிர்த்தும் தொழிலாளர்கள் விவசாயிகள் மக்கள் மீதான அதீத அக்கறைகளை வெளிப்படுத்தி நின்றன. அதன் வளர்ச்சி அவரை கம்யூனிஸ்டாக் கியது. அவர் செக்கோஷ்லவேக்கியா கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அதன் மத்திய குழு உறுப்பினர் வரை உயர்ந்தார். அவரது மனைவியும் ஒரு கம்யூனிஸ்ட்டும் புத்திஜீவியுமாவார். அன்றைய சூழலில் அவர்கள் மாற்றுப் பெயர்களுடன் இரகசிய வேலை முறைகளுடாகவே செயல்பட்டனர்.

செக் நாட்டை ஹிட்லர் ஆக்கிரமித்த வேளை கம்யூனிஸ்ட் கட்சி மிகப் பெரும் ஆயுதப் போராட்டத்தை நடாத்தியது. அப்போராட்டத்தை முறியடிக்க நாஜிப்படை எண்ணற்ற வழிகளில் முயன்றது. சிறை சித்திரவதை கொலை என வெறியாட்டம் நடாத்தியது தோழர் பியூசிக்கின் பேனா முனை செக் மக்களை வீரம்மிக்க மக்களாக மாற்று வதில் பெரும்பணியாற்றியது. ஆக்கிரப்பை முறியடிக்க கம்யூனிஸ்டுக் களும் மக்களும் போராடிநின்றனர்.

இறுதியில் தோழர் யூலியஸ் பியூசிக் நாஜிப்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு கொடிய சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார். அவர் தனது சிறைக்கால சித்திரவதைக் கொடுமைகளை சிறுசிறு குறிப்புக் களாக நாளாந்தம் எழுதி ஒரு நல்லெண்ணம் கொண்ட சிறைக் காவலர் மூலம் வெளியே அனுப்பி வந்தார். அதுவே அவரது உலகப்புகழ் பெற்ற 'தூக்குமேடைக் குறிப்பு' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. அந்நூல் இதுவரை 90க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு அச்சாகி யுள்ளது. அவரது அக்கால கட்டுரைகள் மக்கள் மத்தியில் போராட்ட உணர்வுக் கும் உந்தலுக்கும் புகழ்பெற்றவையாகும்.

கொடிய சிறை சித்திரவதைகளுக்குப் பின் 1943ம் ஆண்டு செப்ரெம்பர் 8ந் திகதி பெர்லின் புளோட் சென்சீ சிறைக் கூடத்தில் நாஜிப்படைகளால் கோரமாகக் கொல்லப்பட்டார் பியூசிக். அவர் உயிர் துறக்கும் போது வயது 40 மட்டுமே. தனது நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உலக மக்களின் விடுதலைக்காகவும் வீரம் செறிந்த கம்யூனிஸ்ட் செங்கொடியின் கீழ் தனது பேனாவாலும் உறுதிமிக்க கம்யூனிஸ்ட் வாழ்வாலும் முன்னுதாரண புருஷனாக தோழர் யூலியஸ் பியூசிக் தியாகியானார்.

அத்தகைய ஒருவரை வெறும் பத்திரிகையாளராக மட்டும் அடை யாளம் காட்டவே பல பத்திரிகைகள் முயலுகின்றன. கடந்த செப்ரெம்பர் 8ம் திகதி இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அவரை ஒரு பத்திரிகையாளர் என்றவாறே நினைவு கூர்ந்து செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

# இந்திய எண்ணெய்க் கம்பனிகளின் ஊழல்

பிரதமர் ரணில் திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் முகாமைப் பொறுப்பை ஏற்குமாறு இந்தியா எண்ணெய்க் கம்பனியை அழைத் ததைத் தொடர்ந்து 2002 செப்டம்பரில் ஆரம்பம் தொட்டு இன்று வரை பெரும் இலாபத்தில் இயங்கி வந்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்திய எண்ணெய்க் கம்பனியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்தது.

எண்ணெய்க்குதங்களை நிருவகிப்பதுடன் மட்டுமல்லாமல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மிகச் சிறந்த நூறு நிரப்பு நிலையங்களையும் இந்திய எண்ணெய்க் கம்பனிக்கு தாரை வார்த்து உள் நாட்டில் பெற்றோலியத் தையும் பெற்றோலியப் பொருள் விநியோக உரிமையையும் அக் கம்பனிக்கு வழங்கப்பட்டது.

100 நிரப்பு நிலையங்களைக் கையளித்த பின் லங்கா இந்திய ஒயில் கம்பனி யென்ற கம்பனி உருவாக்கப்பட்டது. 100 நிரப்பு நிலையங்களின் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டபின் அந்தத் தொகையை அவர்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டும் என்பதே உடன்பாடு. இந்த 100 நிரப்பு நிலையங்களும் பத்துக் கோடி அமெரிக்க டொலர் பெறுமதியானவை யென (கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய்) மதிப்பீட்டாளர்கள் தெரிவித்த போதும் அந்தப் பெறுமதியின் அரைவாசித் தொகையையே வழ்ங்க இந்திய நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்தியக் கம்பனி பல ஊழல்களிலும் கீழ்த்தரமான வியாபார உத்திகளிலும் ஈடுபட்டு வருவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தஹம் விமலசேனா குற்றஞ் சுமத்துகிறார். நாட்டில் உள்ள ஏனைய 400 நிரப்பு நிலையங்களையும் குறுக்கு வழியில் தமது பொறுப்பில் எடுப்பதற்கு ஏதுவாக தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு ஆகக் கூடிய வசதிகளை கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து வருவதாக இந்தியக் கம்பனி மீது மேலும் குற்றஞ் சுமத்தப்படுகிறது.

பொதுவாக களஞ்சியப்படுத்துவதற்காக இந்தியக் கம்பனி மூன்றில் ஒரு பகுதி நிதியைச் செலுத்த வேண்டும். திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் 15ஐ பயன்படுத்துவதாக கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் பெயரளவிலான குத்தகையாக ஒரு இலட்சம் ரூபாய் மட்டுமே செலுத்துகிறது.

100 நிரப்பு நிலையங்களில் விற்பதற்குத் தேவையான பெற்றோலியப் பொருட்கள் மட்டுமே இறக்குமதி செய்ய இந்தியக் கம்பனிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியக் கம்பனி வீட்டுப்பாவனைக்கான மண்ணெண்ணையை இறக்குமதி செய்து அதை விமானங்களுக்கான எரிபொருள் எனக் காட்டிக் கொண்டதன் மூலம் அதற்கான தீர்வையான லீற்றர் ஒன்றுக்கு ரூபா1.25 செலுத்தாமை யால் இலங்கைக்கு ரூபா 3 கோடி 80 இலட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது. விமானங்களுக்கான எரிபொருளுக்கு தீர்வை ஏதும் இல்லையென்பதால் மண்ணெண்ணையை விமானங்களுக் கான எரிபொருள் என்று பொய் தகவல் கொடுத்து இலங்கை சுங்கப் பகுதியை ஏமாற்ற முயன்றுள்ளது. இது குறித்து சுங்கப்பகுதி விசாரணை மேற்கொண்டுள்ளது. இந்தியாவிலிருந்து வீட்டுப் பாவனைக்கான மண்ணெண்ணை ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளபோதும் இந்திய அரசுக்கு சொந்தமான இந்திய எண்ணெய்க் கம்பனி மண்ணெண்ணையை இலங்கைக்குள் இறக்குமதி செய்தது இங்கு கவனிக்கத் தக்கது. இந்திய அரசும் இந்தியக் கம்பனியின் மூலமாக பொய்யும் புரட்டிலும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு சுமார் இருபது கோடி ரூபா கொடுக்க வேண்டியுள்ளது. இந்தியக் கம்பனி 100 நிரப்பு நிலையங்கள் மூலம் மாதந்தோறும் 100 கோடி ரூபா இலாபம் பெறுகிறது. (நிதிச் செலவு உட்பட பெரும்பகுதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே செலுத்துகிறது).

இந்தியக் எண்ணெய் கம்பனிக்கு முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் உண்டு. அதே சமயம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முதலீட்டுச்சபை அங்கீகாரம் இல்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யும் பம்புகளுக்கு வரிச் சலுகை இல்லை. இதனால் இந்தியக் கம்பனி பம்புகளை மிகவும் மலிவாக இறக்குமதி செய்து அவற்றை தனிப்பட்ட முகவர்களுக்கு இலவசமாக வழங்கி அந்த நிரப்பு நிலையங்களையும் தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிக் கின்றது. ஏற்கனவே பத்தரமுல்லையில் உள்ள தனியார் நிரப்பு நிலையத்திற்கு இந்தப் பம்பு வழங்கப்பட்டுள்ளது.

முதலீட்டு சபையின் அங்கீகாரத்தைப் பெற இந்தியக் கம்பனி 50 இலட்சம் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய வேண்டுமென்ற விதியுண்டு. இந்தியக் கம்பனி தனியார் பெயரிலுள்ள நிரப்பு நிலையங்களுக்கு பம்புகளையும் தாங்கிகளையும் பராமரிப்பு, கட்டிடங்களுக்கு வர்ணப்பூச்சு, ஜெனரேற்றர்கள் வழங்கவும் இலகு கடன் வசதி செய்து கொடுக்கவும், தளபாடங்கள், விளம்பர மின் விளக்குகள் என்பன வழங்கவும் மேற்கூறிய பணத்திலிருந்து செலவு செய்கிறது. இதுவும் ஒருவகைப்பட்ட இலஞ்சம் ஊழல் சம்பந்தப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

இந்தியாவின் ஆக்கிரமிப்பு பொருளாதார ரீதியில் இடம்பெற்று வருகின்றது. இந்திய ஊடுருவலை தமிழ்க் கூட்டணியும், ஜே.வி.பியும், வேறு சில தமிழ்ப் பிரமுகர்களும் அடக்கி வாசிக்கிறார்கள். யூஎன். பி. அரசு சமாதானப் பேச்சு என்று கூறிக் கொண்டு நாட்டை குறிப்பாக அமெரிக்காவிடமும் இந்தியாவிடமும் படிப்படியாக கையளித்து வருகிறது. இந்த ஆபத்தான நிலைமையை மக்களு க்கு விளங்க வைத்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் பொறுப்பை சகல முற்போக்கு இடதுசாரி தேசபக்த சக்திகள் ஏற்க வேண்டும்.

- சிறீ -

படிப்பகம்

www.padippakam.com



# பிள்ளையாருக்கு ஞானம் பிறந்த கதை

பிள்ளையார்' என்றதும் பலருக்கு நமது ஊரில் உள்ள கோவில்கள், திருவிழாக்கள் உடனடி நினைவுக்கு வரலாம்.

இந்தப் பர்ணாந்துப் பிள்ளையார் அண்மையில் பாராளுமன்றத்தில் ஒரு உரையை வாய் மொழிந்திருக்கிறார். அதாவது ஆங்கில மொழிக்கல்வி மூலமே எமது நாட்டு மக்களிடையே புரிந்துணர்வை வளர்க்க முடியும். அதாவது சிங்கள மாணவர்களும், தமிழ் மாணவர்களும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் அமர்ந்து கலந்து படிக்க முடியும். இதன் மூலம் அவர்களுக் கிடையே 'அண்டஸ்ரான்டிங்' புரிந் துணர்வு ஏற்படும் என்பது பிள்ளை யாரின் ஞான உதயமாகும்.

பாரம்பரியமாக தமிழ் பேசிவந்த சமூகங் களாக வாழ்ந்த வடமேல் மாகாண கரையோர மக்களை சிங்களமயப் படுத்தியதில் இந்தப் பிள்ளையாருக்கும் முக்கிய பங்கு உண்டு.

தனிச் சிங்களச் சட்டம் அமுலுக்கு வந்த பின், தாய் மொழிக் கல்வி வந்தபின் அன்னாரது அரசியல் வாழ்வு சூடு பிடிக்கும் காலத்தில் அந்த 'தர்மிஷ்டம்' நடந்தது நடந்தும் வருகின்றது.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை, சிலாபம், முந்தல் என்று நீளும் பிரதான நகரங் களும் அதனை அண்டிய சிறுகிராமங் களும் அதனை தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிரதான தொழில்களாக கடற்தொழிலும், விவசாயமும் இருக்கின்றன.

ஒருபுறம் காலத்துக்குக் காலம் ஏற்படும் இனக்கலவரங்களாலும், திட்டமிடப்பட்ட முறையில் அம்மக்களின் வாழ்வின் அடிப்படையில் இன மொழி ரீதியான மாற்றங்களைத் திணிப்பதன் மூலம் அந்த சமுதாயக் கட்டுக் கோப்புகள் சிதைக்கப் பட்டு அவர்களில் பலர் கடற்தொழில், விவசாயம், வியாபாரம், தவிர கடற் தொழிலாளர்களாகவும் மாற்றப் பட்டுள்ளனர்.

இந்த அடிப்படைத் வாழ்வியலில் மாற்றங்களை மேற்கொள்ளும் முகமாக

1. தமிழ்ப் பாடசாலைகள் வலுவற்ற ஆக்கப்பட்டு சிங்கள மொழிக்கல்வி திணிக்கப்பட்டமை.

2. பிறப்புச் சான்றிதழ், திருமண பதிவு என்பனவற்றில் சாகியம் சிங்களவர் என பதிவு செய்தல்.

3. எங்கும் எதிலும் சிங்களவருக்கே முன்னுரிமை என்ற மாயையை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

போன்ற சில காரியங்களைப் பட்டியல்ப் படுத்தலாம். இதில் தமது அரசியல் இலாபம் கருதியும், தாம் சிங்கள மக்களின் தலைவனாக இருக்கும் தகுதியை உறுதிப்படுத்தும் முகமாக நமது பிள்ளையாரும் அவ்விடயங்களில் உடந்தையாக இருந்துள்ளார்.

சிங்கள மொழிமூலக் கல்விக்கே அதிக வாய்ப்பு வசதிகள், சிங்கள மொழிமூலம் கற்றவர்களுக்கே அதிக வேலைவாய்ப்பு என்பன அவரது அரசியல் வாழ்க்கைக்கு சாதகமாக அமைந்தது.

ஆனால் பின்னர் மாவட்ட ரீதியான விகிதாசார தேர்தல் முறை, மாவட்ட மட்டத்திலான - சாகிய அடிப்படையி லான வேலை வாய்ப்பு முறை கொண்டுவரப் பட்டபின் அன்னாரின் போக்கில் மண் விழுந்தது.

சிங்கள மொழியில் போட்டிப் பரீட்சைக் குத் தோன்றி வேலை வாய்ப்பைத் தேடும் ஒரு கம்பஹா மாவட்ட தமிழ் இளைஞன் கருமையான போட்டியைச் சந்திக்க வேண்டி உள்ளது. ஆனால் அதே தமிழ் மாணவன் தமிழ் மொழியில் தோற்றியிருப்பின் குறித்த மாவட்டத்தில் தமிழர்களுக்கான ஒதுக்கீட்டில் மிக சுலபமாக தனது வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

இதுவே இன்று நமது பிள்ளையாருக்கு பிறந்த ஞானோதயம் ஆகும். இந்த நிலையில் மீண்டும் தமிழ் மொழிக் கல்வி, தமிழ்ப்பாடசாலை வேண்டும் என்று தொடங்கினால் அல்லது பேசினால் அடுத்த தேர்தலைச் சந்திக்க முடியாது. சிங்கள மக்களின் தலைவனாகவும் அரசியல் நடத்த முடியாது எனவே தான் ஆங்கிலமொழிக் கல்வியின் அவசியம் பற்றி அறைந்து பேசுகின்றார்.

ஆனாலும் ஒன்று, நமது பிள்ளையார் என்ன செய்தாலும் 'தான் ஒரு தமிழன்' என்பதை பகிரங்கமாகவும் ஒத்துக் கொள்பவர். தனது அரசியல் பின்னடை வுகளின் போதும் அந்த மனச்சாட்சி அவரை உறுத்துவதாகவும் இருக்க லாம். எப்படியென்றாலும் நமது நாட்டு மக்களிடையே புரிந்துணர்வு வந்தால் சரி. அதனை விடுவார்களா என்பதே கேள்வி.

- பட்டினத்தடிகள்-

# தோழர் கார்த்திகேசனின் நினைவும் அவரைக் கொச்சைப்படுத்தும் புல்லுருவிகளும்

தோழர் கார்த்திகேசன் மறைந்து 26 வருடங்கள் ஆகின்றன. அவரது பொதுவுடமை வாழ்வு முன்னுதாரணம் மிக்கதாகும். அவர் சொல்லாலும் செயலாலும் நேர்மையான பொது வுடமை வாதியாக வாழ்ந்து மறைந்தவர். மாக்சிச லெனினிச வாதியாகிய அவர் 1964ல் இலங்கையின் பாரம்பரிய கம்யூனிஸ்ட்கட்சி முன்னெடுத்த பாராளுமன்றப் பாதையையும் நவீன ரிதி புவாதத்தையும் உறுதியாக எதிர்த்து புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை முன்னெடுத்த தலைவர்களில் ஒருவர். அவரது அரசியல் வாழ்வையும் பணியை யும் தோழர் சி.கா.செந்திவேல் எழுதியுள்ள 'வடபுலத்து பொது வுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும் ' நூலில் விரிவாகவும் தெளிவாகவும் காணஇயலும்.

அத்தகைய ஒரு முன்னோடித் தலை வரை நினைவுபடுத்துவதாகக் கூறிக் கொள்ளும் சிலர் கார்த்திகேசனின் அரசியல் நிலைப்பாட்டை மறைத்து கல்வித்துறை சார்ந்த அறிஞராகக் காட்டிக்கொள்ள எத்தனிக்கின்றனர். அது மட்டுமன்றி கார்த்திகேசன் எதிர்த்து நிராகரித்து நின்ற திரிவுவாதத்துடன் சமரசம் காண்பதிலும் இந்தப் புல்லுருவிக் கூட்டம் சென்று நிற்கிறது. திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கைகோர்த்து அரசியல் சல்லாபம் புரியும் இவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு சாமரை வீசுவதில் சுகம் காணுகின்றனர். இந்த அடிப்படையில் தான் இவர்கள் அண்மையில் பொன். கந்தையாவைத் திடீரென நினைத்து கொழும்பில் நினைவு விழா நடாத்தினார்கள். அதில் இவர்களது விருப்புக்கு ஏற்ற ஒரு மோசமான உரையை தமிழகத்து திரிபுவாதியான தா. பாண்டியன் மூலம் நிகழ்த்தி திருப்தி கண்டனர். அந்த மேடையில் திரிபுவாதத் தலைவரான டி.யூகுணசேகராவுடன் பக்கத்தே இருந்து தனது திரிபுவாதப் பக்தி உணர்வை வெளிக்காட்டியவர் முன்னாள் மாக்சிசலெனினிச மவோ வாதியான எம். குமாரசுவாமி

தொடர்ச்சி 12ம் பக்கம்..

## ஆசிரியர் அவர்கட்கு

புதிய பூமி மாதாந்தப் பத்திரிகை.
கொழும்பு.

### கண்டனம்

ஐயா!

தங்களின் ஓகஸ்ட் மாத புதிய பூமி பத்திரிகையில் கோமரசங்குளம் அதிபர் விவகாரம் என வந்த செய்தியை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. *A.* கோணேஸ் எனது அனுமதி இன்றி பொய்யான தகவல் தந்துள்ளார். பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவருக்கு தெரியாமல் எனது ஒப்பமில்லாது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை தனிப்பட்ட விரோதங்களுக்கு இவர் பாவித்ததை வன்மையாக கண்டிக்கிறேன்.

முன்னாள் அதிபரின் காலத்தில் இவர் நிர்வாக உறுப்பினராக கடமையாற்றியவர். அப்போது குறைகளை சுட்டிக்காட்டாது அல்லது கேட்காது ஏன் அவர் இடமாற்றம் பெற்று 11/2 வருடங்களுக்குப் பின் கேட்கின்றார். இவர் அப்பாடசாலையில் கன்ரீன் (தேனீர்ச்சாலை) நடாத்தி வந்துள்ளார். திடீர் சோதனையில் சுகாதாரத் திணைக்களம் **PH1, MOH DPDPH** பார்வையிட்டு சுகாதார சீர்கேடாக இருப்பதாக பாடசாலையில் பேணும் சம்பவத்திரட்டுப் புத்தகத்திலும் குறிப்பு இட்டதுடன் மூடும்படியும் குறிப்பிட்டுள்ளார்கள். அதனால் தேனீர்ச்சாலை அதிபரால் 2431 மாணவரின் நலன்கருதி மூடியுள்ளார். இவ்வாறு தனிப்பட்ட கோபம் காரணமாக இக்கடிதத்தை அனுப்பியுள்ளார். அதில் எந்த உண்மையும் கிடையாது.

நான் மேற்படி அதிபரிடம் இருந்து 03-09-2001 அன்று சட்டரீதியாக பாடசாலையையும் நிதிகளையும், ஆவணங்களையும் பொருட்களையும் சரிபார்த்துப் பெற்றுக்கொண்டேன். அதன் கடிதப்பிரதி இணைத்துள்ளேன். தற்போது நானும் நகரப்புறத்தில் பெரிய பாடசாலை கேட்டுவருகின்றேன் அப்போது எனக்கும் இவர்கள் இப்படி செய்வார்கள் என்பது தெரியும் . இருந்தும் உண்மைக்கு முரணாக திரு. *A.* கோணேஸ் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எழுதியமையை கண்டிப்பதுடன் இச்செய்தியை பத்திரிகையில் பிரசுரிக்குமாறு மிகவும் தயவுடன் வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
அதிபர் - சி. விசுவலிங்கம்

20-08.2003

## கம்யூனிஸ்ட் பாண்டியனா..

10ம் பக்க தொடர்ச்சி..

வர்க்கத்தினரின் நிலைப்பாட்டிலிருந்தே அணுகுகின்றனர். ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி என்ற பேரினவாதத் திற்கு அடிபணிந்துவிட்ட திரிபுவாத கட்சியின் விளக்கங்களை வேதவாக் காக கொண்டால் இலங்கை யின் இனப்பிரச்சினையை சரியாக விளங்கிக் கொள்ள முடியாது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினதும் இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சாதாரண உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத் தை ஏற்றுக் கொண்டவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் எம். பி. யான பொன் கந்தையாவின் நினைவாக பேருரையாற்ற பாண்டியனை இங்கு அழைத்தவர்கள் பெயருக்காக ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியிலிருக்கும் சில தமிழ் பிரமுகர்களே ஆவர். அடிமைப் புத்தி கொண்ட அவர்கள் பாண்டியனை அழைத்து வந்து அவரின் உபதேசங் களை கேட்டு தங்களது அடிமைத் தனத்தை மேலும் உறுதி செய்து கொண்டனர்.

இந்திய மேலாதிக்க, தேசிய அகங்காரத் தை கொண்ட பாண்டியன் இலங்கை யின் பேரினவாத அடக்கு முறையாளர் களின் குரலாகவே உரையாற்றி யுள்ளார். அதன்மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அவர் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல என்பதை விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக விதைக்கப்பட்டுள்ள இடதுசாரி விரோத போக்கிற்கு உரம் சேர்ப்பதாகவே பாண்டியனின் உரை அமைந்திருந்தது தான் பிரச்சி னையாகும்.

பாராளுமன்ற இடதுசாரித் தலைவர் களில் சிலர் தமிழ்மக்களின் உரிமை தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாடு பேரினவாதிகளுடன் சமரசம் செய்து கொள்வதாக அமைந்திருந்ததையும் பாராளுமன்ற தேர்தல் வெற்றிகளை லட்சியமாக கொண்ட அந்தச் சிலர் பேரினவாதத்துடன் இணங்கிப் போனதையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ்தேசியவாதிகள் அனைத்து இடதுசாரி தலைவர் களுக்கும் சக்திகளுக்கும் எதிரான பிரசாரத்தை திட்டமிட்டு வளர்த் துள்ளனர். தமிழ் மக்களின் போராட்டத் தின் பக்கம் நின்று வரும் இடதுசாரி களையும் கட்சிகளையும் தலைவர் களையும் தமிழ் தேசியவாதிகள் நிந்தித்தே வருகின்றனர். அத்தகைய தேசியவாதிகளுக்கு பாண்டியனின் திரிபுவாத இந்திய அகங்காரப் பேச்சு நல்ல பிடியாகியுள்ளது.

இடதுசாரிகள் எந்த நாட்டைச் சேர்ந்த வராயினும் இலங்கை தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான வர்கள் என்று பொத்தாம் பொதுவாக பேசுபவர்களுக்கு பாண்டியனின் பேச்சு சுவையான தீனியாகிவிட்டது. இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கும் இந்தியாவி லுள்ள ஏனைய புரட்சிகர கம்யூனிஸ்ட், இடதுசாரி, ஜனநாயக அமைப்பு களையும் அதன் தோழர்களையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைகளிலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டும். மேற்படி இரண்டு கட்சிகளின் சாதாரண தோழர்களி லிருந்து பாண்டியன் போன்றவர்களை பிரித்துப் பார்க்க வேண்டும்.

தேசிய இனவிடுதலைப் போராட்டங் களை பிரிவினைவாதம் என்ற அடிப்படையில் எதிர்க்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமைகள் அப்போராட்டங்களின் நியாயப்பாட்டை விளங்கிக் கொள்ளத் தவறுகின்றன. அதனால் ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி போலன்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் வகுப்புவாதத்திற்கு எதிராக முன்னெடுக்கும் மக்கள் போராட்டங் களை குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை. ஆனால் இலங்கை வந்து பாண்டியன் பேசியிருக்கும் பேச்சு இலங்கை பேரினவாதத்தை ஆசீர்வதிப்பதாகவே இருக்கிறது.

அதனால் அவர் கம்யூனிஸ்ட் பாண்டிய னாகவின்றி இந்துத்துவ பாண்டியனா கவே முகம்காட்டியுள்ளார். அவரின் பல கருத்துக்கள் மாக்சிகமாகவன்றி காந்தியமாக இருப்பதுடன் இந்திய மேலாதிக்க தேசிய அகங்காரமாகவும் வெளிப்பட்டுள்ளன.

இன்றைய ஏகாதிபத்திய உலக மயமாதல் சூழ்நிலையில் தேசிய இனங்களின் உரிமைகளை அங்கி கரிப்பதே ஒரு நாட்டின் ஐக்கியத்தை கட்டி வளர்ப்பதற்கான நிபந்தனையும் அடிப்படையுமாகும். சிறியதோ பெரியதோ அனைத்து நாடுகளிடை யேயும் சமத்துவம் உறுதி செய்யப்படு வதே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நாடுகளின் ஐக்கியப்படுவதற்கான நிபந்தனையும் அடிப்படையுமாகும். இதை ஏற்றுக் கொள்ளாதவர் கம்யூனிஸ்ட்டுகளாக இருக்க முடியாது. பாண்டியன் என்பவரைக் குறை கூறிப்பயன் இல்லை. திரிபுவாதக் கட்சி யினரையும் அவர்களோடு கூடிக்குலாவி நின்று கழுத்தறுப்பு அரசியல் செய்யும் குமாரசுவாமி மாஸ்டர் கோஷ்டியையும் அடையாளம் கண்டால் போதுமானதாகும்.

## பிரஜாவுரிமைத்

4ம் பக்க தொடர்ச்சி.

சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் பின்னர் புதிய ஜனநாயக கட்சியும் வலியுறுத்தி வந்தன.

இலங்கை இந்தியன் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன சத்தியாக்கிரகம் உட்பட பல போராட்டங்களை முன்னெடுத்த போதும் அவற்றை மக்கள் இயக்கங் களாக முன்னெடுக்காது அரசாங்கங் களுடனான பேரப்பேச்சுக்குரிய விடயமாக கொண்டன. ஏனைய மலையக தொழிற்சங்கங்கள் கூட ஆளும் கட்சிகளின் அனுதாபத்தினால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையாகவே கொண்டனர். 1977இற்கு பிறகு பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களாலேயே இப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை வளர்க்கப்பட்டது. ஆளும் கட்சியுடன் இணைந்து பேசித்தீர்க்கலாம் என்று சிலர் நம்பினர். அதாவது பாராளு மன்றத்திலேயே அதற்குரிய சட்டமாக்கப் பட வேண்டும் என்பதால் அதனை பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய விடயமாக சிலர் காட்டினர். அதனால் பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே பிரஜாவுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்ட தாக சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர். சிலர் இ.தொ.கா. தீர்த்து வைத்ததாகவும் சிலர் ம.ம.மு தீர்த்து வைத்ததாக சிலர் ஐ.தே.க. தீர்த்து வைத்ததாகவும் கூறுகின்றனர்.

ஆனால் பேரினவாதிகளைத் தவிர அனைத்து சக்திகளும் பலவிதத்திலும் இப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு அதாவது சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களாக இருந்தவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தி பலவிதமான நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளன.

2000ம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த அரசியலமைப் பினை மாற்றுவதற்கான சட்டமூலத்தில் இந்தியாவுக்கு செல்லவேண்டிய நிலையில் இங்கிருக்கும் மேற்படி மக்களு க்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஒரு ஏற்பாடு இருந்ததும் குறிப்பிடத்தக்க தாகும்.

சரியான காத்திரமான மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்படாத தினாலேயே 50 வருடங்களுக்குப் பிறகே சட்டரீதியாக மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டியுள்ளது என்பதனை விமர்சனரீதியாக பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது. அதேவேளை பல சக்திகளின் பலவிதமான ஒத்துழைப் புடன் இப்பிரச்சினை தீர்விற்கு வருவது வரவேற்கத்தக்கதாகும்.

இந்திய கடவுச்சீட்டுப் பெற்றவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப் பட்டாலும் நடைமுறையில் இருக்கும் பேரினவாத நிர்வாகமுறை பலசிக்கல் களை ஏற்படுத்தலாம். பிரஜாவுரிமை உறுதிசெய்யப்பட்ட பிறகும் சமத்துவமாக மதிக்கப்படாமல் இருக்கலாம். அப்பிரச் சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு அவ்வப்போது குரல் எழுப்பப்பட வேண்டி யதும் போராட்டங்கள் செய்யப்பட வேண்டியதும் அவசியம்.

சத்தியகடதாசி பிரகடனத்தின் மூலம் இலங்கை பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ளும் சட்ட ஏற்பாட்டை நடை முறையில் உறுதி செய்யவேண்டும். அத்துடன் பிரஜைக்குரிய உரிமை களையும் படிப்படியாக உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பிரஜாவுரிமை கிடைத்துவிடும் என்றவுட னேயே பாராளுமன்றத்தில் மலையகத் தமிழ் மக்களின் உறுப்புரிமை அதிகரிக்கும் என்று சிலர் கூறுகின்றனர். பிரஜாவுரிமை என்பது வாக்குரிமையும் பாராளுமன்ற உறுப்புரிமையும் மட்டுமல்ல என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

பிரஜாவுரிமை கிடைத்துவிட்டால் மட்டும் பாராளுமன்றத்திலும் ஏனைய சபை களிலும் பிரதிநிதித்துவம் கிடைத்துவிடும் என்பதில்லை. அதற்குரிய தேர்தல் முறை, தொகுதி நிர்ணயம் என்பன மாற்றியமைக்கப்படவும் வேண்டும். இப்பிரதிநிதித்துவத்தினால் மலையகத் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினை களுக்கும் இம்முதலாளித்துவ, அமைப்பின் கீழ், பேரினவாத சூழ் நிலையில் தீர்வு கிட்டிவிடாது. அவற்றை வென்றெடுக்க தொடர்ச்சியான பல போராட்டங்கள் அவசியமாகின்றன. . மாகாணசபைகளுக்கும் உள்நாட்டு சபைகளுக்கும் உறுப்பினர்களை தேர்ந் தெடுத்து அனுப்பினாலும் மலையகத் தமிழ் மக்களின் பிரதேசமான தோட்டப் பகுதி அவற்றின் அதிகார வரம்பிற் குள்ளன்றி மத்திய அரசின் கீழேயே இருக்கிறது.

எனவே அவர்களின் வாழும் பகுதி அவர்களின் சுயாட்சியின் கீழ் கொண்டு வரப்பட வேண்டியதும் அவசியமாகும்.

சட்டப்பிரமானங்களில் இருக்கும் ஆளும் வர்க்கத்தை தொடர்ந்து பாதுகாக்கும் அடிப்படைகள் இருப்பதை விளங்கிக் கொள்வது அவசியம். எனவே ஆளும் வர்க்கத்தினால் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கொண்டு வரப்படும் சட்டங்களின் மூலம் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படுகிறதோ இல்லையோ ஆளும் வர்க்கத்தின் நிலை பாதுகாக்கப்படும்.

அந்த அடிப்படையில் சட்டங்கள் ஆக்கப்படுவதுடன் பிரஜாவுரிமைப் பிரச்சினை முற்றாக தீர்த்து விட்டதாக கொள்வதற்கில்லை. பல புதிய பிரச்சினைகள் தோன்றலாம். ஆனால் புதிய பிரஜாவுரிமைத் திருத்தச்சட்டம் சட்டரீதியாக பிரஜாவுரிமை அந்தஸ்தை வழங்குவதை மறுப்பதற்கில்லை.

1948 பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலமே பேரினவாதம் சட்ட அந்தஸ்துடன் இலங்கையில் நிறுவனப்படுத்தப்படுகிறது. அது சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பாராளுமன்றம் சட்டமியற்ற முடியாது என்றிருந்த உறுப்புரை 29 (4)ஐ செயலிழக்க வைத்த சட்டமாகும். அதை தொடர்ந்து சிங்களமொழி மட்டும் சட்டம் உட்பட பல அடக்குமுறைச் சட்டங்களாக்கப்பட்டன.

பேரினவாதத்தை சட்டரீதியாக நிறுவனப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த பிரஜாவுரிமைச் சட்டத்தினால் ஏற்பட்ட மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை 50 வருடங்களுக்குப் பின்னர் சட்டரீதியாகத் தீர்க்கப்படுகின்ற இவ்வேளையில் பேரினவாத நிறுவனப்படுத்தலினால் ஏற்பட்ட பலப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்று நம்புவோமாக. அதற்கு மக்கள் போராட்டப் பாதையே சிறந்த வழியாகும்.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි Puthiya Poomi
சுற்று 10 ஒக்ரோபர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 62

## ஈராக் வியட்னாமாக மாறியுள்ளது

கடந்த மார்ச் 20ம் திகதியில் இருந்து யூலை 9ம் திகதி வரை ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினர் 212 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1044 பேர் படுகாயங்கள் அடைந்துள்ளனர். சராசரி ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்கப் படையாளி கொல்லப்படுவதுடன் சிறியதும் பெரியதுமான 13 தாக்குதல்களை அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் எதிர் கொண்டு வருகின்றன. இந் நிலையில் மேலும் 10.000 ஆயிரம் படையினரை அமெரிக்கா ஈராக்கிற்கு அனுப்ப உள்ளது. அமெரிக்காவிற்கு ஈராக் மற்றொரு வியட்னாமாக மாறியுள்ளது.

# நெல் உற்பத்தியைத் தடுக்க சட்டம் பிரதமர் கூறும் திட்டம்

கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் நெல் உற்பத்தி அதிகரித்து வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க' நெல் சேகரிப்பு களஞ்சியங்களில் மூடைமூடையாக நெல் தேங்கி இருப்பதாகவும் அவை பழுதடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதை தாமதப்படுத்தியும் நிறுத்தியும் வருகின்றது. அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல்லுக்கு 13 ரூபா 50 சதம் கொடுத்து கொள்வனவு செய்து வந்தது. இப்போது அவ்வாறு கொள்வனவு செய்யப்படாமையால் தனியார் வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிலோ 8 ரூபாவுக்கும் வாங்கிக் கொள்கிறார்கள். இதனால் விவசாயிகள் மோசமான நட்டத்தை அடைகிறார்கள். நெல் உற்பத்திக்கு செலவிட்ட கடனை அடைக்க முடியாது திண்டாடுகின்றனர். இதனால் சில விவசாயிகள் தற்கொலை செய்தும் கொண்டனர்.

கடந்த காலபோக சிறுபோக காலத்தில் நெல் உற்பத்தி அதிகளவிற்கு சென்றுள்ளதாக அரசாங்க மதிப்பீடு கூறுகின்றது. அண்மையில் பொலநறுவைக்குச் சென்ற பிரதமர் நெல் உற்பத்தி அதிகரித்து விட்டது என்றும் எனவே அதனைத் தடுக்கச் சட்டம் கொண்டு வரப்போவதாகவும் கூறியிருக்கிறார். பிரதமரின் கூற்று விவசாயிகளைச் சினமடைய வைத்துள்ளது. அண்மையில் சம்மாந்துறையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் மறியலில் ஈடுபட்டதுடன் நெல் மூட்டைகளை வீதியில் வைத்து எரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

நெல் உற்பத்தி அதிகரித்துள்ளமை உண்மையானாலும் நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தியாகவில்லை என்பதே உண்மை நிலையாகும். நெல் உற்பத்திக்கு தடைச் சட்டம் கொண்டு வர முற்படும் பிரதமர் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதிக்கு தடை விதிப்பது பற்றி ஏன் சிந்திக்கவில்லை. அரிசி விலையைக் குறைப்பது பற்றி ஏன் முடிவு செய்யவில்லை. ஒரு கிலோ நெல்லை ரூ. 13.50க்கு கொள்வனவு செய்யும் போது அரிசியின் விலை முப்பது நாற்பது ரூபா என விற்கப்படுகிறது. யார் கொள்ளை லாபம் பெறுகிறார்கள். உற்பத்தி செய்த விவசாயிகளா? அரிசி வர்த்தக முதலைகளா? வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யும் தரகு வர்த்தகர்களா?

இப்பொழுதும் சீனா, இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளில் இருந்து பல வகைப்பட்ட அரிசி இறக்குமதி நாளாந்தம் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. இது ஏன் என்பதை சற்று ஆழ்ந்து சிந்தித்தால் இன்றைய அரசாங்கத்தின் விவசாய விரோத மக்கள் விரோத நிலைப் பாட்டைக் காண இயலும். அதே நேரத்தில் யாருடைய தேவை, நன்மை, லாபத்திற்காக ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி செயல்பட்டு வருகின்றது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

நெல் உற்பத்திக்கு கட்டுப்பாடும் தடையும் விதிக்க சட்டம் வேண்டும் எனக் கூறும் பிரதமர் உலக வங்கியின் ஆலோசனைப் படியேயாகும். தாராள இறக்குமதியின் கீழ் இந்நாட்டின் அரிசி உணவுப் பண்பாட்டைப் படிப்படியாக அழித்து கோதுமை மாவின் பாவனையை உயர்த்துவது தொடரும் திட்டமாக இருந்து வந்துள்ளது. இப்போது பொதி செய்யப்பட்ட அந்நிய உணவு வகைகளைக் கிராமங்கள் வரை எடுத்துச் செல்லும் உள் நோக்கம் பிரதமரது திட்டத்தில் உள்ளதாகவே காணமுடிகிறது.

அரிசி உணவுப் பழக்கத்தைக் கொண்ட நமது விவசாய நாட்டிலிருந்து அரிசி உற்பத்திக்கு முடிவு கட்டிவிட்டால் அந்நியர் உணவு வகைகளுக்கு கையேந்திக் காத்திருக்கும் நுகர்வும் பண்பாட்டை ஏற்படுத்தலாம் என்ற உலகமயமாதல் திட்டத்திற்கே பிரதமரின் கூற்று அடிப்படையாகி உள்ளது. விவசாய நாட்டை நாசப்படுத்தி விவசாயிகளைப் பட்டினிக்குள் தள்ளி வரும் இன்றைய அரசாங்கத்தை எதிர்த்து விவசாயிகள் கிளர்ந்தெழுவதைத் தவிர வேறு வழியே கிடையாது.

# இலங்கையில் இந்தியா தலையிடுமாம் இந்தியப் பிரதமர் அறிவிப்பு

இலங்கையில் இடம் பெற்று வரும் சமாதான முயற்சிகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும். உரிய வேளை வரும் போது அதில் இந்தியா தலையிடும் எனவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கைப் பிரதமரிடம் தெரிவித்துள்ளார். அண்மையில் ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கு கொள்ளச் சென்ற போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தியப் பிரதமரின் கூற்றை உறுதிப்படுத்துவது போன்று அண்மையில் சென்னையில் நடந்த கருத்தரங்கில் இந்தியப் பத்திரிகையாளர்கள் சிலரும் இந்திய வெளியுறவுத் துறை நிபுணர்கள் சிலரும் இந்தியா இலங்கை விடயத்தில் ஒதுங்கியிருக்கக் கூடாது என்றும் உடன் தலையிட வேண்டும் எனவும் வற்புறுத்தியுள்ளனர். அமெரிக்கா, யப்பான் நாடுகளின் அக்கறைகளைச் சுட்டிக் காட்டி இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட இலங்கைப் பிரச்சினையில் தாமதியாது தலையிட வேண்டும் என்பதே இந்திய ஆளும் வர்க்க நிலைப்பாடாகும் .

அமெரிக்கா, யப்பான் ,இந்தியா என்பன இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ந்து சமாதானம் ஏற்படுவதற்காக முயற்சி செய்கிறார்களா? அல்லது தத்தமது பொருளாதார அரசியல் ராணுவ ஆதிக்கங்களுக்காக முனைந்து நிற்கிறார்களா? என்பதை இவர்களது சொல்லாலும் செயலாலும் தெரிந்து கொள்ள முடிகின்றது என்பதே உண்மையாகும்.

### பேச்சுவார்த்தை...

6ம் பக்க தொடர்ச்சி..

செயற்படும் சக்திகள் பற்றிய எச்சரிக்கை உணர்வுடனும் மறுபுறம் நியாயமான தீர்வு பற்றிய தெளிவுடனும் நிலைக்கக் கூடிய் அமைதிக்கான வேட்கையுடனும் விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் செயற்பட வேண்டும் என்பதை அமைதியும் சமூக நீதியும் வேண்டி நிற்கும். சகலரும் இருதரப்பினரிடமும் வற்புறுத்த வேண்டும். இது அரசாங்கம் பற்றியும் புலிகள் பற்றியும் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் அக விருப்பு வெறுப்புக்கு அப்பாலான சமாதானம் பற்றிய யதார்த்தம் சார்ந்த விடயமாகும்.

### சர்வதேச பாது...

1ம் பக்க தொடர்ச்சி.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு என்ற கவனத்துடனான இராணுவ நடவடிக்கைகளும் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. புலிகள் இயக்கம் ஆயுதங்களை சேகரிப்பதாகவும், புதிய இராணுவ முகாம்களை அமைத்து வருவதாகவும் திருகோணமலை துறை முகப்பகுதிக்கு புலிகள் இயக்கத்தால் ஆபத்திருப்பதாகவும் ஜே.வி.பியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஏனைய இனவாத சக்திகள் கூக்குரலிட்டு வருவதை பற்றி ஐ. தேசியக் கட்சி அரசாங்கம் அலட்டிக் கொள்வதாக இல்லை.

சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலை மீறி புலிகள் இயக்கம் எதனையும் செய்ய முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதே அவ்வாறு அலட்டிக் கொள்ளாதற்கு காரணமாக இருக்கலாம்.

எனவே தமிழ்மக்களும் சமாதான விரும்பிகளும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை வரவேற்பது மட்டுமன்றி, அதன் உள்ளார்ந்த இராணுவ நோக்கங்களையும் உற்றுநோக்கி அவற்றுக்கு எதிராக தொடர்ந்தும் போராடுவதன் மூலம் சமாதான வழியில் நிரந்தர சமாதானத்தையும் நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்பதை உணர்தல் வேண்டும். ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாத அடிப்படையை கொண்ட தமிழ்மக்களுக்கு எதிராக இன அழிப்பு யுத்தத்தை தொடக்கி வைத்து தொடர்ந்தும் யுத்தத்தை நடத்திய கட்சி என்பதை மறந்து, அதன் முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்ப்பு நிலைப்பாட்டை மறந்து அதன் சமாதான முயற்சிகளில் ஒரேயடியாக மயங்கி விடலாகாது, சமாதானத்தை வற்புறுத்தி அரசியல் தீர்வுக்கு கைகொடுக்கும் அதேவேளை அதன் மறுபக்கத்தைக் கண்டு கொள்வதும் மக்களுக்கு அவசியமாகும்.

### ஏகாதிபத்தியமும்

7ம் பக்க தொடர்ச்சி..

சந்தையிடமிருந்து பூரணமான முறிவும் தமது மக்களது தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் தமது சொந்த வளங்களின் அடிப்படையில் பொருளாதாரப் புனர்நிர்மாணம். வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின், சீவனோபாயத்தையே பிரதான அம்சமாகக் கொள்வது.

மாஓ காலத்துச் சீனம் மேற்குறிப்பிட்ட முன்மாதிரியால் அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாட்டை மோசமான வறுமையினின்று தூக்கிவிட இயலும் என்று காட்டிய ஒரு உதாரணம். இன்னொரு உதாரணம் வேண்டுமாயின் ஜனநாயக கம்பூச்சியாவைக் கொள்ளலாம். ஜனநாயக கம்பூச்சியா மேற்குறிப்பிட்ட முன்மாதிரியை ஓரளவு தீவிரத்துடன் பிரயோகித்துச் சில ஆண்டுகட்குள்ளேயே கணிசமான பொருளாதார முன்னேற்றத்தைக் காண்பதில் வெற்றி பெற்றது. கிழக்கிலும் மேற்கிலும் கம்பூச்சியாவுக்கு எதிரான கடும் பிரசாரம் மேற்கொள்ளப்பட இதுவே பிரதான காரணம் என்று யான்மிர்டால் கணிப்பிடுகிறார்.

'எனினும் ஜனநாயக கம்பூச்சியா ஏகாதிபத்திய முறையினின்று கணிசமாக அதிகளவில் அடிப்படையான முறிவை ஏற்படுத்திக் கொண்டது. ஜனநாயக கம்பூச்சியா தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு உலகை வெளியே நிறுத்திவிட்டது பற்றி உலக ஊடகங்கள் ஆத்திரமடைந்தன. இதுஅறிவு பூர்வமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அபிவிருத்திக்கான மாற்று வழி. நடைமுறை அனுபவத்தின் பெரும்பகுதி நிரூபித்திருப்பது ஏதெனின், முதலாளியத்தின் சுதந்திர வர்த்தகர்கள், சமூக ஜனநாயகத்தின் அயல் உதவி ஊழியர்கள், இருதரப்பு உதவியைப் பரிந்துரைக்கும் சோவியத் சார்புப் பேச்சாளர்கள் ஆகிய ஏகாதிபத்திய வாதச் சித்தாந்தக்காரர் எல்லாரும் பாராட்டிப் பேசுவன யாவும், விலக்கின்றி, ஏழை விவசாயிகளை மேலும் தோலுரிக்கிற வழிகள் தாம். ஏகாதிபத்தியத்தின் (அது மேலை முதலாளியத்தினதாயினும் கீழை ஏகாதிபத்தியத்தினதாயினும் சமூக ஜனநாயக மாறுவேடம் பூண்டதினது ஆயினும் அதன்) நிபந்தனைக் குட்பட்டு எந்தவொரு மூன்றாமுலக நாடுமே தனது வெகுசனங்கட்கு மேலும் மோசமான அவலத்தை விட எதையும் பெற்றுத்தந்ததில்லை. மேட்டுக்குடிகளும் முதலாளிகளும் தரகு முதலாளியக் கம்யூனிஸ்ற்றுக்களும் லாபமீட்டியுள்ளனர். உலகளாவிய முறையில் ஒட்டுமொத்தமான வறுமைப்பாடு தொடர்ந்து வந்துள்ளது. மூன்றாமுலகைப் பொறுத்தவரை வறுமையினின்று மீண்டெழுவதற்கு இந்த முறையுடன் முறிவை ஏற்படுத்துவதை விட வேறு வழியில்லை. தம்மைத் தனிமைப்படுத்தல், எல்லைகளை அடைத்தல், வலிமையைக் கட்டியெழுப்புதல்.'

சீவனோபாய அடிப்படையிலான முன்மாதிரிகள் தம்மளவிற் பிரச்சனைக ஏற்றவையல்ல, குறிப்பாகப் பொருளாதார விருத்தியை ஒரு மட்டத்திற்கு மேலாகக் கொண்டு போவதில் பிரச்சனைகள் உள்ளன. இங்கு சீனாவும் ஒரு உதாரணமாகிறது. எவ்வாறாயினும், ஏகாதிபத்திய முன் நிபந்தனைகட்குட்பட்டுச் செயற்படும் வரை, மூன்றாமுலகில் எந்தவொரு நாடும் தனது வெகுசனங்கட்கு மேலும் மோசமான அவலத்தைவிட வேறெதையும் சாதித்ததில்லை என்று மிர்டால் வலியுறுத்தியிருப்பது சரியானதே, மூன்றாமுலக நாடொன்று தன் விடுதலையை வென்று விருத்தியடைவது எவ்விதம் என்ற கேள்விக்குத் திட்டவட்டமான நல்ல மறுமொழி எதுவும் இல்லை. எனினும் அதை ஏகாதிபத்திய முன்நிபந்தனைகளின் அடிப்படையிற் செய்ய இயலாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதற்கும் பெண்களுக்கும் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்குமுள்ள உறவென்ன? ஏகாதிபத்தியத்தின் அபிவிருத்திக்கான முன்மாதிரி பெண்களைப் பொறுத்தவரை பேரபாயமான விளைவுகளை உள்ளடக்கியிருக்கிறது என்பதே இக் கேள்விக்கான விடையாகும். இதன் கருத்து, சீவனோபாய அடிப்படையிலான முன்மாதிரி தானாகவே பெண்களின் விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்பதல்ல. இங்கு நாம் மீண்டும் சீனாவை நோக்கலாம். எனினும் மறுக்க இயலாத ஒரு உண்மை உண்டு. ஆணாதிக்கச் சக்தியுடன் இணைந்த ஏகாதிபத்தியம் அபாயகரமானது.

### பேரினவாத..

1ம் பக்க தொடர்ச்சி...

பொது ஜன ஐக்கிய முன்னணி அதிகாரப் பரவலாக்கலை ஆதரிப்பதாக கூறினாலும் அதன் உறுப்பினர்கள் சிலர் ஜே.வி.பியின் பாத யாத்திரையில் கலந்து கொண்டுள்ளனர். இதனால் பேரினவாதம் சிங்கள மக்கள் மத்தியில் இயக்கமாக்கப்படுகிறது. இதன் விளைவு சமாதான முயற்சிகளை முடக்குவதாகவே இருக்கும்.

இதற்கு. எதிராக சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதை ஆதரிக்கும் அனைத்து சக்திகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பிரதானமாக இடதுசாரிகளும் தமிழ் அழைப்புகளும், சமாதானத்துக்கு ஆதரவான பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற இந்த கால கட்டத்தில் அம்முயற்சிகளை பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் இன்னொரு கட்டமாகக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலிருந்து இடதுசாரி சக்திகள் பின்வாங்க முடியாது.

தேச பக்தி என்ற பேரில் ஜே.வி.பி வளர்க்கும் பேரினவாதத்தை அம்பலப்படுத்துவதும், ஜே.வி.பி இடதுசாரி கட்சியல்ல என்பதை அம்பலப்படுத்துவதும் அவசியமாகிறது.

எனவே சரியான திட்டமிட்ட வேலைத் திட்டங்களின்றி பேரினவாதத்தை தோற்கடிக்க முடியாது. என்பதை விளங்கிக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம். உண்மையான இடது சாரிகளையும் மாக்சிச லெனின் சக்திகளையும் நிராகரித்து வரும் பிற்போக்குவாத சக்திகள் இனவாத ஜே.வி.பியை ஒரு இடதுசாரிக் கட்சியாகக் காட்டித் தமது பிற்போக்குத் தனங்களையும் பாதுகாத்துக் கொள்கின்றனர் என்பதும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

### தோழர் கார்த்திகேசனின்

11ம் பக்க தொடர்ச்சி..

ஆவார். இவர் இப்போதும் தன்னை மா.லெ.வாதி என்றும் கூறிக்கொள்பவர். ஆனால் அவரது உள்ளம் முன்பிருந்தே திரிபுவாதிகளின் பக்கத்தில் தான் இருந்து வந்துள்ளது அத்தகையவர் கொழும்பில் இதுவரை மௌனமாக இருந்துவிட்டு சில சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுடனும் திரிபுவாதிகளுடனும் இணைந்து நினைவு நாள்களை ஞாபகப்படுத்த முற்பட்டிருப்பது தற்செயலான ஒன்றல்ல. சிலவேளை தேர்தல் நோக்கமும் இருக்கலாம். அல்லது பிழைப்புத் தேடுவதாகவும் இருக்கலாம். அதனைத் தாரளமாகச் செய்யட்டும். ஆனால் தோழர் கார்த்திகேசனை திரிபுவாதிகளின் மடியில் கொண்டு சென்று இருத்தாமல் விட்டால் போதுமானதாகும். ஐ.ஆர். அரியரத்தினத்தை கார்த்திகேசனின் நினைவுக் கூட்டத்திற்கு தலைமை தாங்க வைத்ததன் மூலம் திரிபுவாத நிலைப்பாடும் கார்த்திகேசனின் நிலைப்பாடும் ஒன்றே எனக் காட்ட இந்தக்குள்ள நரிக்கூட்டம் முயலுவதையே காணமுடிகிறது. நாட்டின் பிரச்சினையிலும் இன்றைய பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையிலும் திரிபுவாத நிலைப்பாடு வேறு மாக்சிச லெனினிசவாதிகளின் நிலைப்பாடு வேறு என்பதை மக்கள் புரிந்து கொண்டால் போதுமானதாகும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

படிப்பகம்